1277

# தமிழ் நாடு
# சட்ட மன்றப் பேரவை
# நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

VOL 13 FEB-1989 NO 12

144354

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, பிப்ரவரி 18, 1989–தொகுதி 3–எண் 2
Saturday, the 18th February, 1989–Volume 3–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

18—2—1989.


பக்கங்கள்.

**1. கவன ஈர்ப்பு—**

சர்க்கரை ஆலைகள் கரும்பு விலையை உயர்த்தாததால் கரும்பு உற்பத்தியாளர்கள் படும் அவதி குறித்து 129—131

**2. தகவல் கோரல்—**

(அ) ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை 131

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் கள் 131,138 3,9—10

(இ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் காலரா நோய் பரவுதல் குறித்து 132

(ஈ) பிரதமரின் சென்னை வருகையையொட்டி இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம் 132—133

(உ) இந்தி மொழி பற்றிய பிரதமரின் பேச்சு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் தொலைக்காட்சி படச்சுருளைத் தருவித்தல் 133

(ஊ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து 133—137, 138—140

**3. சட்ட முன்வடிவுகள்—**

(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 140—189

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் 140,184—189

* திரு. சி. கோவிந்தராஜன் 142—148

* திரு. ஆர். சிங்காரம் 148—155

திரு. எஸ். டி. உகம்சந்த் 156—169

திரு. பெ. சு. திருவேங்கடம் 170—177

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் 177—184

பக்கங்கள்.

(ஆ) மாநகராட்சிச் சட்டங்கள் (தனிவகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு, 1989 — 189—236

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் 189, 236—240, 246

திரு. உ. ரா. வரதராசன் — 190—196

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் — 196—203

திரு. பி. எச். பாண்டியன் — 203—205

திரு. பி. என். வல்லரசு — 205

திரு. எம். அப்துல் லத்தீப் — 205—212

திரு. சா. கணேசன் — 213—215

* திரு. கோ. பூவராகன் — 215—220

திரு. எஸ். பால்ராஜ் — 220—224

* திரு. பொன் விஜயராகவன் — 224—229

* திரு. எஸ். திருநாவுக்கரசு — 229—234

4. அமைச்சரின் அறிக்கை—

பிள்ளைப் பேறு மருத்துவத்தில் பயன்படும் ஒரு மருந்தில்-"எயிட்ஸ்" வியாதிக்கான அறிகுறிகள் இருப்பதால் அம்மருந்து தடை செய்யப் பெறுவது குறித்து — 256—258

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 258—259

144354
D
V21,3/1:89

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, பிப்ரவரி 18, சனிக்கிழமை.

மாசி 7, விபவ, திருவள்ளுவர் ஆண்டு—2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

ஒப்புரவு எனும் பெருங்குணத்தால் உலகம் வாழ வேண்டும் என்று விரும்பும் பேரறிவாளரிடத்திலே உள்ள செல்வம், ஊரார் விரும்பி அருந்தும் நீரைக் கொண்ட ஊருணி, என்றும் நீரால் நிறைந்தாற் போன்றது.

1. கவன ஈர்ப்பு.

சர்க்கரை ஆலைகள் கரும்பு விலையை உயர்த்தாததால் கரும்பு உற்பத்தியாளர்கள் படும் அவதி குறித்து.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி சர்க்கரையின் விலையை ரூ. 510-லிருந்து ரூ 5-25-க்கு ஏற்றியும், பரிவர்த்தனை சந்தைக்கு 50 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காட்டிற்கு ஒதுக்கீடு அதிகமாக்கியும், சர்க்கரை ஆலைகள் கரும்பு விலையை ஏற்றாததாலும், ஆள் சம்பளம், உர விலை ஏற்றத்தினாலும் கரும்பு உற்பத்தியாளர்கள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(திரு கோ. சி. மணி) [1989 பிப்ரவரி 18

**அறிக்கை.**

மைய அரசு தான், ஒவ்வொரு ஆண்டும், கரும்பு (கட்டுப்பாடு) சட்டம் 1966-ன் கீழ் கரும்பிற்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதன்படி நடப்பு 1988-89-ஆம் ஆண்டுக்கு மைய அரசு 8.5 விழுக்காட்டிற்கு சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 190 என்று விலை நிர்ணயம் செய்துள்ளது. இருப்பினும் மாநில அரசு, கரும்பு பயிர் செய்வதற்கான செலவினங்களைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் நலனைக் கருதி, நடப்பு 1988-89 ஆம் பருவத்திற்கு கரும்பிற்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 220 வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இந்த விலை 8.5 விழுக்காட்டிற்கு சர்க்கரை கட்டுமானமும் அதற்குக் குறைவாகவும் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்குக் கிடைக்கும். மேலும் கூடுதலாகக் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 விழுக்காட்டிற்கு அதிக சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு, குவிண்டால் ஒன்றுக்கு 25.6823 பைசா கூடுதலாக விலை கிடைக்கும்படி ஆணை வெளியிட்டுள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளிடமிருந்து விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 238-லிருந்து ரூ. 274 வரை கிடைக்கும். கரும்பின் விலை நிர்ணயம் செய்யும்போது சர்க்கரை ஆலைகளின் நிதி நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சர்க்கரை ஆலைகள் சங்கம், சர்க்கரை ஆலைகளின் சிரமங்களை விளக்கி விலை உயர்த்தும்போதெல்லாம் விலை உயர்த்த வேண்டாமென்று கோரிக்கை விடுகின்றன. இருப்பினும் மாநில அரசு, விவசாயிகளின் நலனைக் கருதி, கரும்பிற்கு கட்டுபடியாகக்கூடிய விலையை பரிந்துரை விலையாக அறிவித்து ஆணை வெளியிடுகின்றது. சமீபத்தில் நடப்பு 1988-89 ஆம் ஆண்டிற்கு, மைய அரசு கரும்பிற்கு அடிப்படை விலையாக ரூ 190-லிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 195 ஆக உயர்த்தியுள்ளது. அதைக் கருத்தில் கொண்டு மாநில அரசு தான் அறிவித்த பரிந்துரை விலையை டன் ஒன்றுக்கு ரூ. 220-லிருந்து ரூ. 225 ஆக உயர்த்தலாமா என பரிசீலித்து வருகிறது.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டில் சர்க்கரை விலையை ஏற்றியும், கட்டுப்பாட்டு ஒதுக்கீட்டிற்கு 50 விழுக்காடு என்று இருந்ததை 55 விழுக்காடாக ஆக்கியும், சர்க்கரை ஆலைகளுக்குச் சலுகை வழங்கியும், மைய அரசு 1987-88 ஆம் ஆண்டில் ஒரு டன்னுக்கு ஏற்றிய 5 ரூபாயைச் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக்



1989 பிப்ரவரி 18] [திரு. மா. மணிமாறன்]

கொடுக்காமல் இருந்ததை விவசாயிகள் கடந்த அரசுக்குப் பல முறை வேண்டுகோள் விட்டும், நேரடியாகப் பார்த்தும், கேட்டும், விவசாயிகளுக்கு உதவாத நிலையில் இப்போது பொறுப்பு ஏற்றிருக்கின்ற கலைஞர் அரசும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கொடுப்பதற்கு ஆய்வு செய்வதைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து, இது போன்ற கவன ஈர்ப்புக் கொடுப்பவர்கள் வினாவைத்தான் எழுப்பலாமே தவிர, வினா இல்லை என்று சொன்னால் விட்டு விடலாம்; அதனால் கண்டிப்பாகக் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

## 2. தகவல் கோரல்.

### (அ) ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை.

**திரு. வே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு செய்தித் தாளில் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளுடன் கலந்து பேசி உணவுப் பண்டங்களின் விலைகளையெல்லாம் குறைப்பதாகச் செய்தித் தாளில் அறிந்தேன். அவர்களும், அவைகளுடைய முதலாளிகளெல்லாம் ஒன்று சேர்ந்து குறைப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதை எப்பொழுது குறைக்கப் போகிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எந்த அடிப்படையில் தாங்கள் எழுப்புகிறீர்கள் என்று சொல்ல முடியுமா? இப்படி எழுப்புவதற்கு அவையில் இடமில்லை. தனியாகக் கேட்க வேண்டும்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

* **திரு. ஆர். சிங்காரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது குறித்துப் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் ஆய்வில் உள்ளது. அதுபற்றி அறையிலே கேட்க வேண்டும்.

[1989 பிப்ரவரி 18

**(இ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் காலரா நோய் பரவுதல் குறித்து.**

* **திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் உயிரோடு சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு மிகப் பெரிய பிரச்சினையை இந்த அரசினுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். மழை இல்லாத காரணத்தினால் ஏற்பட்டுள்ள வறட்சியையொட்டி, காலரா நோய் மிகக் கடுமையாகப் பரவி குருங்குளம், பஞ்சாத்தி, சைரி வயல் போன்ற அறந்தாங்கி தொகுதியிலுள்ள சில கிராமங்களில் ஏறக்குறைய 35 பேர்களுக்கு மேலே பாதிக்கப்பட்டு, அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதில், ஐந்து பேர் இறந்து போனதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இது மேலும் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது புதுக்கோட்டை மாவட்டத்திலே மட்டும் அல்ல. வறட்சியாக இருக்கின்ற மற்ற மாவட்டங்களிலேயும் வெயில் கொடுமையாலும், தண்ணீர் இல்லாததாலும் இப்படி பரவ வசதியிருக்கிறது. நிறைய பரவும் நிலை இருக்கிறது. இதுகுறித்து அரசு அளவிலே விசாரித்து அரசு ஒரு அறிக்கையைத் தர வேண்டும். மருத்துவர் குழுவின் மூலமாக போதிய மருந்துகள் கொடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காலராவால் பாதிக்கப்பட்டிருக்கிற அறந்தாங்கி, இன்னும் மற்றப் பகுதிகளில் உள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அரசை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசு அது தொடர்பாக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(ஈ) பிரதமரின் சென்னை வருகையையொட்டி இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.**

**திரு. கோ. வீரையன் :** தலைவரவர்களே, இந்த அவையிலே கடந்த 15-ந்தேதி அன்று நடைபெற்ற விவாதத்தின்போது, மறைமலை நகருக்கு நம்முடைய இந்திய நாட்டின் பிரதமர் வந்தபோது இடிக்கப்பட்ட குடிசைகள் சம்பந்தமாக விசாரித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் அறிக்கை எதுவும் வைக்கப்படவில்லை. இன்னும் ஒருநாள் தான் அவை நிகழ்ச்சிகள் இருப்பதால் என்றைக்கு அறிக்கை வைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.



1989 பிப்ரவரி 18] (திரு. உ. ரா. வரதராசன்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவரவர்களே, விவரம் சேகரிக்கப்படுகின்ற காரணத்தால் முழு விவரங்களும் கிடைத்த பின்னால்தான் அறிக்கை வைக்கப்படும்.

**(உ) இந்தி மொழி பற்றிய பிரதமரின் பேச்சு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் தொலைக்காட்சி படச்சுருளைத் தருவித்தல்.**

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்திப் அவர்கள் பேசும்போது, தொலைக்காட்சியிலே பிரதமர் பேசிய பேச்சை, தொலைக்காட்சி ஃபிலிமை இங்கே தருவிப்பதாகச் சொல்லப்பட்டது. அது தருவிக்கப்படுமா ? எப்போது தருவிக்கப்படும் என்பதை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தச் செய்தி தொலைக்காட்சிக்கு எழுதப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் இங்கே வைக்கப்படும். அதே நேரத்தில் தொடர்புடைய உறுப்பினர் அவர்களின் பதிலும் பெற்று வைக்கப்படும்.

**(ஊ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணிகளின் பெயர்கள் குறித்து.**

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இந்த அவையிலே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், குழுக்கள் பற்றித் தாங்கள் அறிவித்தீர்கள். அங்கீகரிக்கப்பட்ட குழுவிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றெல்லாம் சொன்னீர்கள். அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. இரண்டாவதாக, தமிழ்நாடு ஜனதா என்று சொன்னீர்கள். தமிழ்நாடு ஜனதா என்றால் அந்தக் கட்சி எப்படி இயங்கிக்கொண்டிருக்கிறது ; அதற்கு யார் தலைவர் என்பது தெரியவில்லை. காரணம் ஜனதா கட்சி, ஜனதா தளுடன் இணைந்துவிட்டது. அந்தக் கட்சியிலும் இரண்டு தலைவர்கள், அதாவது இரண்டு கட்சிகள் இருப்பதாக வெளியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றுக்கு இந்துபாய் பட்டேல் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். இன்னொன்றுக்கு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தேவ கௌடா தலைவர் என்று சொல்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 பிப்ரவரி 18

அடுத்ததாக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (எல்) என்று சொன்னீர்கள். அந்தப் பெயரில் இந்தத் தேர்தலில் யாரும் போட்டியிடவில்லை. அகில இந்தியாவில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவராக இப்ராகிம் சுலைமான் சேட் இருக்கிறார்கள். அந்தக் கட்சி மாநிலக் கட்சி அல்ல; அகில இந்தியக் கட்சி. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய வினாவை மட்டும் எழுப்பினால் விடை சொல்ல வசதியாக இருக்கும். விளக்கம் தேவையில்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** தேர்தல் கமிஷன் தருகின்ற சட்டத்தில் கட்சிகள் பற்றி வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு கட்சி வேட்பாளருக்கு அங்கீகரிக்கப்பட்ட சின்னம் இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் சார்பில், அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தில் ஒரு வேட்பாளர் போட்டியிட்டால் அவர் அந்தக் கட்சியின் சார்பிலேதான் பேரவையில் செயலாற்ற முடியும். வேறு கட்சியின் சார்பாகச் செயலாற்றினால் Anti-defection law. ' Reservation of Symbols order அந்த இரண்டையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து அனைவரும் அமரவேண்டும். தொடர்புடைய உறுப்பினர் மட்டும் விளக்கம் அளிக்கலாம்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா அவர்கள் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? வினா சுருக்கமாக சரியாக இருந்தால்தான் விடை விரிவாக இருக்கும். வினா விரிவாக இருந்தால் விடை சுருக்கமாகத்தான் இருக்கும். என்ன தேவை என்பதைச் சுருக்கமாகச் சொன்னால் உடனடியாகப் பதில் கிடைக்கலாம். ஆகவே, அருள்கூர்ந்து உங்களுக்கு என்ன தேவை என்பதை மட்டும் கூறுங்கள்.



1989 பிப்ரவரி 18]

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அணியினர் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாகத்தான் போட்டியிட்டார்கள். எனவே, அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களாகத்தான் கருதப்பட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாகத்தான் இங்கே உட்கார வேண்டும். இல்லாவிட்டால் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் இந்த அவையிலே செயலாற்றத் தகுதியற்றவர்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவரவர்களே, வெளியிலே உள்ள கட்சிகளைப் பற்றி சட்டமன்றத்திலே பேசுவது முறையல்ல. தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்றத்திலே வருகிற உறுப்பினர்கள் வந்தவுடன் பேரவைத் தலைவருக்கு தாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் எழுதித் தருகிறார்கள்.

(முற்பகல் 9-10)

ஒரு பெயரோடு—அது எந்தப் பெயராக வேண்டுமானாலும் இருக்கலாம்—எழுதித் தருகிறார்கள். யார், யார் ஒரே கட்சியைச் சேர்ந்தவராக எழுதித் தருகிறார்களோ அந்த அடிப்படையில் அந்தக் குழு ஏற்கப்படுகிறது. அந்தக் குழுவை அந்தப் பெயரிலே ஏற்பதற்குரிய முழு அதிகாரமும் அவைத் தலைவருக்கு உண்டு. அப்படி அந்தக் குழுவிலே இடம் பெற்றவர்கள், இடம் பெற்றதாகச் சொல்லப்படுகிற செய்தியை அந்தக் குழுவிலே உள்ளவர்கள் மறுத்தால்தான் அது கேள்விக்குரியது. இல்லையானால் சட்டமன்றத்திற்கு முதன்முதலாக வருகிறபோது ஒவ்வொரு உறுப்பினரும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக எழுதித் தரப்படுகிறதோ அதை மறுப்பதற்கு, இன்னொரு கட்சி, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் வேறு பெயரில் கொடுத்திருக்கிறார் என்று சொல்வதற்கு ஏதேனும் காரணம் இருந்தால் தவிர அந்தந்தக் கட்சிகள் அந்தந்தப் பெயரிலேயே ஏற்கப்படுகின்றன.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவான விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமதுடைய காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா மாண்புமிகு திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஒரு அகில இந்தியக் கட்சி, அது ஒரு தேசியக்

(திரு. எம். அப்துல் லத்தீப்) [1989 பிப்ரவரி 18

கட்சி என்று ஒப்புக்கொண்டு பேசியதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நோக்கில் தவறான கருத்தின் அடிப்படையில் அவர் இங்கே பேசியிருப்பது ஏற்புடையதல்ல என்று நான் கருதுகிறேன்.

திரு. இப்ராகிம் சுலைமான் சேட் அவர்கள் தலைமை ஏற்று நடத்துகிற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கூட தேர்தல் கமிஷனால் அகில இந்தியக் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கேரளாவில்தான் அது ஒரு அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கேரளாவில்தான் அதற்கு ஏணிச் சின்னம் தேர்தல் ஆணைக் குழுவால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் தேர்தல் ஆணைக் குழுவிடமிருந்து அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. நம்முடைய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (ல்) என்று எப்படிக் குறிப்பிடலாம் என்ற ஒரு கேள்வியை அவர்கள் எழுப்பியதன் வாயிலாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தனித் தன்மையிலே அவருக்கு இருக்கிற அக்கறையை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த நேரத்தில் கேரளாவில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எப்படிச் செயல்பட்டு அது இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்று இன்றைக்குக் குறிப்பிடப்படுகிறதோ அதே அடிப்படையில்தான் இன்றைக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (லத்தீப் பிரிவு) என்ற அடிப்படையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்று குறிப்பிடப்படுகிறது.

இந்திய யூனியன் என்ற சொல் யாருக்கும் முறைப்படுத்தி அல்லது சட்டப்படியாக உரிமையாக்கப்பட்டிருக்கிற சொல் அல்ல. இன்னும் சொல்லப்போனால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி என்று அவர்கள் சொல்கிறார்கள். வேறு கட்சிகளும் கூட இந்திய தேசிய காங்கிரஸ் என்று சொல்கிறார்கள். தமிழகமும் இந்தியாவில்தான் இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் மறந்துவிட்டிருப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. எனவே தமிழகத்தில் இருக்கக்கூடிய நாங்கள் இந்திய யூனியனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதற்குரிய உரிமை படைத்தவர்களாகத் தான் இருக்கிறோம். எனக்கிருக்கிற மகிழ்ச்சி எல்லாம் நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் முஸ்லீம் லீக் கட்சிக்கு முறையான ஒரு வக்காலத்து வாங்கக் கூடிய வக்கீலாக மாறியிருப்பது தான். அவர்களுடைய பொதுச் செயலாளர் திரு. கே. என். சிங் அவர்களும், மறைந்த அக்கட்சியின்



1989 பிப்ரவரி 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

பொதுச் செயலாளர் திரு. வாசுதேவ பணிக்கர் அவர்களும் முஸ்லீம் லீகை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி இருக்கும்போது நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இங்கே அருள்கூர்ந்து முஸ்லீம் லீகை ஏற்றுக்கொண்டிருப்பதற்கும், முஸ்லீம் லீக் தேசிய இயக்கம் என்பதை அவர்கள் இங்கே வலியுறுத்திச் சொல்லியிருப்பதற்கும் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சபாநாயகருடைய தீர்ப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டு இருக்கிறது. வெளியே என்ன நடக்கிறது என்பது வேறு. ஆனால் சபாநாயகர் அவர்கள் இங்கே முறையாக ஒரு தீர்ப்பு வழங்கி விட்ட பிறகு அதைப்பற்றி மேலும் விமர்சனம் செய்து கொண்டிருந்தால் எங்களுக்கும் அந்த 'வாய்ப்பு' வழங்கப்பட வேண்டும். அதற்குப் பதில் சொல்ல எங்களுக்கும் தெரியும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொண்டு நீங்கள் ஏற்கெனவே இதைப்பற்றி தீர்ப்பு வழங்கி இருப்பதால் நான் இதுகுறித்து அதிகமாகப் பேச விரும்பவில்லை என்று கூறி அமர்கிறேன்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா அவர்கள் ஜனதா கட்சி பற்றிச் சந்தேகத்தைத் தெரிவித்தார்கள். யார் தலைவர் என்று கேட்டார்கள். அதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே நாங்கள் சொல்லக்கூடியது திரு பொன் விஜயராகவன் அவர்கள்தான் இங்கே தமிழக ஜனதா கட்சியினுடைய தலைவர். நாங்கள் இரண்டு அங்கத்தினர்கள் பதவி ஏற்றிருக்கிறோம். அவர்கள் யாரோ திரு. இந்துபாய் பட்டேல் என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். திரு. இந்துபாய் பட்டேலுக்கும், எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தமிழக ஜனதா கட்சி தனியாகச் செயல்படுகிறது. தேர்தல் கமிஷன் சொல்லக்கூடிய முறைப் பிரகாரமும் நாங்கள் இந்தத் தேர்தலிலே, அதாவது 1.6 சதவிகிதம் வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆகையால் தேர்தல் கமிஷனுக்கு, ரிஜிஸ்டர்ட் பார்ட்டி என்பதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருக்கிறோம். ஆகவே, அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை.

[1989 பிப்ரவரி 18

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.**

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றக் கூட்டம் வருகிற திங்கட்கிழமை யோடு, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதோடு முடிகிறது என்று கருதுகிறேன். நாங்க ளெல்லாம் பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எல்லாம் கொடுத்திருக்கிறோம் அதிலே பல, எந்த விதக் காரணமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தபால் வருகிறது. ஏதாவது காரணம் சொல்லியிருந்தால்கூட நாங்கள் புரிந்துகொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக உறுப்பினர்கள் விளக்கம் பெறவேண்டுமென்றால், அருள்கூர்ந்து என் அறைக்கு வந்து கேட்கவேண்டும். அவையிலே இதை எழுப்பக்கூடாது . . . . .

**திரு. என். பழனிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, மறுக்கப்பட்டால் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுக்கப்பட்டால் அதைப் பற்றி என் அறையில் வந்து விளக்கம் தெரிந்துகொள்ளவேண்டும். (குறுக்கீடு) இதில் நீங்கள் பேசுவது அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டியிருக்கும்.

**(இ) சட்டமன்றப் பேரவையிலுள்ள கட்சிகள் மற்றும் அணி களின் பெயர்கள் குறித்து—தொடர்ச்சி.**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக் கொறடா அவர்கள் அகில இந்திய ஜனதா தளம், மாநில ஜனதா கட்சி பற்றி விளக்கம் கேட் டார். ஏற்கெனவே அகில இந்திய ஜனதா கட்சி, ஜனமோர்ச்சா கட்சி, லோக் தள் அஜித் சிங் கட்சி, காங்கிரஸ் (எஸ்) ஆகிய எல்லோரும் சேர்ந்து பெங்களூர் மாநாட்டிலே ஒன்றாக இணைந்துவிட்டோம். இணைந்து, ஜனதாதளம் என்று வைத் திருக்கிறோம். தளம் என்றால் கட்சி என்று பெயர். 'பார்ட்டி' என்று அதற்குப் பெயர். ஆக அவர் கேட்ட விளக்கமானது தமிழ்நாடு ஜனதா கட்சி . . . .



1989 பிப்ரவரி 18]

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** உங்களைப்பற்றித்தான் கேட்டேன். தமிழ்நாடு ஜனதா கட்சி பற்றி அது 'சீனியர்' ஆக இருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** இப்போது மாற்றி விட்டார்கள். எங்கள் கட்சி அதைவிட 'சீனியர்' ஆகவே இருக் கிறது. ஏனென்றால் நாங்கள் அகில இந்தியக் கட்சி இப்போது தமிழ்நாடு ஜனதா கட்சி பற்றித்தான் விளக்கம் கேட்டார். திடு திப்பென்று இப்போது மாற்றி விட்டார்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** இல்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** இல்லை என்று சொல் கிறார். தலைவர் சொல்லட்டும், ஒப்புக்கொள்கிறேன். உறுப் பினர் சொன்னால் ஒத்துக்கொள்வேனா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து உறுப்பினர் கள் உட்கார்ந்தால் நான் விளக்கம் சொல்வேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, Official declaration .........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து உங்க ளுடைய வினாவை எழுப்பி விட்டீர்கள். ஆனால் அதற்கு நீண்ட விவாதம் தேவையில்லை. உங்களுக்குத் தெரியாததல்ல. உங்க ளுடைய உணர்வுகளை மதித்துத்தான் வாய்ப்பு அளிக்கிறேன். அந்த உணர்வுகளை மிகுதியும் பயன்படுத்திக் கொண்டால் தடை செய்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடும். அருள் கூர்ந்து நீங்கள் என்ன வினா எழுப்பினீர்கள் என்று எனக்குப் புரிகிறது. மற்றவர்களுக்கும் புரிகிறது. பலர் விளக்கம் சொல்லி யிருக்கிறார்கள். (குறுக்கீடு) துணை வினாவா?

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** வினாவுக்குத் துணை யாகக் கேட்கிறேன். Thiru Latheef has been officially declared elected as a D.M.K Member from the Chepauk Constituency என்று பத்திரிகையிலே . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகைகளைப் படித்து ஆதாரங்களாகக் காட்டக்கூடாது என்று ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன் அப்படிப் படிப்பதாக இருந்தால் அவைத் தலைவ ருடைய முன் அனுமதி கேட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே கேட்டிருக்க வேண்டும். நான் இப்போது அனுமதிக்கவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அனுமதி கோருகிறேன். தமிழரசு பத்திரிகை, அறிவியல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இது தொடர்பாக ஒவ்வொரு நாளும் எனக்கு வருகின்ற செய்தியை அடிப்படையாகக் கொண்டு பேரவைத் தலைவர் முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் எழுந்து நிற்கும்போது, மற்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும். அதுதான் நம்முடைய மரபு. நீங்களும் எழுந்து நின்று கொண்டு, பிரச்சினையை எழுப்பக்கூடிய உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டிருப்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சபாநாயகர் பேசுகிறபோது, பேசி முடித்த பின்புதான் அமைச்சர்கூட பேசவேண்டும். அதுகூட மரபாக [illegible] வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, ஏற்கெனவே, கட்சிகளைப் பற்றி எனக்குக் கிடைத்த விவரங்களின் அடிப்படையிலே, முறையாக அவர்கள் கொடுத்த விவரங்கள் பேரவைத் தலைவருக்கு எந்த அளவுக்குத் தெரிவிக்கின்றன என்ற அடிப்படையிலே, நான் ஏற்கெனவே ஒவ்வொரு கட்சியைப் பற்றிய விவரங்களோடு அறிக்கை அளித்திருக்கிறேன். அந்தத் தீர்ப்பு இப்போதும் அப்படியே இருக்கிறது. இதற்குமேல் புதிய செய்திகள் அவ்வப்போது வந்தால் அவைகளைத் தெரிந்துகொண்டு நான் அவையில் உங்களுக்கு அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்போது நேரடியாக சட்ட முன்வடிவுக்கு வருவோம்.

(முற்பகல் 9-20)

### 3. சட்ட முன்வடிவுகள்.

**(அ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:



"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1989) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்ட நகராட்சிகள் திருத்த சட்ட முன்வடிவு இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அருள்கூர்ந்து திருத்தத்தை மட்டும் முன்மொழியவும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில நேரங்களில் நாம எந்த அவையில் இருக்கிறோம் என்பது மறந்து போய்விடுகிறது. (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"That the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1989 (L.A. Bill No. 1 of 1989) be circulated for eliciting public opinion."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள சட்ட முன்வடிவு குறித்தும், திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொடுத்துள்ள திருத்தம் குறித்தும் விவாதம் தொடர்கிறது. இங்கே 3 சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொன்றும் தனித்தனியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு சட்ட முன்வடிவிலும் 6 உறுப்பினர்கள் என்கிற அளவில் பேசுமாறும், ஒவ்வொருவரும் 5 மணித் துளிகளுக்குள் பேசி முடித்தால் மற்றவர்களுக்கும் நேரத்தைப் பகிர்ந்தளிக்க வாய்ப்பாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*15—2—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கே. ரமணி] [1989 பிப்ரவரி 18

**திரு. கே. ரமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக மசோதாவைப் பற்றி விவாதிக்கின்ற ஒரு நிலை இது. குறிப்பிட்ட நேரத்தில் ஓரளவுக்கு கட்டுப்படுத்தியுள்ள தாங்கள் நோக்கத்தைப் பரிந்தளிப்பது நியாயம், தவறு என்று சொல்லவில்லை. ஆனால் நிரந்தரமாக சட்டப் புத்தகத்தில் ஏறக்கூடிய ஒரு சட்டம் இது. இது சம்பந்தமாக விவரங்களை ஓரளவுக்குச் சொல்வதற்கு அனுமதிப்பதுதான் மரபு. அதுதான் சரியாக இருக்கும். இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு நாளைக்கு சட்டமாக அமையப் போகிறது. ஆகவே, 5 மணித் துளிக்குள் பேசி முடிக்க வேண்டுமானால், சட்ட முன்வடிவு வேண்டும் அல்லது வேண்டாம் என்றுதான் சொல்ல முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலை இங்கே சரியாக இருக்காது. இதைப்பற்றி சொல்லும்போது, ஏற்கெனவே இருந்த உரிமைகள் பறிக்கப்பட்டது பற்றியும் சில விவரங்களை இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. அதையும் தாங்கள் அருள்கூர்ந்து கவனத்தில் எடுத்துக்கொண்டு, பேசுவதற்கு 5 மணித் துளிகள் பற்றாது. 10 அல்லது 15 மணித் துளிகளாவது தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, இந்தச் சட்ட முன்வடிவு தொடர்பாக நீங்கள் பேசுகிறபோது நான் உங்களை உரியவாறு கவனித்து ஆவன செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவின் மீது எங்கள் கட்சியின் சார்பாக இதனை ஆதரித்து ஒருசில விவரங்களை இங்கே பேசலாம் என்று கருதுகிறேன். ஆரம்ப காலத்தில், இந்தச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில், 1920 ஆம் ஆண்டு '5 ஆண்டுக் காலம்' என்று சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 5 ஆண்டுக்காலம் என்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 3 ஆண்டில் வந்து நின்றுவிட்டது. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் 5 ஆண்டுகளை 4 ஆண்டுகளாகக் குறைத்தார்கள். பிறகு அதே ஆண்டு இறுதியில் என்று கருதுகிறேன். 4 ஆண்டுக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இதற்கு ஒரு அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்று கருதுகிறேன். 5 ஆண்டுக் காலம் என்று சொன்னால்—தேர்தல் நடைபெற்றது 1986 பிப்ரவரி மாதம், அநேகமாக 21 ஆம் தேதியோ அல்லது 20 ஆம் தேதியோ. 5 ஆண்டுக்காலம் என்று சொன்னால், 1991 ஆம் வருடம் வரை



1989 பிப்ரவரி 18] [திரு. சி. கோவிந்தராஜன்]

பதவிக் காலம் இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆனால் ஏற்கெனவே 1981-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு 1989 ஆம் வருடத்தோடு பதவிக்காலம் முடிவடைவதால் 1991 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி மன்றங்களில் பொறுப்பு ஏற்பவர்கள் நீடித்தால் மக்களைத் திரட்டுவதும், மக்களிடமிருந்து ஆதரவு பெறுவதும் கொஞ்சம் கஷ்டமாக இருக்குமென்று கருதியதால், இந்தப் பதவிக் காலம் குறைக்கப்பட்டதென்று நான் கருதுகிறேன். எனவே இது அரசியல் உள்நோக்கமுடையது. இப்படி சட்டத்தைத் திருத்திவிட்ட பிறகுகூட, தேர்தல்களை நடத்தவில்லை. அதற்காகப் பலவித கிளர்ச்சிகளை எதிர்க் கட்சிகள் செய்தன. நேற்றுகூடச் சொன்னார்கள், அரசாங்கம் தானாகவே தேர்தல்களை நடத்தியதென்று. இது சரியல்ல. இதற்காக ஓராண்டு கிளர்ச்சிகள் நடத்த வேண்டிய நிலைமைகள் இருந்தன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குப் பிறகு நிர்ப்பந்தத்தின்பேரில் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல்கள் நடைபெற்ற பிறகு, அதனுடைய விளைவு என்ன என்பதை நாடு அறியும். மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். பெருவாரியான நகராட்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகமும், மற்ற எதிர்க் கட்சிகளும்—காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்—வந்துவிட்ட பிறகு, ஆளுங் கட்சி நகராட்சிகள் மிகவும் குறைக்கப்பட்டு விட்டன. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், நேற்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே அறிவித்தார்களே, அவ்வாறு சட்டத் திருத்தங்கள், அரசு ஆணைகள் மூலமாக நகராட்சிகளுக்கு இருந்த அதிகாரங்களை எல்லாம் பறிக்கக்கூடிய உத்தரவுகளையும், சட்டத் திருத்தங்களையும் முந்தைய அரசு கொண்டு வந்தது. அப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களில் முக்கியமானது நகராட்சிகளுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பறிக்கக் கூடிய அளவிற்கு வந்ததாகும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வார்த்தைகளில் சொல்வதானால், உரிமைகள் மட்டுமல்ல, கழுத்தையே பறிக்கும் அளவுக்கு அரசு ஆணைகள் இருந்தன.

வரி முறையீட்டுக் குழுவிற்கு உள்ள அதிகாரம் நகராட்சி மன்றத் தலைவருக்கும், கவுன்சிலுக்கும் இருந்ததை அதிகாரிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு மாற்றப்பட்டது. 'ஏ' கிரேட் முனிசிபாலிட்டிகளில் டி.ஆர்.ஓ.வும், அதற்குக் கீழே உள்ள முனிசிபாலிட்டிகளில் ஆர்.டி.ஓ.வும் தலைவராகவும், பொதுப்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1989 பிப்ரவரி 18

பணித் துறையைச் சேர்ந்த ஓர் உதவிப் பொறியாளர், ஆணையர், இவர்தம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர்களாகவும் அந்தக் குழுவில் இருந்தாலும், இட்டத்தட்ட அதிகாரிகளின் கையில்தான் அந்த அதிகாரம் இருந்து வந்தது. அதுமட்டுமல்ல, வரியைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அநியாயமாக வரி போடப்பட்டிருக்கிறது என்று குழு கருதினால், அதைக் குறைக்க முடியாது. அதைக் குறைக்க வேண்டுமென்றாலும், 5 சதவிகிதத்திற்குமேல் குறைக்க முடியாது என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக் கூடிய அளவுக்கு இன்னும் பலவிதமான ஆணைகளும் பிறப்பிக்கப் பட்டன. இன்னும் முக்கியமானது, நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்ட நகராட்சிகள் சட்டம் 41 ஆம் பிரிவைத் திருத்தி, எந்த நகராட்சியாவது பொருளாதாரத்தில் ஸ்திரமற்ற நிலையில் இருக்கிறது என்று கண்டால், அந்த நகராட்சிகளைக் கலைக்கும் அதிகாரத்தை அரசு பெறும் அளவுக்கு செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளை ஒரு நொடிப் பொழுதில் கலைக்கும் அதிகாரத்தைப் பெறும் அளவுக்கு ஒரு ஷரத்து திருத்தப்பட்டது.

(முற்பகல் 9-30)

அது மட்டுமல்லாமல் பல அரசாணைகள் மூலம், சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே உட்கார வேண்டும், எந்தப் பக்கத்தில் உட்கார வேண்டும் என்பன போன்றவைகள் எல்லாம் குறிப்பிடப் பட்டன. நேற்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் பேசும்போது, இப்படிப்பட்ட அதிகாரப் பறிப்பு முழுவதும் மீண்டும் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவித்தார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். வரப்பட வேண்டும். காரணம், சட்டப்பூர்வமாக அந்த உரிமைகள் பறிக்கப்பட்டன. அப்படிச் சட்டப்பூர்வமாகப் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பித் தர, சட்டப்பூர்வமான முறையில் சட்டத் திருத்தங்களை உடனடியாகக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இந்த அதிகாரங்கள் மீண்டும் வழங்கப்பட்டு விட்டால் மட்டும் போதாது . . . . .

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரமன்றக் கூட்டத்தில் அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே அமருவது அல்லது வரி முறையீட்டுக் குழுவில் டி.ஆர்.ஓ. அல்லது



1989 பிப்ரவரி 18] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

ஆர்.டி.ஓ. ஆகியோரைக் கொண்ட குழு சம்பந்தமாக செய்ய வேண்டியது ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சட்டத் திருத்தம் தேவையில்லை. அரசாங்கத்தின் ஆணைகளே போதும். ஆகவே. அரசாங்கத்தின் ஆணைகள் விரைவில் அனுப்பப்படும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சி மன்றக் கூட்டங்களில் தலைவர் எங்கே உட்காருவது, சட்டமன்ற உறுப்பினர் எங்கே உட்காருவது என்பதெல்லாம் அரசாணை மூலமாக மாற்றப்பட்டது. எனவே அவைகளைப் பொறுத்தவரையில் அரசாணைகள் மூலமாகவே மாற்றிவிடலாம். ஆனால், மேல்முறையீட்டுக் குழு அமைப்பது சம்பந்தமாக, இந்த அவையிலேயே சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, சட்டமே திருத்தப்பட்டிருக்கிறது. ஆக, அந்தச் சட்டம் மீண்டும் திருத்தப்படாமல், வெறும் அரசாணை மூலமாக மாற்றம் கொண்டு வரும் நிலை ஏற்படக்கூடாது. எனவே, அதற்கு உரிய சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட வேண்டுமென்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் கூறியதைப்போல் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடீஸ் அக்ட்டின் செக்ஷன் 23-க்கு புதிதாக 23-ஏ என்ற பகுதி புகுத்தப்பட்டது. அதன் மூலமாகத்தான் அப்பீல் கமிட்டிக்கு இருக்கிற உரிமை அப்போது பறிக்கப்பட்டது. அதாவது சட்டத் திருத்தத்தின் மூலமாகத்தான் அந்த உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பொருளாதாரத்தில் ஸ்திரமற்ற நிலையிலுள்ள நகராட்சி மன்றத்தைக் கலைப்பது என்பதும் செக்ஷன் 41-ஐத் திருத்தியதன் மூலம்தான். ஆகவே இதற்கெல்லாம் சட்டப் பூர்வமான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, இங்கே முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றவைகளைப் பொறுத்தவரையில் அரசாணைகள் மூலமாகவே அந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டதால் அவற்றை மீண்டும் அரசாணைகள் மூலமாகத் திருப்பித் தந்துவிடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து நான் கூற விரும்புவது—இப்படிப் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. உள்ளாட்சி அமைப்புகள் மக்களுடைய குறைகளை

நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருளாதார நிலைமை அநேகமாக எல்லா நகராட்சிகளிலேயும் தற்போது மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது என்பது அரசுக்கு ஏற்கெனவே தெரியும் என்று நம்புகிறேன். ஏனென்றால், பெரும்பாலான நகராட்சி மன்றங்களை நடத்துகிற நிலை, தற்போது அரசு சார்பாக உள்ளவர்களின் கையிலேதான் இருக்கின்றது. ஆகவே அவற்றின் நிதியாதாரத்தைப் பெருக்குவதோடு, மாநில அரசும் அதிக நிதி கொடுத்து உதவும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினை, மின்சாரம், சுகாதாரம் ஆகிய பணிகளெல்லாம் நகராட்சி மன்றம் மூலமாகவே செய்யப்பட வேண்டிய காரியங்களாகும். ஆனால், குடிநீர் சம்பந்தப்பட்ட வரையில், அந்த அதிகாரம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக நான் என்னுடைய அனுபவத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். தண்ணீர் இருக்கிறது. ஆனால் விநியோகிக்கும் உரிமை நகராட்சிகளுக்கு கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத் திருத்தங்கள் பற்றி மட்டும் பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** அதிலும் கொஞ்சம் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்றுதான் இதைக் குறிப்பிட்டேன். அந்த அதிகாரம் முழுவதும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருக்கிறது. குடிநீர் இருக்கிறது என்றாலும் அதை சப்ளை செய்ய, அதிகமான குழாய்களைப் போட வேண்டும் என்றாலும் குடிநீர் வடிகால் வாரியத்திடம் அனுமதி பெறாமல் செய்ய முடியாது என்கிற நிலை இருக்கிறது. இதனால் மக்களிடையே கொந்தளிப்பும் அதிருப்தியும் ஏற்பட்டு கிளர்ச்சிகளே ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே குடிநீர் விநியோகிக்கிற அதிகாரம்கூட நகராட்சிகளுக்கே கொடுக்கக்கூடிய அளவுக்குச் சட்டத் திருத்தமோ அல்லது ஆணையோ பிறப்பிக்கப்படுமானால் நல்லதாக இருக்கும். எனவே அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெரு விளக்குகள் சரிவர எரிவதில்லை. ஒவ்வொரு நகராட்சி கூட்டத்திலும் நடக்கக்கூடிய விவாதத்தில் இது முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. எவ்வளவு தான் நகராட்சித் தலைவரும் ஆணையர்களும் மின்வாரிய அதிகாரிகளுக்கு எழுதி





னாலும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. அது அசையாத கல்லுப் பிள்ளையாராக இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கையெடுக்கிற முறையில் நிதியாதாரத்தை உயர்த்தக்கூடிய நிலைமை இருக்குமானால் நகராட்சிகளே மின்விளக்குகளை பராமரிக்கிற அளவுக்கு நிலைமை வரும். இன்றைக்கு இருக்கிற நகராட்சிகளில் மின் விளக்குகளை பராமரிக்கிற நிலையில் இருக்கக்கூடியவை ஏதோ ஒருசில நகராட்சிகள்தான் இருக்கும். ஆகவே நிதியாதாரங்களைப் பெருக்கி இவைகள் முழுவதையும் நகராட்சிகளே பராமரிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், வேறு சில சட்டத் திருத்தங்களையும் கொண்டு வர வேண்டுமென்று கருதுகிறேன். காரணம் இது எப்போதோ ஏற்படுத்தப்பட்ட சட்டம். அப்போது தொழிற்சாலைகள் அதிகமாக உருவாகாத நிலைமை இருந்தது. அப்போது தொழிற்சாலைகளுக்கு ஹார்ஸ் பவர் அடிப்படையில், குதிரை ஓட்டச் சக்தி அடிப்படையில் ஒரு ஹார்ஸ் பவருக்கு ஒரு ரூபாயோ அல்லது 35 பைசாவோ என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் வரையறை இல்லாமல் எத்தனை ஹார்ஸ் பவர்கள் அந்தத் தொழிற்சாலைகள் ஓட்டினாலும், 450 ஹார்ஸ் பவருக்கு மேல் லைசென்ஸ் பீஸ் உயர்த்தக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. இது முனிசிபல் மேனுவலிலும் (Municipal Manual) இருக்கிறது, சட்டத்தின் அடிப்படையில் வந்த ஷெட்யூலில் இருக்கிறது. இந்த வரம்பை எடுத்துவிட்டால் பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஆயிரக்கணக்கான ஹார்ஸ் பவர் மின்சாரத்தை ஓட்டக்கூடியவைகளிடமிருந்து அதிக வருவாய் கிடைக்கும். 1920 ஆம் ஆண்டுக் காலத்தில் வேண்டுமானால் அந்த நிலை தேவையாக இருந்திருக்கலாம். தொழில் வளர்ச்சியில் சிறு தொழில்களுக்கு அதிகப்படி ஏற்றக்கூடாது என்ற அடிப்படையில் செய்ததால் இப்போது நகராட்சிகளுக்கு வருவாய் வருவது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதையும் திருத்த வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் மாசுக் கட்டுப்பாடு கழகம் என்று ஒன்று இருக்கிறது. எல்லா இடங்களிலிருந்தும் வரக்கூடிய கழிவுகள், கழிவு நீர் மற்றும் அதனுடைய விளைவுகள் பற்றியதாகும். இதனால் மனித உயிரே போகக்கூடிய அளவிற்கு எப்படி பாதகமான நிலைமை

ஏற்படுகிறது என்று இந்த அவையில் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலம், 8 ஆண்டுக் காலம் அல்ல. நெல்லிக்குப்பத்தில் இருக்கிற ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் 125-வது ஆண்டைக் கொண்டாடிவிட்டது. அங்கே இருக்கக்கூடிய டிஸ்டில்லரியின் கழிவுநீர் கிட்டத்தட்ட 8 கிலோமீட்டர் தூரத்திற்குள்ள நிலங்கள் முழுவதையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. நகரத்தின் சுகாதாரத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. இதை குறித்து எவ்வளவோ நடவடிக்கைகளை நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது எடுத்திருக்கிறேன். அப்போது சுகாதாரத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மாண்புமிகு அமைச்சர் சாதிக்பாட்சா அவர்களை அழைத்துச் சென்று காட்டினேன். இப்போது வேறு துறைக்கு அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார்கள். இதில் நடவடிக்கையெடுப்பதற்கு முனிசிபாலிடிகளுக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்கள். முனிசிபாலிட்டி நடவடிக்கையெடுத்தால் எந்தத் தொழிற்சாலையும் அதற்கு கட்டுப்படுவதில்லை; அதை மீறிக்கொண்டு தான் இருக்கிறார்கள். மாசுக் கட்டுப்பாடு கழகத்தில் இருக்கிற முக்கியமான அதிகாரிகளையெல்லாம் சந்தித்துப் பேசினேன். அவர்கள் தங்களுடைய கைகள் கட்டப்பட்டு இருப்பதாக ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்கள். இந்தக் கழிவுநீர்ப் பிரச்சினை நாடு தழுவிய நிலையில் இருப்பதால், நகராட்சிகளுக்கு அதிகாரம் இருந்தாலும் நடவடிக்கையெடுக்க முடியாத நிலையில் தொழில் நிறுவனங்களும், முதலாளிகளும் மீறிக்கொண்டிருப்பதால், இதற்கு ஏற்றவகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, இந்த திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன்.

* **திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளின் 5 ஆண்டுக் காலப் பதவி நீட்டிப்புச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். சட்டமன்ற உறுப்பினராகிய நான் ஒரு ‘கிளாரிபிகேஷனை’ தமிழக முதல்வர் அவர்களிடத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். நேற்றையதினம் நம்முடைய முதல்வர் அவர்கள் ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சிகள் போன்ற அமைப்புகளுக்கு அதிகாரங்களை அள்ளித் தந்தார்கள். அந்த அதிகாரத்தைக் கொடுப்பவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் தான். நாம் அனைவரும் சேர்ந்து முனிசிபாலிட்டிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிகாரத்தை வழங்குகிறோம். அப்படி





வழங்குகிற சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் அந்த நகர் மன்றக் கூட்டத்திற்குச் செல்கிற போது அங்கே நாம் எங்கே இருக்கவேண்டுமென்று அடையாளம் நமக்கு காட்டப்படவில்லை.

(முற்பகல் 9-40)

அதேநேரத்தில் அந்த நகராட்சிமன்றத் தலைவர்கள் எங்கிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். நகராட்சி மன்றம் என்றால், ஊராட்சி மன்றம் என்றால், ஊராட்சி ஒன்றியம் என்று சொன்னால், நிச்சயமாக சுதந்திர ராஜ்யம், கிராம ராஜ்யம் என்று சொன்னால், அங்கே தான் சகல அதிகாரங்களும் இருக்கவேண்டும். அதுதான் கிராம ராஜ்யம். அதைத்தான் நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் இங்கே வந்தபோது பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களும் மிக அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிலே பெருத்த மகிழ்ச்சி எனக்கு. அப்படித்தான் இருக்கவேண்டும். அதுதான் 1958 ஆக்ட்படி, காந்தி கண்ட கனவு, காமராஜர் கண்ட கனவு. அதைப்போலவே நடைமுறையில் வந்திருக்கிறது.

அதே நேரத்தில் 1958 பஞ்சாயத்து ஆக்டின்படி, இந்தச் சட்டத்தை முழுமையாகச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். இந்தச் சட்டத்திலே கூடிய வரையில் எல்லாவற்றையுமே நம் முடைய முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதிலே ஒரு சில மாற்றங்கள் தேவை. பஞ்சாயத்து யூனியன் ஸ்டாப். . . .

**திரு. கோ. விரையன்**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சி மன்றச் சட்டத் திருத்தத்திலே பேசுகிறாரா, அல்லது ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியங்களுடைய சட்டத் திருத்தத்திலே பேசுகிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். சிங்காரம்**: தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் திருத்தத்திலேதான் நான் பேசுகிறேன். அதேநேரத்தில் ஊராட்சி மன்றம், பேரூராட்சி மன்றம், நகராட்சி மன்றம் போன்றவைகள் எல்லாம் லோக்கல் பாடிகள்தானே, அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பங்கு என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். நமக்கு மரியாதை வேண்டும் என்பதற்காகத் தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர, நான் மீறிப் போக

வில்லை. ஒரே லைன்தான். இந்த 1958 சட்டத்திலே, நகராட்சிகள். முனிசிபாலிட்டி, ஊராட்சி, ஊராட்சிமன்றம், ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் காரியங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே நகராட்சி மன்றக் கூட்டங்களிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லுகின்றபோது, பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லுகின்றபோது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்விடேசன் அனுப்புவது கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் இன்விடேசன் போகிறது. அதேநேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நகராட்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்வதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். ஏன் என்றால் மத்திய அரசாங்கத்தினுடைய ரெப்ரசென்டேடிவ்வாக, மக்களுடைய பிரதிநிதியாக அவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இன்விடேசன் அனுப்பினால், நகராட்சி மன்றத்தினுடைய பிரச்சினையில் அவர்களும் சேர்ந்து உதவி செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதேநேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், நகர மன்றக் கூட்டத்திலே அமர்ந்திருக்கிறபோது, அவருக்கு ஒரு அவமரியாதை ஒரு அசிங்கம், அவமானம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற ஆயப்பாட்டின் காரணமாகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். ஏன் என்றால், நகராட்சி மன்றக் கூட்டத்திலே, அங்கேயிருக்கிற ஸ்டாப், கடைசி நிலையில் உள்ள ஸ்டாஃப் அனைவரும் பக்கத்திலே இருப்பார்கள். நகராட்சி மன்றத்தினுடைய தலைவர் உயர்ந்த மேடையில் அமர்ந்திருப்பார். அந்த நகராட்சிக்கு அவ்வளவுதான் அவருடைய அதிகாரம். ஆனால் சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தவரையில், 2 ஊராட்சி ஒன்றியங்கள், ஒரு முனிசிபாலிட்டி போன்ற இப்படிப்பட்ட பெரிய அளவில் உள்ள பகுதி மக்கள் வாக்களித்து அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். எனவே அந்த அளவிற்கு இருக்கின்ற ஒரு மக்கள் பிரதிநிதியை. உங்களுடைய பிரதிநிதியாக உள்ள எங்களை, இங்கே சட்டத்தை அனுமதிக்கின்ற பிரதிநிதியாக உள்ள எங்களை. அங்கே கொண்டு போய், அண்ணாந்து பார்த்து முனிசிபல் சேர்மன் அவர்களையும், பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அவர்களையும் அண்ணாந்து பார்த்து, கீழே அமர்ந்து அசிங்கப்படுகின்ற அளவிற்கு அவமதிப்பு செய்து எங்களை ஆளாக்க வேண்டாம் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு





எந்தெந்த இடத்திலே, என்னென்ன அதிகாரத்தைக் கொடுத்து, உரிமையைக் கொடுத்து, அவர்களை வைக்கவேண்டும் என்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனாலும் நேற்று செய்த சட்டத்திலே எனக்கு ஒரு சந்தேகம். முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அரசு செய்திருக்கின்ற பல காரியங்களை எல்லாம் நேரிடையாக எதிர்த்து செய்யவேண்டும் என்ற எண்ணமோ, அல்லது இப்படிப்பட்ட சூழ்நிலையில் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதோ, என்னவோ, எனக்குத் தெரியாது. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா இடங்களிலும், ஊராட்சி ஒன்றியக் கூட்டம் நடந்தாலும். . . .

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1958-வது பஞ்சாயத்து சட்டப்படி, கிராம ராஜ்யம் அமைய நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள், பாராட்டுகிறேன் என்று சொன்னார். அதே நேரத்தில் இந்த நகர மன்றத் தலைவர் அல்லது ஊராட்சிக் குழுத் தலைவர், மேலே அமர்ந்திருப்பார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கீழே அமர்ந்திருப்பார்கள், இது சரிதானா என்ற வினாவை எழுப்புகிறார்கள் 1958 ஆம் ஆண்டுச் சட்டத்திலே எப்படி இருந்ததோ, அதே முறையைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: தலைவரவர்களே, எனவே 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தை நீங்கள் முழுமையாகப் பின்பற்றவில்லை என்பது எங்களுடைய கோரிக்கை. ஊராட்சி மன்றங்களில் ' ' தனியாக இருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களை எடுத்துக் கொண்டால், ஊராட்சி மன்றங்களில் இருக்கிற "Assistants, Junior Assistants, L. G. G. S. Atteaders', களையெல்லாம் சர்க்கார் ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற ' ' அவ்வளவு பேரும் ' Government Servants ஏனென்றால் அன்றைக்கு அவர்கள் முதலில் பஞ்சாயத்து யூனியனில் தான் இருந்தார்கள். இது 1958 ஆம் ஆக்ட்படி. ஆனால் இன்று கலைஞர் அவர்கள், நமது முதல்வர் அவர்கள் அதைத் தந்திரமாக செய்திருக்கிறார்கள். அதே சர்க்கார் ஊழியர்களை ' Union Staff ' ஆக திரும்ப ஆக்கமுடியாது. ஏனென்றால் அவர்கள் போராட்டம் நடத்துவார்கள். இது ஒரு முறையில் ' Settle ' ஆன விஷயம்.

[திரு. ஆர். சிங்காரம்] [1989 பிப்ரவரி 18

இன்றைக்கு ஊராட்சி மன்றங்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். School Visit மற்ற காரியங்களுக்கு எல்லாம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மதிப்புமிகு உறுப்பினர் கொஞ்சம் **நகராட்சிக்கு வரலாமா ?**

**திரு. ஆர். சிங்காரம்** : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதற்காக நான் பதில் சொல்கிறேன். ஆகவே **1958 ஆக்ட்.** அதில் எல்லாம் வருகிறது. ஆக நகராட்சி மன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல மரியாதை கிடைக்க வேண்டிய அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று உங்களை மிகப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே இருக்கின்ற நகராட்சிகளின் நிர்வாகம் எவ்வாறு நடக்கிறது என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. சம்பிரதாயத்திற்காக நாங்கள் எல்லோரும் பேசு கிறோம். அவர்களுக்கு மிகத் தெளிவாகவே தெரியும். ஆகவே நால்கூட முடியவில்லை. சில சமயங்களில் குடிநீர் பைப்பில் எல்லாம் சொல்லமுடியும். சந்தைகள் அதிகமான அளவில், மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அதை எப்படிக் கட்டுப்படுத்தமுடியும் என்ற நிலையில் பல முயற்சிகள் எடுத் தால்கூட முடியவில்லை. சில சமயங்களில் குடிநீர் பைப்பில் போகிறது. அதே நேரத்தில் சாக்கடை நீரும் போகிறது. சமயங்களில் குடிநீர் பைப்களில் சாக்கடை நீரும் கலந்து வரு கிறது. சில சமயங்களில் மீன்களும் வருகின்றன. இப்படிப்பட்ட நிலையில் முனிசிபாலிட்டி, நகராட்சிமன்ற நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர்திருத்த வேண்டும். இதை யெல்லாம் அங்கேயிருக்கின்ற பணியாளர்கள் சென்று சரியாகப் பார்க்க வேண்டும். அவர்களைக் கேட்டால் எங்களுக்கு சம்பளம் போதவில்லை. எனவே நாங்கள் சரியாக பார்க்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக் கிறது.

அதேநேரத்தில் நகராட்சிகள் மார்க்கெட்டுகள் நடத்து கிறார்கள். சில நகராட்சிகளிலே சந்தைகள் நடத்துகிறார்கள். சில நகராட்சிகளிலே மார்க்கெட்டுகளை நடத்துகிறார்கள். மார்க்



1989 பிப்ரவரி 18] [திரு. ஆர். சிங்காரம்]

கெட்டுகளை நடத்துகிறபோது அருகே பஸ் ஸ்டாண்டு இருக் கிறது, மார்க்கெட்டும் இருக்கிறது. அங்கே ஏலம் விடுகிறார்கள். ஏலத்தை ஒரு தனி நபர் 'காண்ட்ராக்ட்' எடுக்கிறார். ஒரு கூடைக்கு ரூ. 1 என்று முனிசிபாலிட்டியில் நிர்ணயித்தும், அந்த ரூ. 1-ஐ அவர்கள் வசூல் பண்ணுவது கிடையாது. ரூ. 1, ரூ.2, ரூ. 3, ரூ. 4 என்று மிகப் பெரிய அளவில் அவர்கள் வசூலிக்கிறார்கள். இதுபோன்ற நேரங்களில் சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் நேரடியாகக் கண்காணிப் பதற்கு அமைச்சரர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், பல்வேறு ரோடுகள் மிக மோச மாக இருப்பதாக முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ரோடுகளை இன்னும் பார்த்தால் பள்ளமாக, படு குழியாகத்தான் இருக்கின்றன. அதே நேரத்தில் மழை பெய்தால் தண்ணீர் பைப், சாக்கடை பைப் எல்லாம் ஒன்றாக சேர்ந்து வருகிறது. நடுவிலே ஒரு குழாய் இருக்கிறது. அதிலே சில நேரங் களில் குழந்தைகளும் விழுந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நிர்வாகம் சரியாக இல்லை. காரணம், முனிசிபல் சேர்மன் அவர்கள் அதில் முயற்சி எடுத்து செய்தால்கூட அங்கே இருக்கின்ற பணியாளர்கள் சரியாக ஒத்துழைப்பு தருவதில்லை. இதை நான் அனுபவரீதியாக சில இடங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த அளவிற்கு மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், இடையில் முனிசிபல் சேர்மன் இல்லாத நேரங்களில் அலுவலர்கள் தன்னிச்சையாக செயல் படுகிறார்கள். அவர்களே 'பில்' போட்டு எடுத்துக்கொள்கிறார்கள். ரூ. 2,000 என்ற அளவிற்கு 'பேச் ஒர்க்' எல்லாம் நடக்கின்றது. அந்த முனிசிபாலிட்டி ரோட்டை செப்பனிடும்போது ரூ. 2,000-ஐ எடுத்துக் கொள்கிறார்கள். ஆளுக்கு ரூ. 500, ரூ. 1,000 என்ற அளவில் எடுத்துக் கொள்கிறார்கள். சிறு சிறு வேலைகளை எல்லாம் பார்ப்பதற்கு முனிசிபாலிட்டியில் பணம் இல்லை. நிர் வாகம் அவ்வளவு மோசமான நிலையில் இயங்குகிறது. ஆனால் நிறைய வருமானம் வருகிறது. வந்தாலும்கூட சரிவர உபயோ கப்படுத்திக் கொள்ளவில்லை. அதனால்தான் தாறுமாறாக நடந்து கொள்கிறார்கள்.

[திரு. ஆர். சிங்காரம்] [1989 பிப்ரவரி 18

இன்னும் திருமண மண்டபங்கள் நடத்துகிறார்கள். விடுதிகள் நடத்துகிறார்கள். இவைகளையெல்லாம் சரியாக நடத்துவதில்லை. அதற்காக தயவு செய்து நீங்கள் முயற்சி எடுத்து தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெரு விளக்குகள் சரிவர வேலை செய்வதில்லை. அதற்காக முனிசிபாலிட்டியிலிருந்து ஒரு ஆள் போட்டிருக்கிறார்கள். ஒரு 'எலக்ட்ரீசியனை' அவர் போய்ப் பார்க்கிறார். ஒரு முனிசிபல் கவுன்சிலர் ரிப்போர்ட் பண்ணுகிறார். அவர் உடனே வந்து பார்த்துவிட்டு, மறுநாள் காலை விளக்கை போடுகிறார். விளக்கு போடப்பட்ட மறுநாள் அந்த விளக்கு எரிவதில்லை. கேட்டால் அது 'fuse' போய்விட்டது என்கிறார்கள். இதை நான் அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். அங்கே எனக்கு ஒரு 'friend' இருக்கிறார். அவர் சொன்ன விஷயம். நான் அதைக் கண்டுபிடித்து இருக்கிறேன். அவர்கள் போட்ட விளக்கை, டியூபை மறுநாள் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். யார் போட்ட பல்பை? முனிசிபாலிட்டி போட்ட பல்பை. அவர்கள் வீட்டிற்கு அருகில் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, தி.மு.க. கட்சி எலக்ஷன் பொதுக்கூட்டம் நடத்துகிறார்கள். அதற்காக கொண்டு வந்து விளக்கைப் போட்டுவிட்டு, அதற்கான வாடகையை வசூலிக்கிறார்கள். ரூ. 2,000, ரூ 3,000 என்று வாடகையாக வாங்கிக் கொள்கிறார்கள். முனிசிபாலிட்டி வாங்கிய பல்பிற்காக. இவ்வாறு அவர்கள் தனியாகத் தொழிலை நடத்துகிறார்கள். ஆக முனிசிபல் பணியாளர்கள் எல்லாம் தனியாகத் தொழில் நடத்த போகக்கூடாது. அவர்கள் முனிசிபாலிட்டியில்தான் இருக்க வேண்டும். அங்கிருந்துதான் பணிகளைப் பார்க்க வேண்டும். தனியாகத் தொழில் பார்க்கக்கூடாது. பல்புகள் அடிக்கடி ரிப்பேர் ஆகின்றன. அந்த ஸ்ட்ரீட் லைட்டுகள் பிராப்பராக வேலை செய்வது கிடையாது. எரிவதே கிடையாது. நிறைய திருட்டுகள், கொலைகள், கொள்ளைகள் நடைபெறுவதற்கு என்ன காரணம் என்றால் இந்த ஸ்ட்ரீட் லைட்டுகள் எரிவதே கிடையாது என்பதுதான். வீடுகளிலேயும் எரிவது கிடையாது.

(முற்பகல் 9.50)

இதற்கு மேல் டவுன் பிளானிங் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அந்த டவுன் பிளானிங்கில் பெர்மிஷன் வாங்கி வீடு கட்டுகிறார்கள். பெர்மிஷன் வாங்குவதற்கு ப்ளூ பிரிண்ட் எல்லாம் போட்டு அப்ளை பண்ணுகிறார்கள். அப்ளை பண்ணும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கவனித்து இருந்தால் 2 நாள் 3 நாளில் பிராப்பராக



1989 பிப்ரவரி 18]

'பெர்மிட்டட்' என்று போட்டு போய் விடும். கவனிக்கவில்லை என்று சொன்னால் 1 மாதம், 2 மாதம், 5 மாதம், 6 மாதம் என்று இழுத்தடித்து 'ரிஜக்டட்' என்று போட்டு போவதும். திருப்பி எடுத்து வருவார்கள் மறு பரிசிலனைக்காக. இந்த மாதிரி தாறுமாறாக நடக்கிறது. ஒரு அளவே கிடையாது. ஆகவே இவைகளையெல்லாம் தயவுசெய்து கண்காணிக்க. நிர்வாகத்தை இறுக்கிப் பிடிக்க வேண்டும். நிர்வாகத்தை சிறப்பாக நடத்த வேண்டுமென்று நினைக்கிற தமிழக அரசு தயவுசெய்து முனிசிபாலிட்டியையும், நகராட்சியையும் கவனித்து கண்காணித்து சிறப்பான முறையில் பணியாற்ற வேண்டும்.

அடுத்து பஸ் ஸ்டாண்டுகளிலே கடைகள் நடத்துகிறார்கள். அதை ஏலம் விடுகிறார்கள். தனித்தனியாக கடைகளை ஏலம் விடுகிறார்கள். அதிலே முனிசிபாலிட்டி ஸ்டாப் நகராட்சி மன்ற ஊழியர்கள் போய் பர்ச்சேஸ் பண்ணுகிறார்கள். அப்போது பல்வேறு காரியங்களைப் பண்ணுகிறார்கள். இதையெல்லாம் கேட்டால், எங்களை கவர்ன்மெண்ட் ஸ்டாப் ஆக்குங்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சமமாக எங்களுக்கு சம்பளம் கொடுங்கள். ஏனென்றால் நாங்கள் கஷ்டப்படுகிறோம். அதனால் சில்லறை வேலை பண்ணுகிறோம். லஞ்சம் வாங்குகிறோம்; வேறு என்ன வழி; நாங்கள் ரொம்ப ஏழை என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல்வேறு சூழ்நிலைகளில் பல கஷ்டங்களை அந்த ஸ்டாப்பும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் முனிசிபல் சேர்மனுடைய நிலைமை ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. முனிசிபல் சேர்மன்தான் இப்படியெல்லாம் பண்ணுகிறார் என்று நான் சொல்லவில்லை. அவர் நான் அபிஷியல் பாடி. ஆனால் கவுன்சிலர்கள் எல்லாம் சத்தம் போடுகிறார்கள். சேர்மேன் கஷ்டப்படுகிறார்கள். அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. துப்புரவுத் தொழிலாளர்களைக் கேட்டால் சம்பளம் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி பல்வேறு குழப்பங்களும் கஷ்டமான சூழ்நிலையும் அங்கே நிலவி வருகின்றன. ஆகவே முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து தனிக் கவனம் செலுத்தி நகராட்சி மன்றத்தை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தக்க மரியாதை கொடுத்து அந்த மன்றத்திலே அமர்வதற்கான வாய்ப்பைத் தாங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எஸ். டி. உகம்சந்த்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் இந்த திருத்தங்களில் பேசுகின்ற நல்ல வாய்ப்பை பெற்றமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்க காரண விளக்கங்களைப் பார்க்கிற நேரத்தில், மக்கள் ஏற்றுக் கொள்கிற எந்த ஒரு கருத்தையும் இதிலே தெரிவிக்கவில்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சித் தலைவருக்கும், நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் பதவியை நீடிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய மக்களுக்கு இதனால் என்ன பயன் ஏற்படும். அவர்களுடைய வாழ்வு, அவர்களுடைய சுகாதார முன்னேற்றங்கள் எல்லாம் எப்படி இருக்கும் என்ற நோக்கங்கள் இதிலே தெளிவாகக் கூறப்படவில்லை.

இந்த விளக்க உரையிலே சொல்லப்பட்டிருக்கிற அந்தக் காரணத்தை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜனநாயகத்தைப் பொறுத்த வரையில் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு ஆனால் அந்தக் குறிப்பிட்டக் காலத்திற்குள், நாம் சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற காரணத்திற்காக, பதவியை நீட்டித்துக்கொண்டே சென்றால், அது ஜனநாயகத்தினுடைய படுகொலை என்றுதான் கருத வேண்டும். இதற்கு முன் உதாரணங்கள் பல இருக்கின்றன.

1975 ஆம் ஆண்டு அன்றைக்கு பாராளுமன்றத்தினுடைய ஆயுளை நீடிக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் நீட்டித்தார்கள், மெஜாரிட்டி இருக்கிற காரணத்தால். ஆனால் அதற்குப் பின்னால் வந்த தேர்தல்களில் நடைபெற்ற முடிவுகள் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை, அது சரித்திரத்தினுடைய சான்றாக இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல 1969 ஆம் ஆண்டு நகராட்சியினுடைய தேர்தல்கள் நடைபெற்றன. அந்தத் தேர்தல்கள் நடைபெறுகிற நேரத்தில் அன்றைக்குச் சொல்லப்பட்டது, மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் பதவியிலே இருப்பார்கள் என்று. ஆனால் அந்த 3 ஆண்டுகளுக்குப்





பின்னால் 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்ட பிறகு 1975 ஆம் ஆண்டிலே என்று அரசாங்கம் ஒரு உத்தரவை அன்றைக்குப் பிறப்பித்தது.

'The Government in Public (Elections) Department had imposed a ban prohibiting changes in the administrative units of the local bodies with effect from 1st of January 1975.'

அதாவது 1973 ஆம் ஆண்டு தேர்தலை ஒத்திவைப்பதற்கு, அந்தத் தேர்தலை நடத்தக்கூடாது என்ற முறையிலே அன்றைக்கு ஒரு சட்டத்தை அரசாங்கம் பிறப்பித்தது. அதன் காரணமாக 1969 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற நகர மன்றத் தலைவர்களும், உறுப்பினர்களும், 1972 ஆம் ஆண்டு மக்களைச் சந்திக்க வேண்டிய அவர்கள் 1975 ஆம் ஆண்டு வரையிலே நீடிக்கப்பட்டு, அதற்குப் பின்னும் 1976 ஆம் ஆண்டு வரையிலே அந்தப் பதவியிலே அவர்கள் இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால் இது எவ்வளவு பெரிய ஜனநாயக விரோதம் என்பதை அடுத்து வந்த தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பதவியை நீட்டிப்பதற்காக சட்டமன்றத்திலே நாம் அமர்ந்து கொண்டிருந்தால் அதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேவையான தீர்ப்புகளை இதற்கு முன்பு சரித்திர சான்றுகளோடு நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தவறை நாம் மீண்டும் செய்யக்கூடாது. 1986 ஆம் ஆண்டு நகரமன்றத் தேர்தல்கள் நடைபெற்ற நேரத்திலே ஆணித்தரமாகச் சொல்லப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு அந்தப் பதவிகள் என்று சொல்லப்பட்டது. இனி வரும் காலத்தில் வேண்டுமானால் தேவையிருப்பின் 5 ஆண்டுகளாக இருப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. புதிய தேர்தல்களை நடத்துங்கள். அதில் 5 ஆண்டுகள் என்று சொல்லுங்கள். மக்கள் வாக்குகளை அளித்து யாரை உறுப்பினராக, யாரை தங்களுடைய தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்கள் அமரலாம். அதை விட்டுவிட்டு இப்படி நீடிப்பு, நீடிப்பு என்று செய்துகொண்டே இருந்தால் இதை ஜனநாயகத்தினுடைய ஒரு படுகொலை என்று தான் சொல்ல முடியும்.

அதே நேரத்தில் இன்றைக்கு நகர மன்றத்தினுடைய நிதி நிலைமையைப் பார்க்கின்ற நேரத்திலே, மிக மிகக் குறைவான முறையிலே அந்த நிதி ஆதாரங்களும், நிதி வசதிகளும் இருந்துகொண்டு வருகின்றன. நான் அறிந்த வரையில்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டியிருக்கின்ற ஒரு நகர மன்றக் கூட்டத்தில் கூட எல்லா நகர மன்றத் தலைவர்களும், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் சரி, நிதியாதாரங்களை எங்களுக்குப் பெருக்கித் தாருங்கள் என்றும், அதற்கு வேண்டிய நிதி வசதிகளைச் செய்து தாருங்கள் என்றும் கோரிக்கை வைத்ததாக நான் அறிகிறேன். அந்த நகர மன்றத் தலைவர்களுடைய கூட்டத்திலே அவர்கள் சொன்னார்கள். ஸ்டேம்ப் டியூட்டி மூலமாக வசூல் செய்யப்படுகின்ற அந்த நிதியிலிருந்து எங்களுக்கு மிக மிகக் குறைவான அளவு சுமார் 10 சதவிகிதம்தான் வழங்கப்படுகிறது, 90 சதவிகிதம் அரசாங்கம் எடுத்துக் கொள்கின்றது. 90 சதவிகிதம் நகர மன்றங்களுக்குத் தாருங்கள், 10 சதவிகிதம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற சொத்து பரிமாற்றம் என்று சொல்வது நகர மன்றத்தினுடைய எல்லைக்குள் உள்ள ஒரு செய்கை. அதைப் பராமரிக்கின்ற பொறுப்பு நகர மன்றத்தின் பொறுப்பாக இருக்கின்ற காரணத்தால், நிதி வசதியை எங்களுக்குப் பெருக்க வேண்டும் என்ற முறையிலே இதைச் செய்து தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று அவர்கள் கோரிக்கையாக வைத்திருப்பது கேளிக்கை வரியை எல்லாம் நீங்கள் அதிகப்படுத்த வேண்டும் என்பது. அந்தக் கேளிக்கை வரி வசூல் செய்கின்றார்களே அதிலே முன்பு 90 சதவிகிதம் நகர மன்றங்களுக்குக் கிடைத்தது. இடையிலே 40, 60 என்ற முறையிலே பிரித்துத் தரப்பட்டிருக்கிறது. அதையும் மாற்றி முன்பு இருந்த நிலையை உயர்த்தித்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

நகர மன்றத்திலே இருக்கின்ற, நகராட்சி எல்லைக்குள் இருக்கின்ற சாலைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு இன்றைக்கு நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நகராட்சிக்குள் செல்லுகின்ற தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு அந்தந்தத் துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத காரணத்தால் பக்கத்திலே டிரைனேஜ்களைப் போடுவதற்குக்கூட அந்த நகராட்சி அனுமதி வழங்க முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். டிரைனேஜ் வழங்க வேண்டுமென்று நகராட்சி நினைத்தால் அதற்கு ஹைவேஸும் நேஷனல் ஹைவேஸும் அனுமதி வழங்காமல் இருக்கின்றன. அந்த நிலைமைகள் மாறி, இந்த நகராட்சி மன்றத்தினுடைய எல்லைக்குள் இருக்கின்ற





அந்த ரோடுகள் அனைத்தையும் நகராட்சியே பராமரிக்கின்ற அளவுக்குச் சட்டத்திலே நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி எல்லைக்குள் இருக்கின்ற மருத்துவமனைகளுடைய பராமரிப்பு நகர மன்றங்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அந்த மருத்துவமனைகள் அனைத்தையும் நகர மன்றங்களே பராமரிக்கின்ற அளவுக்கு அரசாங்கம் உத்தரவைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சில நகராட்சிகள் நகரங்களாக மாற்றப்பட்டன என்றாலும் அவைகள் நரகங்களாகத்தான் இன்றைக்கு இருந்து வருகின்றன. அங்கு தொழில் வளம் இல்லை. அங்கு தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் அங்கே விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கின்ற நகராட்சியிலே வாழ்கின்ற அந்த விவசாயப் பெருமக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எந்தவிதமான உதவியும் அரசின் சார்பாக இன்றைக்கு வழங்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-10)

ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற அந்த மானியங்கள் எல்லாம் இன்றைக்குப் பொய ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்திருக்கின்ற பெரிய ஊர்களுக்குக் கூட வழங்கப்படுகின்றன. அதை விட ஜனத்தொகை குறைவாக இருக்கின்ற நகர்மன்றங்களிலே இருக்கின்ற விவசாயிக்கு அது கிடைக்காத நிலைமைதான் இருந்து கொண்டு வருகின்றது. உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு பம்மல், தாம்பரம் போன்ற, பம்மல் போன்ற பேரூராட்சிகளுக்கு இங்கே ஆர். எஸ். இ.ஜி.பி., ஐ.ஆர்.டி.பி; போன்ற உதவிகள் கிடைக்கின்றன; மக்கள் தொகை 35,000-க்கும் மேல் அதிகமாக அங்கு இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சில நகர்மன்றங்களிலே மக்கள் தொகையே 20 ஆயிரம் தான் இருந்து வருகின்றது. அப்படிப்பட்ட சிறிய நகர்மன்றங்கள்— விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கின்ற அந்த நகர் மன்றங்களிலே வாழுகின்ற மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி.யும், ஆர்.எல். இ.ஜி.பி.யும் விஸ்தரிக்கப்படுகின்ற அளவிற்கு அரசாங்கம்

நடவடிக்கை எடுத்தால்தான் அங்கே வாழுகின்ற அந்த விவசாயி களும் நல்ல முறையில் வாழ முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு எனக்கு முன் பேசிய அருமைச் சகோதரர் திரு. சிங்காரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நகர் மன்றத்தினுடைய கூட்டத்திலே எப்படிச் சட்டமன்ற உறுப்பினர் கள் எல்லாம் பங்குகொள்ளவேண்டும் என்ற முறையை அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையெல்லாம், பழைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—நகர்மன்றக் கூட்டத்திலே சட்டமன்ற உறுப் பினர்கள் கலந்து கொள்ளலாம், ஆனால் அங்கு உட்கார வேண்டுமென்று சொன்னால், கீழேதான் உட்கார வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கீழே உட்காருவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் தகுந்த மரியாதை கிடைக்குமா என்பதைத் தான் இன்றைக்கு எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையிலே இருந்துகொண்டு வருகிறோம்.

முன்பெல்லாம் இந்தச் சட்டத்தைப்போட்டு, சட்டமன்ற உறுப் பினர்கள் உட்காரவேண்டுமென்று சொன்னால், அவர்கள் அவ மானப்படுத்தப்பட்ட நிலைமைகளை நாம் பார்த்துக் கொண்டிருக் கிறோம். அந்த நிலைமை தொடரக்கூடாது என்ற முறையில் தான் நீங்கள் போட்டு இருக்கின்ற இந்தச் சட்டத்தின் காரண மாக எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரும் நகர்மன்றக் கூட்டத் திற்கே செல்லமாட்டார்கள்; ஏன் என்று சொன்னால், நீங்கள் போட்டிருக்கின்ற சட்டத்தின் மூலமாக அவர்கள் சாதாரண உரிமைகள் கூட இல்லாமல் ஏதோ ஒரு மூலையில் எந்தவித அதிகாரமும் இல்லாமல், 'வோட்டிங் பவர்' கூட இல்லாமல் உட் காருகின்ற நேரத்தில், அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதையே இல்லாமல் ஆகிவிடும். அதைத் தவிர்க்க வேண்டியது அவசியம் ஒன்று. சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று ஆணித்தரமாக ஒரு உத்தரவைப் போடுங்கள். கலந்து கொள்ளலாம் என்று போட்டால், நாளைய தினம் சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்த மன்றக் கூட்டத்திலே கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு, அவர்கள் செல்லவில்லையென்று சொன்னால் அங்கே இருக்கின்ற வாக்காளர்கள் அவர்களைப் பார்த்துக் கேட்பார்கள், "நீங்கள் ஏன் அந்தக் கூட்டத்திற்குச்





செல்லவில்லை?' அரசாங்கம் சட்டத்தின் மூலமாக நீங்கள் செல்லலாம் என்று போட்டிருக்கிறதே என்று சொல்லி, நீங்கள் செல்லாத காரணத்தால், எங்களுடைய பிரச்சினையை நீங்கள் தீர்க்கவில்லையே . . . ."

* திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய இடத்தில், அந்த மேடையிலேயே இடம் போட்டால்தான் வரு வார்கள், இல்லாவிட்டால் மரியாதை கெட்டுவிடும் என்கிற முறை யிலே மக்கள் மதிக்கமாட்டார்கள் என்று கூறுகிறார்கள். நான் நெல்லிக்குப்பம் நகர்மன்றத்தினுடைய தலைவராக இருக்கிறேன். பழைய அரசினுடைய ஆணைப்படி சட்டமன்ற உறுப்பினருக்கு எனக்கு அருகிலேயே அந்த மேடையிலேயே இடம் போட் டிருந்தது. ஒரு தடவை கூட அந்தச் சட்டமன்ற உறுப்பினர், நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்தவர் திரு. அன்பரசன் அவர்கள் வரவே யில்லை. அதனுடைய காரணம் என்னவென்பது புரியவில்லை. இடம் தலைவருக்கு அருகில் மேடையிலேயே போடப்பட்டிருந்தும் அவர் வரவேயில்லை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான் அவர்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மதிப்பிற்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கே செல்லவில்லை என்ற குறிப்பைச் சொல்லியிருக் கிறார்கள். அது அவருடைய தவறாக இருக்கலாம். பல சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சட்டமன்றத் திற்கே வருவதில்லை. அது யாருடைய தவறு என்று நாம் சொல்ல முடியாது. அந்த நிலைமையில் அவர்கள் வரவில்லை, அவர்கள் உட்காரவில்லை என்று சொன்னால் சட்டம் இருக்கின்றது. ஏன் உட்காரவில்லை என்று அதை தட்டிக் கேட்பவர்கள் மக்கள்தான். மக்கள்தான் அவர்களைப் பார்த்துக் கேட்பார்கள், ஏன் நீங்கள் உட்காரவில்லை என்று.

இதை கதைகளாக் கூடச் சொல்லலாம். நாம் நாய்க்கு உணவைப் போடுகிறோம் என்று சொன்னால், கட்டிப் போட்டுக் கொடுத் தால்தான் அந்த நாய் உண்ண முடியும். ஒரு ஜாடியிலே போட்டு நாயை உணவு கொள்ளவேண்டும் என்று சொன்னால், கண்டிப் பாக அந்த நாயால் உணவு கொள்ள முடியாது. இதைப்போன்ற சட்டத்தைப் போட்டு, நாங்கள் அதில் பங்கு கொள்ளமுடியாத நிலையையும் ஏற்படுத்தினால்; இது ஜனநாயகத்திற்கு—இந்தச்

சட்டமே தேவையில்லை. அதை மறுக்கின்ற அளவிற்குக் காரியங்களைச் செய்யலாம். நான் இதை ஏன் சொல்லுகிறேன் என்று சொன்னால், சட்டமன்றக் குறிப்புகளை நான் பார்க்கின்ற நேரத்தில் 1958 ஆம் ஆண்டு நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குச் சட்டமன்றத்தில் இருந்த நேரத்தில், பேராசிரியர் அவர்கள் இந்த மாமன்றத்தில் இருக்கின்ற நேரத்தில் அவர்களே பேசியிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கை அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அன்றைக்கு அவர்கள் பேசியிருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், நகராட்சி, மாநகராட்சியிலே கலந்து கொள்கின்ற ஒரு வாய்ப்பினை. . . .

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே நேற்றுகூட இந்த மன்றத்திற்கு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வரவில்லை. அதையும் மக்கள் அப்படித்தான் நினைப்பார்களா . . . .

திரு. எஸ். டி. உகம்சந்த்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, (குறுக்கீடு) குறிப்பிலே இருந்தால் பதில் சொல்லியாக வேண்டும். அதையும் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். நான் பதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அருமைச் சகோதரர் அவர்கள் பேசினார்கள். அதே நிலைமைதான் மற்ற அமைச்சர்களும், மன்ற உறுப்பினர்களும் வரவில்லை என்று சொன்னால் நாங்களும் அதை எடுப்போமா, அதே காரணத்தை நாங்களும் கொள்ளலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல். . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால்தான் கலந்துகொள்ளவில்லை. வேறு காரணம் எதுவும் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அந்த நகர் மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற ஒரு வாய்ப்பு தரவேண்டும் என்ற முறையில் தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த நகர்மன்றக் கூட்டங்களில், நகராட்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற ஒரு வாய்ப்பினை அளித்தார்களே தவிர வேறு எந்த





ஒரு நோக்கமும் இடையாது. அன்றைக்கு அண்ணா அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினர் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: ஏற்றுக் கொண்டு இந்தச் சட்டத்தை இயற்றினார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல . . . .

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்ட காலமாக சட்டமன்றத்திலே வலியுறுத்தப்பட்ட ஒரு கருத்து என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றங்களில் கலந்துகொள்கிற ஒரு வாய்ப்பை முறையாக இயங்க வழி செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறார். அந்தக் கருத்து இந்த அவையிலே சொல்லப்பட்டது உண்மை தான். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களைவிட, உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் தலைவர்களை விட அதிக தகுதி உடையவர்களாக அந்த இடத்திலே கலந்துகொள்ள வேண்டும் என்பது அன்றைக்கு வலியுறுத்தப்பட்ட கருத்து அல்ல. ஆலோசனை வழங்குவதற்கு ஜனநாயகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அந்த ஆலோசனை வழங்குகிற சட்டமன்ற உறுப்பினர்கள்—சட்டசபையைப் பார்வையிட வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி இந்தச் சட்டமன்றத்திலே நேரடியாக இடம் பெற முடியாது, ஆலோசனை வழங்குகிற முறையிலே கலந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினால் கூட முடியாது என்ற நிலைமை இருப்பதைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள் தடுக்கப்படக் கூடாது, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மன்றத்தின் உறுப்பினர்களைப் போல ஜனநாயகத்திலே எல்லோரும் சமம்: இன்னும் சொல்லப்போனால் எல்லோரும் சரிநிகர் எல்லோரும் சரிநிகர் என்ற அந்த அடிப்படையில் அந்த அவையிலே இடம் பெறலாமே தவிர, மன்ற உறுப்பினர்களைப் போன்ற வாய்ப்புகள் பெறக்கூடாது. வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு அந்த உறுப்பினர்கள் வரிசையில் ஓர் இடம் வேண்டுமானால் முதல் வரிசையில் கூட அந்த வரிசையில் முடைய சபாநாயகருடைய பொறுப்பும், திரு முதலமைச்சரின்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 பிப்ரவரி 18

பொறுப்பும் போல குறைந்த அளவில் பொறுப்பு இருக்கிற அந்த அவையிலே அந்தத் தலைவருக்குத் தரப்படுகிற மதிப்பு உள்ளாட்சி மன்றத்திற்குத் தரப்படுகிற மதிப்பாக இருக்கிற காரணத்தால் அது குறைந்து போவதற்கான அல்லது பாதிக்கப்படுவதற்கான இடம் இல்லாமல் இடம் பெறத்தான் வழி செய்ய வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் நம்முடைய இப்போது பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. கண்டிப்பாக முன்னால் இருந்த அரசு கொண்டு வந்த அனைத்தையும் மாற்ற வேண்டும் அல்லது மாற்றித் தான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை. அநேகமாக இப்போது காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், அதேபோல் எதிர்க்கட்சியின் சார்பிலேயும் பல கட்சிகளின் சார்பிலேயும் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே உட்கார வேண்டும் என்ற பிரச்சினையில், அங்கே ஒன்றியத்தின் பெருந்தலைவருக்குப் பக்கத்தில் உட்கார ஒரு வாய்ப்பைத் தாருங்கள் என்று எல்லோரும் கேட்கிறார்கள். அநேகமாக அவர்கட்சியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் கூட அவர்களின் உள் மனத்திற்குள் இந்த எண்ணம்தான் நிச்சயமாக இருக்கும். (கூச்சல்) ஆனால் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு இருக்கலாம். அது வேறு பிரச்சினை. ஏன் என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள் என்று நம்முடைய பேராசிரியர். மன்னவர் அவர்கள் சொன்னார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பார்வையாளர் காலரியில் போய் உட்காருவது இல்லை. தனி மாடத்தில் அவருக்கு ஒரு விசேஷ இடம் கொடுத்து அங்கே உட்காருகிறார்கள். அதேபோல் 1½ லட்சம் வாக்காளர்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று வருகிற ஒரு சட்டமன்ற உறுப்பினர் அங்கே இருக்கிற ஒரு பஞ்சாயத்துத் தலைவர் பக்கத்தில் உட்கார்ந்தால் அவருக்கு குறைவாகப் போகாது—ஒன்றியத் தலைவர்கள் 30 ஆயிரம், 35 ஆயிரம் வாக்குகள் பெற்று தான் வருகிறார்கள். உட்காருகின்ற காரணத்தால் அவர் அவையை நடத்துகிறார். ஆனால் குழுவின் தலைவரைவிடப் பெரியவர் என்று பொருள் ஆகாது. அவர் சபைக் குறிப்பிலே எங்கே இருக்கிறவர் அவரோ ஆலோசனைதான் சொல்வார்; அங்கே உட்கார்ந்திருப்பவர் ஆலோசனை தான் சொல்வார்; சின்னையா அவரால் நடக்க முடியாது. ஒன்றியத் தலைவர் தான் சபையை நடத்துவார். எனவே ஒரு மரியாதை தான். இதே உட்காருவதற்குப் பதிலாக 30, 40



1989 பிப்ரவரி 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

பஞ்சாயத்து தலைவர்களோடு உட்காருவதற்குப் பதிலாக பக்கத்தில் உட்கார்ந்து இருப்பார் அவ்வளவு தான். சபையை, அந்தக் குழுவை நடத்துகிற எந்த அதிகாரமும் அவருக்கு வராது. ஒரு மரியாதைதான். ஒரு கர்டசி என்ற அடிப்படையில் அது தரப்பட்டது. அதை இந்த அரசும் தந்தால் அது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வசதியாக இருக்கும்.

(முற்பகல் 10-10)

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய வசதிக்காக உள்ளாட்சி மன்றங்களை நடத்த முடியாது. நாடாளுமன்ற உறுப்பினருக்காக சட்டமன்றத்தை நடத்த முடியாது. அதேபோல, உள்ளாட்சி மன்றத்தை மதிக்கிறோம். அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னர் குறைந்த அளவு அதிகாரம் இருந்தாலும் கூட அவர்களுக்குரிய மதிப்பு அந்த அவைக்குள்ளே கட்டாயம் கிடைக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காரணத்தாலும், ஒரு வேளை அமைச்சராக இருக்கிற, ஒருவர் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எப்பொழுதேனும் கலந்து கொள்ள நேரிட வேண்டுமானால், அவரே ஒரு ஆலோசனை வழங்க அங்குள்ளவர்களைச் சந்திக்க விரும்பிச் செல்வாரேயானால், அந்த நிலையில் அந்த உள்ளாட்சி மன்றத் தலைவருக்குரிய மதிப்புக்குக் குறை ஏற்படாத நிலையில்தான் அவரைச் சந்திக்க வேண்டும். எனவே, அந்தச் சூழ்நிலை காரணமாக, அந்த அமைப்புக்கு மரியாதை தருவதன் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த உறுப்பினர்களோடு ஒருவராகத் தான் இடம் பெறலாம். எம்.எல்.ஏ. என்ற காரணத்தால் முக்கியத்துவம் வரத்தான் செய்யும். ஆனால் அந்த அவைத் தலைவராக, உள்ளாட்சி மன்றத் தலைவராக, ஒன்றியத் தலைவராக, நகராட்சி மன்றத் தலைவராக, அந்தப்பகுதி மக்களாலே, அந்தக் காரியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோடு இன்னொரு காரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், பொது மக்களுடைய பிரதிநிதித்தான் என்ற காரணத்தால், சமநிலையிலே உட்கார வேண்டுமென்றால், ஏறத்தாழ அவர்கள் அதிகாரத்திலே மறைமுகமாக, தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதாக ஒரு தோற்றம் ஏற்படும். அப்படிப் பயன்படுத்துகிற

அந்தத் தோற்றம் ஏற்பட்டதாக ஏற்கெனவே புகார்கள் வந்து இருக்கின்றன. அப்படிப் பயன்படுத்துவதற்கான அந்த வாய்ப்பு நமக்கு இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலேதான் இந்தச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே அ.தி.மு.க. அணியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது இப்படித்தான் ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுடைய எண்ணங்களும் இருக்கும் என்று சொன்னார்கள். இது சட்டப் பேரவையின் விதி 42, உட்பிரிவு 6-க்கு உட்பட்டதா? இப்படிப் பேசலாமா? என்பதை அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையிலே, அவர்களுடைய உணர்வுகட்கு இந்த வசதி தந்தால் நன்றாக இருக்குமே, ஒரு பி.டி.ஓ. மதிக்க அது வாய்ப்பாக இருக்குமே, அந்த பிரசிடெண்டோடு உட்காருவதற்குப் பதிலாக அவருக்குப் பக்கத்திலே, சேர்மனோடு, பி.டி.ஓ.வோடு உட்கார்ந்து இருந்தால் நன்றாக இருக்குமே என்கிற ஆசை இருக்கும் என்பதைச் சொல்ல வந்தேனே தவிர, இதிலே மரபுக்கு மீறிய விஷயம் காதுவுமில்லை, எனவே அதை நீக்க வேண்டியதில்லை.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கட்சி ஆளுங்கட்சியாக இருந்தபொழுது இந்தவைய ஒரு உத்தரவு இடப்பட்டது. அப்பொழுது அவர்கள் மிகப் பெரும்பான்மையாக இருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், 130-க்கு மேற்பட்டவர்கள் அப்பொழுது இருந்தார்கள். அதைப் போல, இப்பொழுது நாங்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு, ஆளுங்கட்சியிலே உள்ள 140-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பயன் பெறுகின்ற அளவுக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அதை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் இருப்பதிலிருந்தே. சட்டமன்ற உறுப்பினர்களுடைய அதிகாரம், அவர்களுடைய பணி நடைபெற வேண்டிய இடம் வேறு. உள்ளாட்சி மன்றத் தலைவர்களுடைய அதிகாரம், அவர்களுடைய உரிமைகள், அவர்





களுடைய பணிகள் பயன்படுத்தப்பட வேண்டிய இடம் வேறு. ஒன்றோடொன்று மோதுதல் ஏற்படக் கூடாது என்ற அந்த எண்ணத்தோடுதான் இந்த நிலை இன்றைக்கு எடுக்கப்படுகிறதே யல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெருமையைக் குலைப்பதற்காக அல்ல. அவரவர்களுடைய பெருமை அவரவர்கள் பணியாற்றுகின்ற இடத்திலே காப்பாற்றப்பட வேண்டும். இன்னொரு இடத்திலே ஆலோசகர்களாகக் கலந்து கொள்கிற நேரத்தில், உள்ளாட்சி மன்றங்களில், நகராட்சி மன்றங்களில், எங்கே சென்று கலந்து கொண்டாலும், அவர்களை மிக மரியாதையோடு நடத்தக்கூடிய அந்தப் பண்பாடு தமிழ்நாட்டிலேயுள்ள எல்லா ஊராட்சி மன்றங்களிலும், ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அப்படி கடைப்பிடிக்கப்படவில்லை என்கிற புகார்கள் அரசின் கவனத்திற்கு வருமேயானால் அதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்க அரசு தயங்காது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற தடவை அந்தச் சட்டம் வருகிறபொழுது, ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க.-வுக்கு பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். பொதுவாக ஆளுங்கட்சியிலே இருக்கிறபோது ஆளுங்கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை தன்னாலேயே கிடைக்கும். எங்கே உட்கார்ந்தாலும் பிரச்சினை இல்லை. எனவே, சென்ற முறை வந்த அந்தச் சட்டத் திருத்தத்தின் வாயிலாக பயன் பெற்றவர்கள் எதிர்க் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்தான். இந்தத் தடவையும் ஆளுங்கட்சியிலே பெரும்பான்மை இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எங்கே உட்கார்ந்தாலும் மரியாதை கிடைக்கும். அதனாலே பாதிக்கப்படுவது எதிர்க் கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்தான். எனவே நாங்கள் எதிர்க் கட்சிக்கு சென்ற தடவை வசதி செய்தோம். நீங்களும் இந்தத் தடவை எதிர்க்கட்சிகளுக்கு வசதி செய்யுங்கள் என்றுதான் உங்களைக் கேட்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பல உள்ளாட்சி மன்றங்களில் அங்கே தங்களுக்குத் தரப்பட்ட இடத்தைப் பயன்படுத்திக்கொண்டு தவறுதலாக

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 18

நடந்து கொண்டார்கள் என்கிற புகார்கள் பல வந்தன. அதனால் தான் அந்தப் புகார் இந்த ஆளுங்கட்சியின் மீதும் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த முடிவு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அப்படியென்றால் தங்கள் ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மீதே தங்களுக்கு நம்பிக்கை கிடையாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லோரையும் நம்பு கிறோம். ஆனால் நம்புகிற நேரத்தில் சிலபேர் தவறி விடக் கூடும். அப்படித் தவறி விடுகிற நேரத்தில் அவர்கள் மீது நடவ டிக்கை எடுக்கவும் இந்த அரசுக்கு உரிமை உண்டு என்பதைத்தான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, இது தொடர்பாக எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஆளுங்கட்சித் தரப்பில் இருக்கிற உறுப்பினர்களுக்கும் இதில் அப்படித்தான் இருக்கும் என்று ஒரு உள்நோக்கம் இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அதை நம்முடைய மாண்பு மிகு அமைச்சரவர்கள் மறுத்தார்கள். அப்படி நான் உள் நோக்கம் கற்பித்து இதைச் சொல்லவில்லை என்று அவர்கள் விளக்கம் சொன்ன பிறகு இந்தச் செய்தியை இதோடு நிறுத்தி, பின்னால் பேசுகின்ற உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதுபோன்ற தொடர்களைப் பயன்படுத்தாமல் இருந்தால் இன்னும் பெருமை யாக இருக்கும் என்று கூறி, உறுப்பினர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

• **திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இடம் எங்கு இருக்க வேண்டுமென்ற பிரச் சினை அல்ல. அதை நான் குறிப்பிடவும் இல்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் உணவு பரிமாறி அந்த உணவை நாங்கள் உட்கொள்ள முடியாத அளவிற்குச் சட்டங் களை இயற்றினால், நாளையதினம் நகரத்திலே இருக்கிற அந்த மக்கள் எங்களைக் கேட்பார்கள், நீங்களும் நகர்மன்றக் கூட்டத் திற்குச் செல்லலாமே, ஏன் இதைச் செய்யவில்லை என்று குறை பாடுகள் சொல்லலாம். ஆனால் பாதுகாப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது கடைப்பிடிக்கப்பட்டால் நலமாக இருக்கும். ஆனால், கடைப்



1989 பிப்ரவரி 16] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

பிடிக்காத ஒரு நிலைமை எங்கேயாவது ஏற்பட்டுவிட்டால் அதற்குத் தகுந்த பாதுகாப்புகளை மாண்புமிகு முதலமைச்சர வர்கள் செய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். அதே நேரத்திலே இன்றைக்கு உள்ள நிலைமை யெல்லாம் முன்பு போடப்பட்டிருக்கின்ற அனைத்துச் சட்டங் களையும் மாற்ற வேண்டுமென்ற முறையிலே இன்றைக்குப் பல்வேறு அறிவிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், பெருந் தன்மையோடு பல்வேறு சலுகைகளையும், பல்வேறு உரிமை களையும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கும், நகர்மன்றத் தலைவர் களுக்கும் வழங்கியிருக்கின்றார்கள். அதைப்போன்று, உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கியிருக்கின்றார்கள். ஆனால் ஒருசில உரிமைகளைப் பார்க்கிற நேரத்தில், கண்காணிக்கின்ற உரிமைகள் தான் வழங்கப்பட்டிருக்கின்றன. கட்டுப்படுத்துகின்ற உரிமைகள் வழங்கப்படவில்லை. அப்படியென்று சொன்னால் அது முன் பிருந்த நிலைமைகளிலே அவைகள் இல்லை என்ற கருத்திலே கொள்ள வேண்டிய நிலைமைகளில் இருந்துகொண்டு வருகிறோம். நம்முடைய ஊராட்சி மன்ற சட்டங்களும், நகர்மன்றச் சட்டங் களும் அமைக்கப்பட்ட நேரத்திலே இருந்த அனைத்து அதிகாரங் களும், அந்த நகர மன்றங்களுக்கு வழங்கப்பட்டால் நாம் சொல்லலாம், இதில் ஏதோ மாற்றங்கள் இருக்கின்றன. முன் பிருந்த நிலைமையிலே நாங்கள் செயல்படுத்துவதற்கு வேண்டிய வழிவகை செய்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் அலங்கார வார்த்தைகளைப் போன்று கட்டுப்பாடுகள் இல்லாமல் நாங்கள் அவர்களுக்கு வேண்டிய உரிமைகளை; அவர்களுக்கு வேண்டிய கவுரவத்தைக் கொடுக்கிறோம் என்று சொன்னால் அது நாளைய தினம் எந்த நிலைமையிலே கொண்டு செல்லும் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்றைக்கு உள்ள நிலைமைகளெல்லாம், இந்தப் பதவி நீடிப்பானது தேவை யில்லை என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். அதேநேரத்தில் நாம் 1920 ஆம் ஆண்டு நகராட்சி சட்டத்தைத்தான் பேசிக்கொண் டிருக்கிறோம். அதற்குப் பல மாற்றங்கள் வந்துவிட்டன. ஆகவே, மொத்தத்தில் ஒரு புதிய சட்டத்தை அமைத்து, புதிய சட்டம் இந்த அவையிலே இயற்றப்படுவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமானது தேவை இல்லை என்ற கருத்தைச் சொல்லி, இதை வாபஸ் பெற வேண்டுமென்று வலியுறுத்தி விடை பெறுகிறேன். நன்றி.

[1989 பிப்ரவரி 18

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நகராட்சி சட்ட (திருத்த) முன்வடிவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்று, ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே, நகராட்சிகள், ஐந்தாண்டுக் காலமாகப் பணியாற்றி பிறகு அது நான்காண்டு, மூன்றாண்டு என்று குறைக்கப்பட்ட பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் ஐந்தாண்டுகளாகப் பதவிக் காலத்தை உயர்த்தி, இன்னும் பல வேறு, அவர்களுக்கு இருக்கின்ற சிறப்பு அதிகாரங்களை ஏற்கனவே இருந்த அரசு எடுத்துவிட்டாலும் கூட, நகராட்சி மன்றத்தில் பணியாற்றுகின்ற தலைவர்கள், உறுப்பினர்கள் கண்ணியம் மிக்கவர்களாக, அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் பொதுமக்களுக்குப் பணியாற்றி, தங்களுடைய கௌரவம் காக்கப்பட வேண்டுமென்ற வகையில், ஒரு நல்லெண்ணத்தோடு, பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கின்ற இந்த அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த தேசத்தில் நகராட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள், நிதியாதாரங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன என்பது உண்மை.

(மூற்பகல் 10-20)

இன்றையதினம் நகராட்சிகளுக்கு பல்வேறு பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன. நகர மக்களுக்கு சுத்தமான தண்ணீர் வழங்குதல், நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், விளக்குகளை நல்லமுறையிலே எரிய வைத்தல் போன்ற பொறுப்புகள் இருக்கின்றன. ஆனால் நகராட்சியினுடைய நிதி ஆதாரம் மிகவும் குறைவாக இருக்கிறது. நிதி ஆதாரம் குறைவாக இருப்பதால் பல்வேறு நகராட்சிகளில் இப்படிப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்ற முடியாமல் பொது மக்களுடைய அதிருப்திக்கு ஆளாகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே நம்முடைய அரசு நகராட்சிகளுக்கு அதிக அதிகாரத்தையும் அதிக நிதி ஆதாரத்தையும் வழங்க வழி வகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இன்னொன்று, நகராட்சிகளில் குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான லாரிகள் அல்லது டிராக்டர்கள், இதர வண்டிகள் போதுமான அளவுக்கு இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருவண்ணாமலை நகராட்சியில் ஒரே ஒரு குப்பை அள்ளும் லாரிதான் இருக்கிறது. சில நேரங்களில் அது பழுதுபட்டால், அதைப் பழுது பார்ப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து நகராட்சிக் கூட்டத்திலே வைத்து, முடிவு செய்து உடனடியாகப் பழுதுபார்க்கும் அதிகாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. உடனடியாகப் பழுதுபார்க்க முடியாத நிலை ஏற்படுகிறபோது பெருமளவில் குப்பைகள் சேர்ந்து, அள்ள முடியாத் நிலை ஏற்பட்டு, பிறகு டெண்டர் கோரப்பட்டு அள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதற்கு இடையிலே குப்பை பெருகி, நகரம் அசுத்தமாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டுமென்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு நகரம் சுத்தமாக இருக்க வேண்டுமென்றால் நகர சுத்தித் தொழிலாளர்கள் போதுமான அளவுக்கு இருக்க வேண்டும். அவர்களுடைய பணி சிறப்பாக நடைபெறவில்லை என்றால் நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள முடியாது. இப்போது இருக்கிற நகர சுத்தித் தொழிலாளர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த மக்கள் தொகையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். இப்போதுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் அந்தத் தொழிலாளர்களை அதிகமாக நியமிக்க வேண்டும். நகர சுத்தி தொழிலாளர்களை அதிகமாக்கி, நகரத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று நகராட்சிகளின் சார்பிலே பல பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் நகராட்சிப் பள்ளிகளை சரியான முறையில் பழுதுபார்த்து பராமரிக்க முடியவில்லை. ஆகவே, நகராட்சிகளுக்கு ஒரு சிறப்பு நிதி வழங்கி, அந்தப் பள்ளிகளை நல்லமுறையில் பழுதுபார்த்து நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1989 பிப்ரவரி 18

அடுத்தபடியாக, நகராட்சி மன்றக் கூட்டங்களிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றபோது, அவர்களுக்கு சிறப்பான இடம் கொடுக்கப்படுவதில்லை என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் இருந்தபோது ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என்று விதி இருந்தது. நான் கூட துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலே துணைப்பெருந்தலைவராகவும் பெருந்தலைவராகவும் பணியாற்றி இருக்கிறேன். பெருந்தலைவர் அந்தக் கூட்டத்தை நடத்தி வைப்பார். அங்கே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். மேடையில் பெருந்தலைவருக்கு வலது பக்கத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் துணைப் பெருந்தலைவரும் உட்கார ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் ஆணையாளரும் மற்ற அதிகாரிகளும் இருப்பார்கள். உறுப்பினர்களும் மற்றவர்களும் கீழே இருப்பார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களை இங்கேதான் உட்கார வைக்க வேண்டுமென்ற விதிகள் இல்லாதபோதே சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படி மரியாதையாகக் கவனிக்கப்பட்டார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன்; மற்றவர்களும் பார்த்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இன்றையதினம் . . . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை எழுந்ததால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். ஏற்கெனவே இங்கே சொன்னதைப் போல மேடையிலே சட்டமன்ற உறுப்பினர்களை உட்கார வைப்பதில் பல பிரச்சினைகள், குழப்பம் வரும் என்றாலும் கூட, ஒன்றியத் தலைவருக்குப் பக்கத்தில் இல்லாவிட்டாலும் கொஞ்சம் தள்ளி இடம் ஒதுக்கி, உரிய மரியாதை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இங்கே நம்முடைய சபையிலே சபாநாயகர் உட்கார்ந்திருக்கிறார்கள். உறுப்பினர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். இதைப்போல ஒன்றியத் தலைவர் மேடையில் உட்கார்ந்திருக்கிறார் என்றால் சற்று தூரத்தில், ஓரத்தில் எம்.எல்.ஏ. உட்கார ஏற்பாடு செய்தால் அவருக்கு ஒரு மரியாதை இருக்கும், மகிழ்ச்சி ஏற்படும் என்று நான் நினைக்கிறேன்.



1989 பிப்ரவரி 18]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ.வினுடைய மதிப்பையோ, மரியாதையையோ எந்த வகையிலேயும் குறைக்கின்ற அளவுக்கு அங்கே இடம் ஒதுக்கப்படமாட்டாது. அவர்களைத் தனியாக ஒரு இடத்தில் அமர்த்துவதற்கு இடம் ஒதுக்கப்படும். இப்போது இருக்கிற பிரச்சினை மேடையிலே தலைவருக்குப் பக்கத்திலே நாற்காலி போடுவது, அது கூடாது என்பதுதான்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் தலைவர்கள் மேடையிலே அமர்த்தப்படுவது அவர்கள்தான் மன்றத்தைத் தலைமையேற்று நடத்துகிறார்கள் என்ற காரணத்தினால். He is the presiding officer.

அதனால் மன்றத்தலைவர்கள் மேடையில் அமர்த்தப்படத்தான் வேண்டும். கீழே உட்காருகிறவர்கள் கீழே உட்காருகிற காரணத்தாலேயே அவர்களுடைய அந்தஸ்து குறைந்துவிடுகிறது என்று கருதுவது ஒரு நியாயமான எண்ணமல்ல. எனவே இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவு நியாயமானது. அது எல்லோருக்கும் உரிய அந்தஸ்தைக் காப்பாற்றக்கூடியது என்று நான் கருதுகிறேன். குறிப்பாக மன்றத் தலைவர்களுக்கு மேடையிலதான் இடம் அளிக்க வேண்டும். * * நம்முடைய நடைமுறைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் பொருளாகும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்களுடைய கருத்து ஏற்புடையதென்றாலும் கூட ஒரு சொற்றொடரில் தங்களைப் பற்றித் தெரிவிக்கும்போது ** என்று குறிப்பிட்டார்கள். அந்தச் சொற்றொடர் அவர்களுடைய பேச்சில் இடம் பெறக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டை ஆளுகிற பொறுப்பில் உயர்வான இடத்தில் இருப்பவர் முதலமைச்சர். ஆனால் மன்றத்தில் தாங்கள்தான் உயர்ந்தவர்கள். அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 பிப்ரவரி 18

**திரு. பி. எச். பாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, protocol பொறுத்தவரையில் முதலமைச்சர் precedence அதனால்தான். வேறு ஒன்றும் இல்லை. மேலே, கீழே என்பது கிடையாது. 'ப்ரோட்டக்காலில்' வெளியே முதலமைச்சர் ஸ்பீக்கரை விட precedence. அதே மாதிரி ஆளுநர் அவர்கள் இங்கே வரும்போது பேரவைத் தலைவர் அருகே அமர்த்தப் படுகிறார். அதுபோல் எம்.எல்.ஏ. க்களையும் அமர்த்துவதற்கு அனுமதிக்கலாம்.

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுடைய மதிப்பையும், மரியாதையும் பற்றிப் பேசப்படுகிறது. மரியாதை என்பது கேட்டுப் பெறுவதல்ல. தரக்கூடிய முறையிலே நடந்துகொள்வது. ஒன்று One should command respect இன்னொன்று One should nc demand respect என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு உறுப்பினர்களாகவே என்றைக்கும் தொடருவார்கள் என்று சொல்லி, நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொன்ன சொற் றொடரை, முதலமைச்சர் அவர்கள், எடுத்துவிட்டால் நல்லது என்று கூறினார்கள். அது ஏற்புடையது. எனவே அந்த ஒரு வரி மட்டும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நாங்களும் வரிகளை நீக்கி இருக் கிறோம்' என்று சொல்கிறார்கள் (சிரிப்பு) அடுத்து மதிப்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களைத் தொடர்ந்து பேசுமாறு நான் அழைக்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40-வது ஆண்டு சுதந்திர தின விழா நாளில் இங்கே அன்றைக்கு முதலமைச்சர் இல்லாத காரணத்தால்—நாவலர் அவர்கள் இருந்தார்கள்—நாவலர் அவர்களை அவருக்குப் பக்கத்திலே இடம் போட்டு நாங்கள் அமர வைத்தோம். சில நேரங்களில் அந்த "ப்ரோட்டக்காலை" நாங்கள் பின்பற்றுவது வழக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இட ஒதுக்கீடு பற்றி நாம் பின்னாலும் பேசுவோம்.



1989 பிப்ரவரி 18]

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிடுவது வேறு விவகாரம். விழாக் காலங்களில் அல்லது சிறப்பு நிகழ்ச்சிகளில் அது கையாளப்படுவதுண்டு. 'ரொட்டீன் ஒர்க்' என்று சொல்லப்படுகிற எப்போதும் நடைபெறுகிற அந்தப் பணிகளில் அது கையாளப்படக்கூடாது என்பதுதான் இப்போது நடைபெறுகிற வாதம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால்—இதைச் சொல்ல விடாமல் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறுக்கிட்டுவிட்டார்கள். நான் அதைத்தான் இங்கே சொல்ல வந்தேன். ஏற்கெனவே கலசப் பாக்கம், துரிஞ்சாபுரம் போன்ற வடாற்காடு மாவட்டப் பகுதி களில் சட்டமன்ற உறுப்பினர்களைத் தனியாக உட்கார வைத்தார் கள். ஏற்கெனவே இருந்த அரசால் எப்படிக் கொடுக்கப்பட்டது என்றால் பெருந்தலைவருக்குப் பக்கத்திலே, கூட்டத்தை நடத்து வது மூன்று தலைவர்கள் போன்று, ஒரு பக்கம் ஆணையாளர், ஒரு பக்கம் சட்டமன்ற உறுப்பினர், இன்னொரு பக்கத்தில் ஒன்றியத்தின் அல்லது நகராட்சியின் தலைவர் அல்லது பெருந் தலைவர் என்று அமர்த்தப்பட்ட சூழ்நிலையில்தான் அதற்கு மூன் பிருந்த நல்ல சூழ்நிலை கெடுக்கப்பட்டது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களைக் கவுரவக் குறைவாக நடத்தவேண்டும் என்பது இந்த அரசின் நோக்கம் அல்ல. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியது போல் சட்டமன்ற உறுப்பினர்கள் கவுரவிக்கப்படுவார்கள் இந்த அரசால் என்பதை நானும் இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

அதே நேரத்தில் நகராட்சிகளில் பொது சுகாதாரத் துறை நகராட்சி மன்ற குழுவிற்கு கட்டுப்படாமல் அவர்கள் தன்னிச்சை யாக செயல்படுகின்ற நிலைமைகள் இன்றையதினம் தமிழகத்திலே இருந்து வருகின்றது. மத்தியத் துறையைப் போன்று இந்த பொது சுகாதாரத் துறையும் நகராட்சி மன்ற தலைவர்களுக்கு அந்த குழுவிற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்ற வகையிலே சட்டத்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களே இங்கே இந்நேரம் பல்வேறு உறுப்பினர்கள், நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கௌரவம் எப்படியெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். நான் இந்த அரசுக்கு உங்கள் மூலமாக பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே பல்வேறு நகராட்சி மன்றங்களிலே நகராட்சித் தலைவர்கள் எல்லாம் பணியாற்றுகிறார்கள். அவர்கள் நகராட்சி மன்றத் தலைவர்களாகப் பணியாற்றிய காலங்களில், கட்டடங்களில், நகராட்சிகள் அமைப்புகளில் பெயர்களைப் போட்டு அந்த பெயராலே அழைக்கப்படுகின்ற கௌரவம் இருந்தது. காங்கிரஸ் ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகள் ஆண்ட காலங்களில் இருந்தே அது மரபாக இருந்து வந்தது. ஆனால் என்ன காரணத்தினாலேயோ, ஒரு குறுகிய நோக்கத்தோடு, ஒரு உள் நோக்கத்தோடு, ஏற்கெனவே இருந்த அரசு ஒரு உத்தரவைப் போட்டு அப்படி நகராட்சித் தலைவர் இருந்து, அவர் உயிரோடு இருந்தால் அந்த பெயர்களை எல்லாம் அகற்ற வேண்டும் என்ற உத்தரவைப் போட்டு அவர்களுடைய கௌரவங்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. அதனால் எத்தனை தலைவர்கள் வருத்தப்பட்டார்கள் என்பதை என்னைப்போன்றவர்கள் பார்த்தோம். என்னுடைய பெயர் அப்படி எங்கும் இல்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் நம்முடைய அரசு எதிர்காலத்திலாவது ஏற்கெனவே எடுக்கப்பட்ட நகராட்சித் தலைவர்கள் பெயர்களை நகராட்சி சம்பந்தப்பட்ட அமைப்புகளிலே எடுத்திருந்தால், அதைப் பழையபடி இடுவதற்குரிய ஒரு உத்தரவை இந்த அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைய தலைவர்களுக்கு, நகராட்சித் தலைவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படவில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறிய தொகையை அளித்தார்கள். நகராட்சிப் பொறுப்புக்கு வந்தவர்கள் வசதி படைத்தவர்கள் அல்ல. நம்முடைய அரசாங்கம் அந்த அலவன்சை உயர்த்தித்தருகின்ற வகையிலே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், அதை உயர்த்தித் தரவேண்டும். கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் நகரம் மிகப் பெரிய நகரம். மாவட்டத்தினுடைய தலை





நகரமாக விளங்கி வருகிறது. அங்கே பாதாளச் சாக்கடை திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று நகராட்சி மன்றம் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்த வகையில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். வேலூர் நகராட்சியை மாநகராட்சி ஆக ஆக்கவேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார்கள். அந்தப்பக்கத்திலே இருக்கின்ற நகராட்சிகளை எடுத்து இணைத்து எதிர்காலத்திலே மாவட்டத்தினுடைய தலைநகரமாக விளங்குகின்ற வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றியமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று என் உரையை முடிக்கிறேன் வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த நகராட்சி சட்டமுன்வடிவின் மீது என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முன்வருகிறேன். இப்போ இருக்கின்ற பிரச்சினை எல்லாம் சட்டசபை உறுப்பினர்கள் நகராட்சி மன்றத் தலைவர்களோடு உட்காருவதா இல்லையா என்பது பற்றி. நான் கொஞ்ச நாளாக இருந்தேன். நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது எப்படி ஏற்பட்டது என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். யாரும் சொல்ல மாட்டேன் என்கின்றார்கள். எதற்காக ஏற்பட்டது என்று, எப்போது ஏற்பட்டது என்று சொல்லவில்லை. நகராட்சிகள் 125 ஆண்டுகளாக ரிப்பன் பிரபு காலத்திலிருந்து இருக்கின்றன. அப்படி இருக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் நகராட்சி தலைவர்களோடு உட்காருவதற்கு சர்க்கார் அளவிலே எதாவது உத்தரவு இருக்கிறதா? அது ஏன் போடப்பட்டது? நீங்கள் பேசமாட்டேன் என்கின்றீர்கள், அங்கே போய் இருக்கமாட்டேன் என்கின்றீர்கள், என்றுகூட சொல்லலாம். அது வேறு விஷயம். உறுப்பினர்கள் எங்கு இருந்தாலும் மதிப்பு இருக்கும். தங்கத்தை சாக்கடையிலே போட்டால் அதற்கு மதிப்பு குறைந்துவிடுமா? வைரத்தை இன்னொரு இடத்திலே புதைத்துவிட்டால் அந்த வைரம் என்ன மங்கியா போகும்? அதைப் பற்றி கவலையில்லை. உட்காரும் இடம் பற்றிய பிரச்சினை இங்கே வந்திருக்கிறது. நானும் சட்ட மன்ற உறுப்பினன். எனக்கும் உட்காருகின்ற ஆசை இருக்கிறது தான். வோட்டு வாங்கி, எத்தனையோ ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அப்படி செலவழித்தால்தானே சேர்மன்

ஆக வரமுடியும். அதைப்பற்றி எல்லாம் வருந்தப்படுவதற்கு இல்லை. வெகு நாட்களாக நகராட்சித் தேர்தல்கள் நடக்கவில்லை. அதற்காக சத்தம், சண்டை எல்லாம் போட்டு நகராட்சித் தேர்தல்கள் முடிந்துபோயிற்று. அதிலே ஒரு கட்சி நிறைய இடத்தில் வந்திருக்கிறது. ஆளுங்கட்சியாக இருந்தவர்கள் கொஞ்சம் குறைவாக வந்துவிட்டார்கள். ஆனால் ஆளுங் கட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய இருந்தார்கள். ஆனால் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள், நகராட்சிகளில் தலைவர்களாக வந்துவிட்டார்கள். அவர்களுக்கு எப்படியாவது உரிமை கொடுக்க வேண்டுமென்று நினைத்தார்களோ என்னவோ, நான் அப்படி நினைக்கிறேன். நானும் 1948 ஆம் ஆண்டிலிருந்து நகராட்சியில் உறுப்பினராக இருந்திருக்கிறேன் என்றால் என் வயது என்ன என்று நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். அப்பொழுது எல்லாம் இம்மாதிரி உத்தரவு கிடையாது. நகராட்சியில் போய் எம்.எல்.ஏ. உட்காரக் கூடாது என்று எந்த ஓர் உத்தரவும் அப்போது கிடையாது. எம்.எல்.ஏ போய் அங்கே உட்காரவும் மாட்டார்கள். இப்பொழுது தான் ஓர் உத்தரவின் மூலம் அங்கே போய் உட்காரக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். இதுபற்றி என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். பொதுவாக நகராட்சியில் எம்.எல்.ஏ. யாரும் போய் உட்காருவது கிடையாது. அப்படி உட்கார்ந்தால் நிச்சயமாக மதிப்பு கிடையாதுதான். ஒவ்வொரு எம்.எல்.ஏ. தொகுதியிலும் 2 அல்லது 3 யூனியன்கள், நகராட்சி எல்லாம் இருக்கின்றன. ஆகவே, எம்.எல்.ஏ. க்களுக்கு தகுந்த இடம் கொடுக்க வேண்டும். எம்.எல்.ஏ. அங்கே போனால் தரையில் உட்கார வேண்டுமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். உறுப்பினர்களுக்கு மதிப்பு வேண்டுமென்றால், அந்தஸ்து வேண்டுமென்றால் நகராட்சிக்கு போனால் தான் கிடைக்கும் என்று நினைக்கத் தேவையில்லை. ஆனாலும் நம்முடைய தமிழ் இனத்தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுப்பினர்களின் உரிமைகளைக் காப்பாற்றுவார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்து, இன்றைக்கு முதல் கிரேட், இரண்டாவது கிரேட் முனிசிப்பாலிட்டி, செலக்ஷன் கிரேட் முனிசிப்பாலிட்டி, ஸ்பெஷல் கிரேட் முனிசிப்பாலிட்டி அப்புறம் மாநகராட்சிகள் எல்லாம் இருக்கின்றன. மாநகராட்சிகள் பற்றி அந்த சட்டமுன்வடிவின் போது பேசலாம் என்று கருதுகிறேன். நகராட்சிகளில் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 5 வருடத்திலிருந்து 3 வருடம்



ஆக்கினார்கள். இப்பொழுது மறுபடியும் 5 வருடமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யாராக இருந்தாலும் இப்படி 5 வருடங்கள் என்று ஆக்கியிருப்பதை ஒத்துக்கொள்வார்கள். இது ஒத்துக் கொள்ள வேண்டிய ஒன்றுதான்.

அடுத்து. அங்கே சில கமிட்டிகள் இருக்கின்றன. அதில் ஒன்று **Tax Appeal Committee** அதுதான் நகராட்சிகளில் வருவாய் உயர்வுக்குக் காரணமாக இருப்பது. ஏற்கெனவே இந்த வரி விதிப்பு மேல் முறையீட்டு கமிட்டியில் 7, 9, 13 என்கிற விதத்தில் மெம்பர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் எல்லாம் ஒற்றுமையாக, கூடுமானவரை கட்சி வேறுபாடு இல்லாமல், அங்கே நடப்பது வெளியே தெரியாமல்—என் நகராட்சியைப் பொறுத்த வரையில் சொல்கிறேன்—தவறுகள் நடந்தாலும் வெளியே தெரியாமல் (சிரிப்பு) நல்லபடியாக செயல்படுவதுண்டு. அங்கே சுதந்திரா கட்சி உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், எங்களைப் போன்ற ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இடம் பெற்றதுண்டு. உள்ளே என்ன நடந்தாலும் வெளியே தெரியாதவாறு நாங்கள் எல்லாம் ஒற்றுமையாக செயல்பட்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கோ இங்கே இருக்கிற நகராட்சித் தலைவர் ஒரு 'பொம்மை' மாதிரி உட்கார்ந்திருக்கிற நிலைமை இருக்கிறது. அதிலே பெரிய தவறு நடந்திருப்பதால், இன்றையதினம் இந்த சட்டத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

* திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பெருமை மிக்க, சர்வ அதிகாரம் படைத்த நகராட்சித் தலைவரை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் 'பொம்மை' என்று சொல்லலாமா? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. தங்கபாண்டியன் எப்போதும் நான் பேசும் போது குறுக்கிடாமல் விடமாட்டார். இப்போதும் நான் 'பொம்மை மாதிரி' என்றுதான் சொன்னேனே தவிர 'பொம்மை' என்று சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் நகராட்சிகள் பற்றிய மேலும் விவரங்களை இங்கே சொல்லியிருந்தால் மேலும் நான் சந்தோஷப்பட்டிருப்பேன். ஆக, வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு சம்பந்தப்பட்ட திருத்தங்களை நான் ஆதரிக்கிறேன்.

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 18

அதே நேரத்தில் இன்னொரு அபிப்பிராயம். வரி விதிக்கின்ற அதிகாரத்தைப் பொறுத்தவரையில் அதற்கான அதிகாரம் கமிஷனரிடமிருந்து தலைவரிடம் கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிலையில் கமிஷனர் வரி விதித்தால், அவரிடம் இதற்கான அதிகாரம் இருப்பதால் ஏன் இவ்வளவு போட்டீர்கள் என்று யாரும் கேட்க முடியாது. அப்படி அவர் போட்ட பிறகு அதைக் குறைக்குமாறு revision முறையீடு உடனே போட வேண்டும். கொலை பண்ணுகிறவன் கூட நீதிபதியிடம் வந்து நான் கொலை பண்ணவில்லை, என் கை பண்ணியது, என் அரிவாள் பண்ணியது என்றுதான் சொல்வான். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வரி விதிப்பைப் பொறுத்தவரையில் தனியாக, கமிஷனருக்கு அதற்கான அதிகாரம் இல்லை. Revision அதிகாரி போடப்பட்டு அவர்கள்தான் வரியை நிர்ணயிக்கிறார்கள்

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு தலைவர் revision அவர்களே, என்பதைப் பற்றிதான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்வது வரி விதிக்கின்ற அதிகாரமே தலைவரிடம் இருந்ததே அதைப்பற்றிதான். அதை தான் சட்டத் திருத்தம் கொண்டு வந்து திருத்தினீர்களே. நான் இங்கே சொல்வது ரிப்பன் காலத்தில் இருந்ததே Appeal Committe அதைப்பற்றிதான். மாநகராட்சி வந்து 100 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நூற்றாண்டு விழா கூட நடைபெற்றது. 10 நாட்கள் நடைபெற்ற அந்த விழாவில் எனக்குக் கூட வேண்டிய வசதியை செய்து கொடுத்தார்கள். அப்போது நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதல்வராக இருந்தார்கள். நான் நகராட்சித் தலைவராக இருந்தேன். அதைப் பற்றி

(முற்பகல் 10 40)

சர்ச்சை செய்யத் தேவையில்லை. ரிவிஷன் யார் பண்ணினால் என்ன? அப்பீல் பற்றித்தான் கவலை. அப்பீல் பற்றித்தான் இப்போது சட்டத் திருத்தம். அப்பீல் போடும்போது, இத்தனை பர்சன்டேஜ் வரி குறைக்கலாம் என்று ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். அந்த ஜி.ஓ. இருக்குமென்று நினைக்கிறேன். அப்படி குறைக்கும்போது சரியான கமிஷனராக இருந்தால் ஆபத்துக்குப் பாதகமில்லை என்று போடலாம். விருப்பு, வெறுப்பு உள்ள



1989 பிப்ரவரி 18]

கமிஷனராக இருந்தால், இதைப் பண்ணவில்லை, அதைப் பண்ண வில்லை, விட்டேனா பார் என்று சொல்லும் கமிஷனராக இருந்தால், நிர்வாக அதிகாரியாக இருந்தால், ஒன்றுக்கு நான் காகப் போடலாம். அதைக் குறைக்கத்தான் அப்பீல் கமிட்டி ரிவிஷன் போட்டு அதுவும் முடியவில்லை என்றால் அப்பீல் போடு கிறோம். அந்த அப்பீல் போடும்போது, குறிப்பிட்ட பர்சன்டேஜ் குறைக்கலாம், அதற்குமேலே குறைக்க சட்டமில்லை. சில நகராட்சிகளில் நூற்றுக்கணக்கான கேஸ்கள் இருந்தால், அவற்றைக் கலைக்கலாம் என்று ஜி.ஓ. இருக்கிறது. அதைக்கூட திருத்தலாம். இதிலே தலைவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம். அப்பீல் கமிட்டி ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வரிக் குறைப்பு செய்யலாமென்று நிர்ணயம் செய்வதைவிட, வரி போடும் கட்டத் திலேயே அப்படிச் செய்யாளவிற்கு ஜி.ஓ. போட்டால் சிரமங் களைக் குறைக்கலாம்.

அடுத்து நிதி நிலைமை. வெகு நகராட்சிகளில் நிதி நிலைமை சரியாக இல்லை. 96 முனிசிபாலிட்டிகள். 4 நகரியங்கள் இருக் கின்றன. இதில் 80 சொச்சம் நகராட்சிகளில் பணமில்லை. 80 சொச்சம் நகராட்சிகளில் பற்றாக்குறைதான். அந்தப் பற்றாக் குறை நிதி நிலைமையைச் சரிக் கட்ட வேண்டாமா? அங்கேயே கமிட்டி போட்டு, முடிவெடுத்து, இங்கே வந்து 50 இலட்சம் ரூபாய் கொடு, சம்பளம் கொடுக்கக் கூட பணமில்லை என்று சொல்லுகிறார்கள். வாத்தியார்களுக்கு நேரடியாக இப்போது சம்பளம் கொடுக்கிறோம். முன்னால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க பணம் இல்லாமல் இருக்கும் நிதி நிலைமையைச் சரிக் கட்ட 7 நகராட்சிகளில் ஒரு முறையைக் கையாண்டார்கள். எப்படி சரிக் கட்டினார்கள் என்றால் மின்சார விநியோகத்தை எடுத்துக் கொண்டார்கள். முன்பு இதை பிரைவேட்டாக நடத்திக் கொண்டிருந்தார்கள். வேலூர் கார்ப்பரேஷன், தஞ்சாவூர், கிழக்கு ராமநாதபுரம் போன்று சில பிரைவேட் ஸ்தாபனங்கள் மின்சாரத்தை வாங்கி விநியோகம் செய்தார்கள். சர்க்கார் மின்சாரத்தை உற்பத்தி செய்தவுடன், இவர்களிடம் மின்சாரத்தை வாங்கி. சில முனிசிபாலிட்டிகள் விநியோகம் செய்யும்போது, லாபம் அதிகமாக வைத்து விற்றார்கள். இப்படி 5, 6 முனிசிபாலிட்டிகள் விநியோகத்தை எடுத்துக்கொண்டார்கள். அப்படிப்பட்ட நகராட்சிகளின் நிதி நிலைமை சரியாக இருக் கிறது. தஞ்சாவூர், கரூர் முனிசிபாலிட்டிகளின் நிதி நிலைமை நன்றாக இருக்கிறது. மின்சார விநியோகத்தில், இத்தனை

இலட்சம் யூனிட்டுகள் விநியோகம் செய்கிறோம் என்று மொத்த மாக எடுத்துக் கொண்டால் சல்லீசாகக்கூட கொடுக்கிறார்கள். அதில் குடிசைகளுக்கு இவ்வளவு, விவசாயத்திற்கு இவ்வளவு— நகராட்சிகளில் விவசாயத்திற்கு அதிகமாக இராது—இண்டஸ் டிரீசுக்கு இவ்வளவு என்று விநியோகம் செய்தால், நிதி நிலைமை முன்னேற்றத்திற்கு ஒரு வழியாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, ரோடுகள். நகராட்சிகளில் ரோடுகளை கூடிய மட்டும் பராமரிக்க முடியாது. இன்றைக்கு ஜல்லி, தார் விலையைப் பார்த்தால் நகராட்சிகளால் பராமரிக்க முடிய வில்லை. ஆனால் இன்றைக்கு பஸ், லாரி, ஸ்கூட்டர், மோட்டார் போன்ற வாகனங்களுக்கு வரி வாங்குவது சர்க்கார், நம்முடைய சர்க்கார். சட்டமன்றத்திலே சண்டை போடுகிறோமே, இந்த சர்க்கார். முனிசிபாலிட்டிகளின் ரோடுகளை மோட்டார், ஸ்கூட்டர், லாரிகள் தேய்த்துக்கொண்டு போகின்றன. பத்து ரோடுகள் முனிசிபாலிட்டியில் இருந்தால், 10 வருஷத்திற்கு ஒரு ரோடை எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்லும்போது, நிதி நிலைமை எப்படி சரியாக இருக்கும்? ரோடுகள் பராமரிப்பை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது ரோட்டைத் தேய்க்கும் எந்த வாகனமாக இருந்தாலும், அந்த வாகன வரியி லிருந்து, அந்த வருமானத்திலிருந்து ஒரு பங்கு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் சர்க்காரே பூரா ரோடுகளையும் பராமரிக்க வேண்டும். (மணி அடிக்கப் பெற்றது) நகராட்சிகளில் கொஞ்சநாள் இருந்திருக்கிறேன். உள்ளதைச் சொல்ல வேண்டாமா? எல்லோருக்குமா தெரியும் நகராட்சி ரோடுகளைப் பற்றி?

அடுத்து, வசூல் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். சர்க்காரில் சட்டங்களைப் போட்டு, சில வருவாய்களை வைத்துக்கொண்டு நீங்கள் முனிசிபாலிடிகளை நடத்துங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அது பலபட்டறை. மார்க்கெட்டிங் பீஸ் வசூல் பண்ணிக்கொள்ள அனுமதிக்கிறார்கள். சட்டவிதிகளின்படி வசூல் செய்யப்படுகிறது. நான் இருக்கிற ஸ்ரீரங்கம் பெரிய பில் கிரிம் சென்டர்—டூரிஸ்ட் சென்டர். டூரிஸ்ட் ஸ்தாபனங்கள் நிறைய இருக்கின்றன. ஒரு நாளைக்கு அங்கே டூரிஸ்ட் பஸ்கள் நூற்றுக் கணக்கில் வருகின்றன. அதன் காரணமாக அங்கே இருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகத் தெரிய





வில்லை. டூரிஸ்ட் சென்டர் என்பதால் எந்த மாற்றமும் வந்து விடவில்லை. அங்கே ஒரு பஸ்ஸுக்கு 5 ரூபாய் என்று போட்டு, வசூலிப்பவர்கள் எவ்வளவோ வசூலித்துக் கொள்கிறார்கள். ரொம்பவும் குழம்பிப் போய், ஸ்தாபனங்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் சர்வீஸ் ஸ்தாபனங்களிடமிருந்தும் கமிஷன ரிடம் புகார் பண்ணினால், இரண்டொருத்தர்தான் 100 அல்லது 200 கொடுக்கிறார்கள். அவர்கள் 1,000 கணக்கில் வசூலித்துக் கொள்கிறார்கள். எங்கள் ஸ்ரீரங்கம் நகரை எடுத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு வடநாட்டிலிருந்து வருகிற பஸ்களுக்கு கணக்கே இல்லை. வடநாட்டுக்காரன் என்ன பண்ணுவான். அவனுக்கு இவன் பாஷை தெரியவில்லை. இவனுக்கு அவன் பாஷை தெரியாது. இதன் காரணமாக இரண்டு பேருக்கும் எப்போதும் சண்டை தகராறு. கடைசியில் எப்படியோ தொலைந்து போ என்று பஸ்ஸுக்கு 5 ரூபாய் என்று இருந்தாலும்கூட, 10 ரூபாயோ 20 ரூபாயோ வாங்கிக் கொண்டு போ என்று கொடுத்து விடுகிறார்கள். இப்படி வசூல் செய்து காண்ட்ராக்டர்கள் பிழைத்துக்கொள்கிறார்கள். இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் ஏற்படுகிற தவறான தகராறுகளை நீக்க நாம் வகை செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கலப்படம். கலப்படம் என்பது எல்லாவற்றிலும் வந்துவிட்டது. அரசியலில் கூட வந்துவிட்டது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அருள்கூர்ந்து, சட்டமுன் வடிவு தொடர்பாகப் பேசினால் சிறப்பாக இருக்கும். ஏனென் றால் இது பொது உரை அன்று. இன்னும் இரண்டு சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. எனவே அதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சில மணித் துளிகளில் முடித்துக் கொள்ள வேண்டு மென்று உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்**: அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களை சேர்மென்களோடு உட்கார வைப்பதுபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான்கூட தென்னாற்காடு மாவட்டத் தைச் சார்ந்த அங்கத்தினரிடம் விசாரித்துக் கொண்டிருந்தேன். அப்போது திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஆர்.டி.எல்.ஏ. மினிஸ்டர் என்று நினைக்கிறேன். அப்படி ஒரு உத்தரவுபோடும் போது மனக் கசப்பு ஏற்படுகிறது. அப்படி உட்கார வேண்டிய ஒரு ஸ்திதிகூட வரும். உட்கார வேண்டாமே என்றுகூட தோன்றும். இருந்தாலும் அவர்களுக்கு எந்த அந்தஸ்தில், எப்படி

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 பிப்ரவரி 18

உட்கார வைக்க வேண்டும் என்று பார்த்து, சேர்மெனோடு உட்கார வைப்பதா, இல்லை அதற்கு மேலேயே அல்லது அதற்கு மேலேயே அல்லது நடுநிலையிலா என்று ஆலோசித்து எப்படியும் ஒரு பங்கம் ஏற்படாமல் ஒரு ஆசனத்தில் நல்லபடியாக அமர்த்தும்படி தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளின ஆயுட் காலத்தை நீடித்துக் கொடுக்க வேண்டுமென்ற இந்தச் சட்டத் திருத்தத்தின் பேரில், மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை யெல்லாம், நகராட்சிகளின் நன்மையைக் கருதி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் நகராட்சிகளின் எதிர்கால நன்மையைக் கருதியும், நகரங்களில் வாழ்கிற மக்களின் நன்மையைக் கருதியும், இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை யெல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்ன கருத்துக்களுக் கெல்லாம் விரிவாக நான் பதில் சொல்லத் தேவையில்லை என்றாலும், அவைகளெல்லாம் அலட்சியப்படுத்தக் கூடிய ஒன்று என்று இந்த அரசு நிச்சயமாக எடுத்துக் கொள்ளாமல், அவற்றை யெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, தேவையானவற்றை அமுல் படுத்தவும் இந்த அரசு நிச்சயமாகத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் இதுதான். இம்மாநிலத்தில் 98 நகராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் தேர்தல்கள் கடைசியாக 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டு காலம் 1986-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதி நண்பகலில் தொடங்கியது. அது இவ்வாண்டு 1989-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதி நண்பகலில் முடிவடைய இருக்கிறது. 1971-ம் ஆண்டிற்கு முன்பு நகராட்சி மன்றங்களுடைய பதவிக்



1989 பிப்ரவரி 18] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

காலம் மூன்றாண்டுகளாக இருந்தது. அப்போது தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இப்போது இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்றிருந்த நேரத்தில் நகராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்தினார்கள். அந்தச் சமயத்தில் பதவியிலிருந்த உறுப்பினர்கள் பதவிக்காலமும் அவ்வாறே மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப் பெற்றது. ஆனால் 1985-ம் ஆண்டு அரசு நகராட்சி மன்றங்களின் பதவிக்காலத்தை ஐந்தாண்டுகளிலிருந்து நான்காண்டுகளாக குறைத்தது. 1986-ம் ஆண்டு மீண்டும் நகராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நான்காண்டுகளிலிருந்து மூன்றாண்டுகளாகக் குறைக்கப்பட்டது. நகராட்சிப் பகுதிகள் அளவில் சிறியவைகளாக இருப்பதால் நகரமன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களுக்குள்ள மூன்றாண்டு காலமுள்ள பதவிக் காலத்தில் திறமையாகச் செயல்பட முடியுமென்று கருதியோ என்னவோ அப்படி செய்தது. அல்லது இதில் என்ன உள் நோக்கம் இருக்கிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அப்போது பதவிக்காலத்தை மூன்றாண்டுகளாகக் குறைத்தார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக பல கோரிக்கைகள் இந்த அரசுக்கு வந்ததையொட்டித்தான் இப்போது பதவிக் காலத்தை ஐந்தாண்டுகளாக உயர்த்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் அதாவது மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கும் பதவிக்காலம் ஒரே சீராக அதாவது ஐந்தாண்டுகளாக இருக்க வேண்டுமென்று தற்போது அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்காக 1920-ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் நாம் திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது 1920-ம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தையே நாம் வைத்துக் கொண்டு இருப்பதா, புதியதாக சட்டங்கள் இயற்றக்கூடாதா என்று வினா எழுப்பினார்கள். எப்போதும் மூலச்சட்டத்தில் நம்முடைய தேவைக்கேற்ப அப்போதைக்கப்போது சட்டங்களைத் திருத்திக் கொள்வது பழக்கமாகும். அந்த அடிப்படையில் தான் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் நகராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும்

உறுப்பினர்கள் பதவிக்காலம் தற்போது மூன்றாண்டு காலம் என்று இருப்பதை ஐந்தாண்டுகள் என்று திருத்த வேண்டுமென்றும் இவ்வாண்டு மார்ச் மாதம் 3-ம் தேதி பதவிக்காலம் முடிவடையவிருக்கும் நகராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிக் காலத்தையும் அவ்வாறே மேலும் இரண்டாண்டுகள் அதாவது 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதி நண்பகல் வரை நீட்டிக்கவும் இவ்வரசு தீர்மானித்துள்ளது. அந்த வகையில் இந்த 1989-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை இங்கே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தகுதியைக் குறைக்கிற வகையில் அவர்கள் உட்காரும் இடம் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது என்றும், அவர்களுக்கு உரிய மரியாதை காட்டப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆனால் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல அவரவர்களுக்குரிய மரியாதையை நிச்சயமாக இந்த அரசு தரும் என்பதை, இந்த அரசின் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1961-ஆம் ஆண்டு பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பிக்கப்பட்டபோது—அப்போதிலிருந்து நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து இருக்கிறேன், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் சொன்னதைப் போல, 3 முறை சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றியிருக்கிறேன், மேலவையிலே 6 ஆண்டுகாலம் பணியாற்றியிருக்கிறேன்—மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தது. அப்போதும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கூட்ட அறிவிப்பு வரும். நாங்கள் முன்னாலே சென்று, நாற்காலி போடப்பட்டிருப்பதிலே முன் வரிசையிலே அமருவோம். அப்போது யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற உறுப்பினர்களோ, அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களோ நம்முடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அப்போதும் வாய்ப்பு இருந்தது. அந்தக் கருத்துக்களை அந்த ஒன்றியக் குழு ஏற்றுக்கொள்வதற்கான சூழ்நிலையும் இருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புதான் ஊராட்சி, உள்ளாட்சி அமைப்புகள். அதைப்போல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட



மாமன்றம்தான் இந்தச் சட்டமன்றம். ஆகவே இதிலே பணியாற்றக்கூடிய உறுப்பினர்கள், அவர்கள் சார்ந்துள்ள அந்தத் தொகுதியிலுள்ள பிரச்சினைகளை அந்த ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்திலோ அல்லது நகர மன்றக் கூட்டத்திலோ கலந்து கொண்டு, அவர்கள் கருத்து சொல்ல உரிமை படைத்தவர்கள். அவர்களைத் தடுக்க இயலாது. அப்படித் தடுக்க வேண்டும், அவர்களுக்கு உரிமை இல்லை என்று இந்த அரசின் சார்பிலே சொல்ல நாங்கள் நிச்சயமாக முன்வர மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் என்ன நிலைமை இடையில் ஏற்பட்டுவிட்டது என்றால்—இங்கே சொன்னதற்காக நான் இந்த விளக்கத்தைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது—சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஒன்றியக் குழுக் கூட்டத்திலோ அல்லது நகர மன்றக் கூட்டத்திலோ, இடதுபுறம் ஆணையாளர், வலதுபுறம் சட்டமன்ற உறுப்பினர்கள், மத்தியிலே அந்தக் குழுவினுடைய தலைவர்கள் உட்காரவேண்டும் என்று போடுகிறபோது, இப்போது இந்த அரசுக்கு வந்திருக்கிற தகவல், சில இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைத்தான் கீழேயிருக்கிற அதிகாரிகள் கேட்க வேண்டிய நிலைமைகூட ஏற்பட்டுவிடுகிறது. அப்போது அந்த ஒன்றியக் குழுத் தலைவருக்கு மரியாதை இல்லாமல் போய்விடுகிறது, இது அவ்வளவு தேவையில்லை. அது அவர்களுக்கு உரிய இடம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்வரிசையிலே போட்டால், அங்கே உட்கார்ந்து அவர்கள் சொல்லலாம். ஆகவே அந்தப் பிரச்சினை வரக்கூடாது.

இன்னொன்று. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த ஊராட்சி ஒன்றியக் குழுவிடத்திலே தனியாக அறை ஒதுக்க வேண்டும் என்று கூட சொல்லப்பட்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அப்படியானால், சட்டமன்ற உறுப்பினர்கள் இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, நாங்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு தனி இடம் அங்கே ஒதுக்கப்படுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் போய் அந்த அறையில் உட்கார்ந்து கொண்டால், அந்தப் பகுதி மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் குழுத் தலைவரை, அங்கேயிருக்கிற ஆணையாளரோ, அல்லது மற்ற அதிகாரிகளோ கூட சென்று பார்க்க மாட்டார்கள். ஆளும் கட்சியினுடைய தயவு இருந்தால்

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 பிப்ரவரி 18

போதும் என்று உரிய சட்டமன்ற உறுப்பினரைத்தான் போய்ப் பார்ப்பார்கள். இதனால் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பிரதிநிதியினுடைய மனம் புண்படாதா என்பதை நாம் எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் அவர்களுக்கு என்று தனி அறை தேவையில்லை, அவசியம் இல்லை. அதைப்போல, அவர்கள் உட்காருவதிலே, கூட்டத்திலே கலந்து கொள்ள வேண்டியதிலே, அவர்கள் பக்கத்திலே உட்காரவேண்டும் என்பதற்குப் பதிலாக, 'முன்வரிசையிலே அவர்கள் உட்காருவதற்கு நாற்காலி போடப் பட்டு, அதிலே அமர்ந்து கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பக்கத்திலேதான் உட்கார வேண்டும் என்ற அவசியம் இல்லை என்ற அளவிற்குத்தான், அந்தக் கருத்துக்களை நாங்கள் இங்கே எடுத்து வைத்து இருக்கிறோம்.

(முற்பகல் 11-00)

இன்னொன்றை மாண்புமிகு உறுப்பினர் பக்கப்சந்த் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். மூன்று ஆண்டுகளாக இருப்பது ஐந்து ஆண்டுகளாக ஏன் நீட்டிக்கப்பட்டது, அதில் மக்கள் கருத்து கேட்கப்பட்டதா என்று கேட்டார். அதைப் போல் காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு ஒரு உறுப்பினரும் கூட இங்கே திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே மக்களுடைய கருத்தை எல்லாம் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்று சொன்னால், மக்களுடைய பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றுத்தான் இந்த ஆட்சி இங்கே அமைந்திருக்கிறது. ஆகவே மக்களுடைய எண்ணத்தைத்தான் இப்போது இந்த ஆட்சியின் சார்பாக நாங்கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத் திருத்தத்தை நிறை வேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.



1989 பிப்ரவரி 18] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஆ) மாநகராட்சிச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (தனிவகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

---

* 15—2—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1989 பிப்ரவரி 18

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் :

"That the Tamil Nadu Municipal Corporation Laws (Special Provisions and Amendment) Bill, 1989 (L.A. Bill No. 2 of 1989) be circulated for eliciting public opinion".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, இன்னும் இரண்டு சட்ட முன்வடிவுகள் இருப்பதனால் இப்போது இதன் மீது விவாதம் தொடங்குகிறது. பேசுகின்ற உறுப்பினர்கள் வரையறை வைத்துக்கொண்டு, சுருக்கமாகப் பேசி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. உ. ரா. வரதராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மதுரை, மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கான தேர்தலை நடத்துவதற்காக இந்த அரசு முன்வந்திருப்பதற்கு கம்யூனிஸ்டு மார்க்சிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய வரவேற்பையும், பாராட்டுதல்களையும் நல்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1919 ஆம் ஆண்டுச் சட்டம் இருந்து நீண்ட காலமாக செயல்பட்ட மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு, தேர்தல் நடைபெறவேயில்லை. 1971-லே இருந்த மதுரை மாநகராட்சிச் சட்டம் அமலுக்கு வந்து, அங்கேயும் இடைப்பட்ட காலத்திலே தேர்தல் நடைபெறவேயில்லை. கோவை மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் 1981-லே சட்டம் வந்தது. ஆனால் கோவை மாநகர மக்கள் அப்படி ஒரு நகராட்சியை இதுவரை நாங்கள் பார்த்ததேயில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு இருக்கும் நிலைமைகளைப் போக்குவதற்கு இந்த அரசு முன் வந்திருப்பதற்கு நான் பாராட்டை நல்குகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கின்றபோது 18 ஆண்டாக சட்டத்திலே வகை இருந்தும், இப்போது இந்தத் தேர்தலுக்காக மீண்டும் 21 ஆண்டுகளாக அதை மாற்றுவதற்கு உண்டான காரணம் கூறப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதிலும் இருக்கக்





கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்லாம் தேர்தல் நடந்தபோது உள்ளாட்சி அமைப்புகள் அத்தனையிலுமே 18 ஆண்டுகளிலே தமிழக இளைஞர்கள் வாக்களிக்கவில்லை. மாறாக, மாநகராட்சி இளைஞர்களுக்கு மட்டும இந்த வாய்ப்பு இல்லாமல் செய்வது சரியா என்பதை ஆட்சியாளர்களும், அமைச்சர்களும் முதலமைச்சர் அவர்களும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணம் வாக்காளர்களுடைய குறைந்தபட்ச வயது 18 என்று கொண்டு புதிய வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கு நீண்டகாலம் ஆகக்கூடும் என்பது தான். ஏற்கெனவே மாநகராட்சியினுடைய தேர்தல்கள், இங்கே முஸ்லீம் லீக் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ரம்சான் தொழுகைக் காலத்திற்குப் பின்னாலே, மே மாதத்திலே நடைபெறலாம் என்றும அதற்குரிய திருத்தத்தை அமைச்சர் அவர்களும் இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஆட்சி பரப்பு பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலையே நாம் எடுத்துக்கொண்டு நடத்துவதாக இந்த முன்வடிவிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலேயும் கூட 1989-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலே இருந்து யார் யாரெல்லாம் 21 வயது நிரம்பப் பெற்றிருக்கிறார்களோ, அவர்களுடைய பெயரும் சேர்க்கப்பட்டுத்தான் இந்தத் தேர்தல் நடைபெறும் என்று இந்த முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது.

பட்டியல் தயாரிப்பதற்கு, முந்தைய அரசு, ஆளுநருடைய அரசுக்கு முன்னாலே இருந்த அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்பது இந்த அவையினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது பாராளுமன்றத்திற்கான வாக்குரிமையை 18 வயதாக குறிப்பிட்ட பிறகு, பிப்ரவரி திங்கள் பத்தாம் தேதியிலிருந்து புதிய பட்டியல் தயாரிப்பதற்கான வேலை தொடங்கியிருக்கிறது. அதில் மே மாதத்தினுடைய கடைசி வாரத்திலே இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிற காரணத்தாலே, அந்தப் பட்டியல் தயாரிக்கப்படுவதை துரிதப் படுத்தி—மே மாத முதல் வாரத்திற்குள்ளாகவே அந்தப் பட்டியல் தயாரிப்பதற்கு இயலும் என்றுதான், அது தயாரிப்பதற்கான கால அட்டவணையைப் பார்க்கும்போது தெரிகிறது—வரைவுப் பட்டியல் தயாரித்த பிறகு கிட்டத்தட்ட 5 வாரங்கள், விட்டுப் போனவர்களை சேர்ப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலவரையறையை

சுருக்கினால் இந்த 3 மாநகராட்சிகளுக்கும் 18 வயதிற்கு உட்பட்டோர் பட்டியலை மே திங்கள் முதல் தேதிக்குள்ளாகவே தயாரிக்க முடியும் என்ற சாத்தியக் கூறு இருப்பதால், அப்படிப்பட்ட பட்டியலை வைத்துக் கொண்டு, 18 வயதிற்குரிய மாநகராட்சியினுடைய இளைஞர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும். அந்த இளைஞர்கள் தான் தமிழகத்திலே இப்போதைய ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு கடுமையாக உழைத்தவர்கள் என்ற உணர்வையும் எடுத்துக்கொண்டு, இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துகிறபோது, அப்படி நடத்தினால் கூட ஜூன் மாதத்திற்குள்ளாகவே ஜூன் மாத முதல் வாரத்திலேயே நடத்த முடியும் என்று எங்களுடைய உறுப்பினர்கள் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறார்கள். உள்ளாட்சிக்கு தேர்தல் உண்டு. ஊராட்சிக்கு தேர்தல் உண்டு, நகராட்சிக்கு தேர்தல் உண்டு, ஊராட்சி ஒன்றியத்திற்கு தேர்தல் உண்டு, மாநகராட்சிக்கும் இப்போது தேர்தல் வரப்போகிறது. ஆனால் நகராட்சி, நகரியங்கள் என்ற ஒன்றிற்கு மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு எதுவுமே இல்லாமல் செயல்பட்டு வருவதை நான் மெத்தக் கவலையோடு இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நிதி ஆதாரமும் வருவாயும் அதிகம் உள்ள அமைப்புகளாக இந்த நகராட்சி, நகரியங்கள் பலவும் இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற முறைகேடுகள் பற்றி பரவலாக குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன என்கிறபோது அத்தகைய நகராட்சி, நகரியங்களையும், ஒன்று நகராட்சியாக மாற்ற வேண்டும் அல்லது நகராட்சி நகரியங்களுக்கு தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்பைக் கொண்டு வர வேண்டும் என்பதைப் பற்றி இந்த அரசு ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே மேயர் தலைவர், மாநகராட்சித் தலைவர் தேர்தல் என்பது கடந்த பல ஆண்டுகளாக ஜாதி அடிப்படையிலே, இன்ன ஜாதி இன்ன முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையிலே தான் இருந்து வருகிறது. நம்முடைய அரசியல் சட்டத்திலேயும் சரி மற்ற ஏற்பாடுகளிலேயும் சரி தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றும் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளிலே இடம் ஒதுக்





கப்பட்டுள்ளது. ஆனால் மேயர் என்கிற தலைவரைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஜாதியும் ஒரு குறிப்பிட்ட காலத்திலே பதவி ஏற்க வேண்டுமென்று அந்தப் பழைய முறை தொடர வேண்டுமா என்பதைப்பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டும், அத்தகைய மரபு, மரபாக இருக்கிற காரணத்தாலே அது மாற்றப்பட வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சி தேர்தல் நடக்கிற காரணத்தையொட்டி மாநகராட்சி பகுதிகளிலே வந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்சினையை, மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றினுடைய பரிசீலனைக்கு அவை உட்படுத்தப்படும் வரை தள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிசைமாற்று வாரியத்தின் கீழ் தமிழ்நாட்டுப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், உலக வங்கி நிதியுதவியோடு நடத்தப்படுவது, அங்கே பட்டா வழங்குவதற்காக நிதி வசூல் நடத்தப்படுகிற முன் வைப்புத் தொகை என்பது அதிகாரப் பற்றற்ற தனி நபர்களுடைய உதவியோடு சில அதிகாரிகள் கெடுபிடி வசூல் நடத்துவதாக செய்தி வந்திருக்கிறது. குடிசை மாற்று வாரியத்திற்கு பொறுப்பான கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சித் தேர்தல் நடைபெற அரசு மாநகராட்சிகளைக் கலந்து ஒரு கொள்கை முடிவு எடுக்கின்ற வரையிலே அப்படிப்பட்ட வசூல்களை தள்ளி வைப்பது, மாநகராட்சிகளுடைய வேலைகளை முறையாக நடத்துவதற்கும், அது குடிசைப் பகுதி மக்களுக்கு போவதற்குமான உதவியைச் செய்வதற்கும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பகல் 11-10)

சட்டத்தினுடைய சில ஷரத்துகளுக்குள்ளே, சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்களிலே நான் சிலவற்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த நேரத்திலே, முந்தைய ஆட்சி—ஆளுநர் ஆட்சிக்கு முன்னாலே இருந்த ஆட்சி, அந்த அமைப்புகளை கலைப்பதற்குரிய அதிகாரங்களை எடுத்துக் கொண்டதை இந்த அரசு ரத்து செய்யும் என்பதை அறிவித்திருக்கிறார். ஆனால் நம்முடைய மாநகராட்சியினுடைய

சட்டத்திலே—எல்லா சட்டங்களிலுமே தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சிகளை கலைப்பதற்கான வழிவகைகள் ஏற்கனவே சட்டத்திலே இடம் பெற்றிருக்கின்றன. சென்னை மாநகராட்சியிலே, மாநகராட்சி கலைக்கப்பட்டால் தனி அலுவலர் நியமிக்கப்படலாம் என்று இருக்கிறது. மதுரை மாநகராட்சி சட்டத்திலே ஆணையாளர் சில பொறுப்புக்களை நிர்ணயிக்கலாம் என்று சொல்கின்ற போதே கூட, மாநகராட்சிப் பணிகளை கவனிப்பதற்காக எந்த ஒரு நபரையும் ' such persons ' என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது—நியமிப்பதற்கு வழிவகை இருக்கிறது. கோவை மாநகராட்சிச் சட்டத்திலே அப்படி எந்த ஒரு நபரும் நியமிக்கப்படலாம் என்பதற்கான வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி அமைப்புகளுக்கான பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப்படுகிறபோதே, இந்த அரசு கண்டிப்பாக, கறாராக 1991 மார்ச் திங்கள் 3 ஆம் தேதி வரையிலும் தான் அந்த நீட்டிப்பு என்பதைத் தெளிவாகச் சொல்கின்றபோது மாநகராட்சியினுடைய சட்டங்களிலே அவற்றை கலைப்பதும், கலைந்த பிறகு அந்த அமைப்புகளுக்கு வரக்கூடியவர்கள் எந்த காலகட்டத்திற்கு பதவி வகிப்பர் என்பதும் முறையாகச் சொல்லப்படாமல் இருக்கின்ற நிலைமையை அவையினுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

சட்ட முன்வடிவையொட்டி பேசுகின்ற காரணத்தாலே சட்டப் பிரிவுகளை இங்கே மேற்கோள் காட்டுவதிலே மாண்புமிகு தலைவருடைய அனுமதி இருக்கும் என்று நினைக்கிறேன். சென்னை மாநகராட்சிச் சட்டத்திலே 44 (எ) முதல் பிரிவில் அரசு நினைத்தால் எந்த மாநகராட்சியையும் கலைக்கலாம் என்பதும் அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. 44(எ)(i)-லே, அது நீக்கப்பட வேண்டிய சட்டப்பிரிவு என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல 42(எ) (v) வது பிரிவிலே இப்படி கலைக்கப்பட்டு விட்ட பிறகு அங்கே அதிகாரத்திற்கு வரக்கூடிய தனி அலுவலர்களுடைய அதிகாரம் பற்றி இருக்கிறதே தவிர, அவர்கள் எந்தக் காலக்கட்டம் வரையிலும் பதவி வகிக்கலாம் என்பதற்கு எந்த நிர்ணயமும் இல்லை. அதனாலே நான் கலைக்கப்பட்ட மாநகராட்சிக்கு தனி அலுவலர்களுடைய ஆட்சியே இதுவரையிலும் தொடர்ந்து இருக்கக்கூடிய நிலைமை நீடிக்கிறது. அதுவும்





மாற்றப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விழைகிறேன். அப்படி கலைக்கப்பட்ட பிறகு மீண்டும் அமைக்கப்படுகின்ற மாநகராட்சிகளு அவருடைய பதவிக்காலம் எவ்வளவு என்று வரையறுக்கின்ற, 7(எ) பிரிவிலே இருக்கின்ற ஒரு துணைப் பிரிவில் அந்தப் பதவிக்காலம் நீட்டப்படவோ, சுருக்கப்படவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. அந்தப் பிரிவும் நீக்கப்பட வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

44(பி) சட்டப்பிரிவின்படி இந்த அரசாங்கம் ஒரு மாநகராட்சி கலைக்கப்பட்ட பிறகு, அங்கே தனி அலுவலரை நியமிக்கலாம் என்று சொல்கின்றபோது அவருக்கான காலக்கெடு நிர்ணயிக்கப் படவில்லை. அதேபோன்று . . . .

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, இது மாநகராட்சித் தேர்தலை நடத்துவதைப் பற்றியது. சட்டத்திலே இருக்கின்ற ஒவ்வொரு பிரிவிலேயும் அதை மாற்ற வேண்டும். இதை மாற்ற வேண்டும் என்று ஆய்வு செய்தால் அது சரியாக இருக்காது. உடனடியாக, சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்துவதைப் பற்றித்தான் இப்போது அவையிலே இருக்கிறது.

**திரு. உ. ரா. வரதராசன்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனாலும் இப்போது தேர்தல்கள் நடந்து, தேர்ந்தெடுக்கப்படுகிற மாநகராட்சிகள் முறையாகச் செயல்பட வேண்டும் என்கிறபோது, சட்டப் பிரிவிலே இருக்கிற இந்தக் குறைகளைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன். இந்த மன்றத்திலேயே அல்லது இந்த முன்வடிவோடு சேர்த்து அது திருத்தப்படவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையல்ல. அதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதனை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் மீண்டும் ஒவ்வொரு சட்டத்தினுடைய பிரிவுகளையும் வாசித்துக் காட்டாமல், இதே பிரிவுகள் மதுரை மாநகராட்சிச் சட்டத்திலேயும், 48 (1), 48 (5)(பி), 48(8) ஆகிய பிரிவுகளிலே அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும்.

மதுரை மாநகராட்சியிலே இன்னொரு விசேஷமான பிரிவு—அப்படி அமைக்கப்படுகிற தனி அலுவலர் அவருக்குரிய 5 ஆண்டுக் காலம் முடிவுக்குள்ளாக அந்தத் தேர்தலை நடத்துவதற்கு

[திரு. உ. ரா. வரதராசன்] [1989 பிப்ரவரி 18

ஏற்பாடு செய்யவேண்டும் என்று இருப்பதோடு, அந்த ஐந்தாண்டுக் காலம் முடிந்த பிறகும்கூட, ஆறு திங்கள் அதை நீட்டிப்பதற்கான அவகாசம் இருக்கிறது என்பதும் கவலை தரக்கூடிய சட்டப் பிரிவாக இருக்கிறது. அதுவும் மாற்றப்படவேண்டும்.

அதே போன்று, கோவை மாநகராட்சியினுடைய சட்டத்தில் 50 (1), 50 (5) (பி), 50 (6), 50 (8) ஆகிய பிரிவுகளிலே இப்படி நீட்டிப்பதற்கு அல்லது 'ஃபர்ஸ்ட் பெர்சன்' என்று சொல்லக்கூடிய இந்தப் பொறுப்பிலே நியமிப்பதற்கான ஷரத்துக்கள் இருக்கின்றன. அவற்றையும் இந்த அரசு உரிய நோக்கிலே பரிசீலித்து, நேற்றைக்கு முதல்வர் அவர்கள் ஊராட்சி அமைப்புகளுடைய செயல்பாட்டிலே அரசு தலையிடக்கூடாது என்பதற்காக அந்த அதிகாரத்தை ரத்து செய்வதாகச் சொன்ன உறுதிமொழிக்கு ஒப்ப, இந்தச் சட்டத் திருத்தங்களும் பின்னாலே கொண்டு வரப்பட வேண்டும் என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை, 18 வயது வந்த மாநகராட்சி இளைஞர்களுக்கும் வாக்களிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிற முறையிலே அதற்கான பட்டியல் தயாரிப்பைத் துரிதப்படுத்தி 'மே' இறுதியிலேயோ, ஜூன் முதல் வாரத்திலேயோ நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்றும், அதற்கு அரசு முன்வர வேண்டும் என்றும் மெத்தப் பணிவோடு கேட்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா மீது எனக்கு முன்னாலே இங்கே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 18 வயது வந்த அத்தனை பேருக்கும் வாக்குரிமை கிடைக்கின்ற வகையிலே வாக்காளர்களைச் சேர்த்ததற்குப் பின்னால் தேர்தல் நடத்த வேண்டும் என்று இங்கே வேண்டினார்கள். அதே கருத்தினை நானும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த மசோதா மிகவும் அவசரமான கோலத்திலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாக நிறையத் தவறுகள் இந்த மசோதாவிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1989 பிப்ரவரி 18] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

உதாரணமாக, தமிழ்நாடு சட்டமன்ற விதி 126-ன் கீழ், 'ஃபைனான்சியல் மெமோரண்டம்' இருந்து இருக்க வேண்டும். இந்த மசோதாவிலே 'ஃபைனான்சியல் மெமோரண்டம்' இல்லை. 120-வது விதி மிகத் தெளிவாகவே குறிப்பிடுகிறது—

"A Bill involving expenditure shall be accompanied by a financial memorandum which shall invite particular attention to the clauses involving expenditure and shall also give an estimate of the recurring and non-recurring expenditure involved in case the Bill is passed into law :

Provided that the clauses in a Bill involving expenditure shall be printed in thick type or in italics so as to draw the attention of the Members to same."

மிகத் தெளிவாக இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில், 120-வது விதி சொல்கிறபடி 'ஃபைனான்சியல் மெமோரண்டம்' இணைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றம் நடைபெறுவது என்பதும், உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவது என்பதும் சில ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்திருந்தாலும்கூட, அது நடைமுறைச் செலவைச் சேர்ந்ததே தவிர, புதுச் செலவு என்கிற வகையிலே வருவதில்லை. நடைமுறையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகளுக்குத் தனியாக 'ஃபைனான்சியல் மெமோரண்டம்' எதுவும் அமைக்கவேண்டிய அவசியம் கிடையாது. இது அரசாங்கத்தினுடைய நடைமுறைக் கடமைகளிலே ஒன்று. எனவேதான் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போன்ற ஒரு தேவை ஏற்படவில்லை.

(முற்பகல் 11-20)

மற்றொன்று. 18 வயதானவர்களைச் சேர்க்கவேண்டும் என்பது, இந்த அரசாங்கத்தினுடைய உடன்பாடான கொள்கையே தவிர, மாறுபாடான கொள்கை அல்ல. ஆனால் நடைமுறையில், இந்தத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும், அதற்கு 18 வயது உடையவர்களையும் பட்டியலில் சேர்த்துத் தேர்தல் நடத்த முடியுமா என்று வினவியபோது, இப்போது பத்திரிகைகளிலே அறிவிக்கப்பட்டிருப்பதைப் போல, 18 வயதுள்ளவர்களை, வீடு வீடாகச் சென்று எல்லா வாக்காளர்களையும் மொத்தமாகச்

[திரு. பேராசிரியர் க. அன்பழகன்] [1989 பிப்ரவரி 18

சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்க்க நேரிடுமானால் முதல் கட்டத்தில் சேர்க்கை முடிவதற்கு மே மாதம் ஆகும். அதை மறு படியும் அச்சிட்டு வெளியிட வேண்டுமானால் ஏறத்தாழ ஜூன், ஜூலை ஆகும். அதற்குத் திருத்தம் தர வாய்ப்புக் கொடுக்க வேண்டுமானால் அதற்கு 2 மாதங்கள் ஆகும். என் என்றால் திருத்தம் அதிகமாக இருக்கும். ஒரு ஒரிஜினல் பட்டியல், புதுப் பட்டியல் என்ற முறையில் நாடாளுமன்றத்திற்காக அந்தப் பணியை தமிழக அரசு தொடங்கியிருப்பது பிப்ரவரி 10 ஆம் தேதி தான். எனவே அவர்கள் தெரிவிக்கிற முறைப்படி குறைந்தபட்சம் 8 மாதங்கள் ஆகும் என்று அதற்குரிய அலுவலர்கள் தெரிவிக்கி றார்கள். அப்படி 8 மாதங்கள் ஆகிறபோது நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படக்கூடிய இயல்பான வாய்ப்பு இருக்கிறது. அப்படி அறிவிக்கப்படுமானால் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். நிறுத்தப்பட்டால் மறுபடியும் அந்த மார்ச், ஏப்ரல் வரையில் தேர்தலை நடத்துகிற வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தால்தான் தேர்தலை நடத்துவதன் அவசியம் காரணமாக ஏற்கெனவே உள்ள பழைய பட்டியலின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலைத் திருத்தி, திருத்தப்பட வேண்டிய அளவுக்கு மட்டும் திருத்தி உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற காரணத்தால் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பியதுபோல் 18 வயது எய்தியவர்கள் எல்லோரும் வாக்கு அளிக்கிற ஏற்பாட்டைச் செய் வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்றாலும் அந்த விதியின்படி நடை முறைச் செலவையும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்றுதான் இருக்கிறது. வாக்காளர்களைச் சேர்ப்பதிலே ஏற்படுகின்ற செலவுகள், அதற்காக பட்டியல் தயாரிக்கின்ற செலவுகள் என்ற செலவுகள் இருக்கின்றன. அதைச் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்டினேன்.

அதேபோல் Delegated Legislation, Memorandum regarding Delegated Legislation—Clause 12 should have been added. இங்கே நிச்சயமாக சேர்க்கப்படவில்லை என்பதையும் நான் அதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1989 பிப்ரவரி 18] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

12-வது விதியிலே

"To sub-section (1) of section 62-A of the 1971 Act, the following proviso, shall be added, namely:—

"Provided that the Government may, by notification, for sufficient cause direct that the said period be extended or reduced by such period not exceeding six months as may be specified in such notification". என்பதை நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே காலதாமதம் ஆகும் என்று அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டது. 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. 15 ஆண்டு களாக நடைபெறாத தேர்தல் இன்னும் ஓரிரு மாதங்கள் தள்ளிப் போவதிலே ஒன்றும் ஆகிவிடாது என்பது எங்களுடைய எண்ணம்.

சென்னை மாநகராட்சிக்கு பல மூதன்மைகள் உண்டு. வேறு எந்த நாட்டில் இருக்கின்ற எந்த மாநகராட்சியை விட சென்னை மாநகராட்சிக்கு பல சிறப்புகள் உண்டு. இந்தியாவில் உருவாக்கப் பட்ட முதல் மாநகராட்சி சென்னை மாநகராட்சி. 1687 ஆம் ஆண்டு ஆளுநர் 'ஏல்' இங்கே இருந்த நேரத்தில், 'ஏல்' என்ற பெயர் நமக்கு பல வகையிலே பரிட்சயமான பெயராக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். இங்கிலாந்தில் பிறந்து, இந்தியாவில் வாழ்ந்தவர். குறிப்பாக சென்னை நகரத்திலே தன்னுடைய வாழ்க்கையினை பிரதானமான அளவிலே, சிறப்பான அளவிலே வாழ்ந்து அமெரிக்காவில் தன்னுடைய அந்திமக் காலத்தை முடித்துக்கொண்டவர் 'ஏல்'. அவருடைய வாழ்விலே பல நல்ல பணிகள் இங்கே நடைபெற்று இருக்கின்றன. அவற்றில் ஒன்று இந்த மாநகராட்சி உருவாக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, அவர் தன்னுடைய கைப்பட தயாரித்த தஸ்தாவேஜுகள் நம்முடைய அருங்காட்சியகத்தில் இடம் பெற்று இருக்கின்றன. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் ஏல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து அவற்றை எல்லாம் நாங்கள் பார்த்து, எங்களுக்கும் இவ் பிரதிகள் வேண்டும் என்று கேட்டு பெற்றுச் சென்றிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அண்ணா அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றபோது ஏல் பல்கலைக் கழகத்தில் "சப்-பெலோசிப்புகள்" வாங்கி இல

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 பிப்ரவரி 18

லாரங்கள் அங்கே தங்கியிருந்தார்கள் என்பதையும் இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அவ்வளவு சிறப்புகள் பெற்ற சென்னை மாநகராட்சிக்கு இன்னொரு சிறப்பு சேர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை இங்கே பணிவன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். 18 வயது வாக்காளர்களுக்கு முதன் முறையாக வாக்கு உரிமை அளிக்கின்ற அந்த சிறப்பும் சென்னை மாநகராட்சிக்கு, நம்முடைய இதர மாநகராட்சிகளுக்கும் சேர வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே தேர்தல் நேரத்தில் ஆள் மாறாட்டம் நடைபெற்றது என்று பல பகுதியினர் எடுத்துச் சொன்னார்கள். தவறுகள் நடைபெற்று இருக்கின்றன. அதை யார் செய்தார்கள் என்ற அந்த வாதம் நமக்கு வேண்டாம். அந்த தவறுகள் தொடர்ந்து நடைபெறக் கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். அந்தத் தவறுகள் தொடர்ந்து நடைபெறக் கூடாது என்று சொன்னால் அதற்கான ஒரே ஒரு வழி வாக்காளர்களுக்கு அடையாள அட்டை, அவர்களுடைய போட்டோ இணைக்கப்பட்ட அடையாள அட்டை தரப்பட்டால் ஒழிய நிச்சயமாக ஆள் மாறாட்டத்தைத் தவிர்க்க முடியாது. எனவே நீங்கள் ஒவ்வொரு வாக்காளருக்கும் அடையாள அட்டை போட்டோ ஒட்டிய அடையாள அட்டையைக் கொடுத்ததற்குப் பின்னால், 18 வயது நிரம்பிய இளைஞர்களையும் சேர்த்து வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்—அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? இதுவரையில் அவர்கள் வாக்களித்து இருக்கிறார்கள். ஊராட்சித் தேர்தல்களிலேயெல்லாம் வாக்களித்து இருக்கிறார்கள். நகராட்சித் தேர்தல்களிலே வாக்களித்து இருக்கிறார்கள். நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலே வாக்களிக்க இருக்கிறார்கள். இனிமேல் வருகின்ற சட்டமன்றத் தேர்தல்களிலே 18 வயது நிரம்பிய அத்தனை பேரும் வாக்களிக்க இருக்கிறார்கள். மாநகராட்சி தேர்தலிலே மட்டும் 18 வயது நிரம்பிய இளைஞர்களுக்கு வாக்குரிமை கிடையாது என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ இந்த அரசு 18 வயதானவர்களைப் புறக்கணிப்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கம் தந்து இருக்கிறார்கள்.



1989 பிப்ரவரி 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இன்னும் சொல்லப்போனால் 18 வயது உடையவர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் இருக்கிறார்கள். இருந்தாலும் கூட இதுவரையிலே இந்த மன்றத்தில் தேர்தலை ஒத்திப் போட்டதற்குத்தான் காரணம் சொல்லப்பட்டதே தவிர தேர்தலை நடத்துவதற்கு யாரும் முன்வரவில்லை. சென்னை மாநகராட்சி மற்ற மாநகராட்சிகள் இருக்கின்ற சூழ்நிலைகளை எண்ணிப்பார்த்துத்தான் இந்தத் தேர்தலை அவசர அவசரமாகக் கொண்டு வருகிறது. இதைப் பாராட்ட வேண்டிய மாண்புமிகு உறுப்பினர் இப்படி குறை காண்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது, 18 வயது வந்தவர்கள் அத்தனை பேருமே திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே 1 இலட்சம் இளைஞர்களிடம் கையெழுத்து வாங்கி, பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பித்தவன் நான். பல்லாயிரம் அல்ல, இலட்சம் பேர் இந்திய தேசிய காங்கிரஸிலும் மற்ற அமைப்புகளிலும் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் அந்தக் கையெழுத்து வாங்கி அனுப்பியபோது எந்தக் கட்சியிலே இருந்தார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்றும் நான் உங்கள் கட்சியில் இருந்தது இல்லை. தேசிய காங்கிரஸிலே இருந்தேன்; காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸில்.

V 211, 31 'N 85

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய முதல் பேச்சை நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன் 'கன்னிப்பேச்சு' என்ற வார்த்தையை நான் இங்கே பயன்படுத்த விரும்பவில்லை. காரணம், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்தப் பெயர் பிடிக்கவில்லை என்றாலும்கூட சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும்,

144354
D
V 211, 31 'N 85
N 85.3.2

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 பிப்ரவரி 18

அவை முன்னவர் அவர்களும் தலையிடுவதிலே தவறு இல்லை. மற்ற அமைச்சர்கள் இதிலே தலையிட்டு நிச்சயமாக என்னுடைய கருத்தோட்டத்திற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடாது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்ல வருகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் தலையிட்டு ஒரு விளக்கத்தை கொடுத்ததற்குப் பின்னால் என்னுடைய கருத்தை வலியுறுத்தக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. என்னுடைய கருத்து, 18 வயது நிரம்பிய இளைஞர்களை அத்தனை பேருக்கும் வாக்குரிமை தரப்பட்டு, அந்த வாக்குரிமை தரப்பட்டதற்குப் பின்னாலேதான் மாநகராட்சிக்குத் தேர்தல் நடைபெறவேண்டுமென்பதாகும். இந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். நீங்கள் அடையாள அட்டையை வழங்கவேண்டுமென்ற கருத்தையும் நான் நிச்சயமாக வலியுறுத்த விரும்புகிறேன். 15 ஆண்டுக் காலமாக இங்கே தேர்தல் நடைபெறவில்லை. அதைப்பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் 3 அல்லது 4 மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நிச்சயமாக நடந்தியாக வேண்டும். 7 மாத காலம் ஆகும் என்கின்ற வாதம் சரியான வாதமாக இருக்க முடியாது. எப்படியும் இந்த ஜனவரி மாதம் 1 ஆம் தேதி யாருக்கெல்லாம் 21 வயது நிரம்பியிருந்ததோ அவர்களுடைய புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படப் போகிறது. எனவே அதையே மாற்றி 18 வயது என்று செய்வதிலே கஷ்டம் இடையாது. அடையாள அட்டையை மாநகராட்சிகளுக்குப் பரிட்சார்த்தமாக நாம் முயற்சித்துப் பார்ப்போம் என்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 வயதுடையோர் வாக்குரிமை என்பது நடைமுறைக்குச் சாத்தியமல்ல என்றுதான் இங்கே சொல்லப்பட்டதே தவிர இன்னும் ஓராண்டு கழித்துத் தேர்தல் வரலாம் என்றால், முழுப் பட்டியல் தயாரித்து, இரண்டு மூன்று திருத்துவதற்குக் கொடுத்து, அதற்குப் பின்னர் அதைச் செய்யலாம். உடனடித் தேர்தல் நடத்துவதற்கு அது இயலாத ஒரு காரியமாக இருக்கிறது. அதைப்போல, அடையாள அட்டை என்பது இப்பொழுது இலட்சக்கணக்கில் வாக்காளர் இருக்கிறபோது அடையாள அட்டை தயாரிப்பது, அதுவும் அவர்களுடைய நிழற்படம் ஒட்டிய அடையாள அட்டையைத் தயாரிப்பது என்று சொன்னால்



1989 பிப்ரவரி 18] [பேராசிரியர் க. அன்பழகன்]

மிகப்பெரிய செலவாகிற காரணத்தால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அது நடைமுறைக்கு வரவில்லை. அப்படி நடைமுறைக்கு வரவேண்டுமானால், செலவாகிற பெரியதொரு நிதியை வழங்குவதற்கு மத்திய அரசு தயாராக இருக்க வேண்டும். இல்லையானால் அவ்வளவு பெரிய செலவை இந்தக் கால கட்டத்தில், உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஏற்றுக்கொள்ள முடியாது; நடைமுறையிலே காலதாமதமும் ஆகும். இரண்டாவதாக பெரும் செலவாகும் என்று அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தபடியாக மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு) விரைவில் முடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** விரைவாக முடிக்கிறேன். ஆனால் பேச்சை முடிப்பதற்கு முன்பே அடுத்தவரைப் பேச அழைப்பதை எந்த வகையிலே சேர்ப்பது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது முறை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் நேரம் முடிந்துவிட்டதால் பேச அழைக்கிறேன்.

**திரு. அ. நடராசன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் பேரவைத் தலைவரைக் குற்றம் சாட்டுவது முறை அல்ல.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** நான் குற்றம் சுமத்தவில்லை. ஆக, அகில இந்திய அடிப்படையில் நடைபெற இருக்கின்ற தேர்தலிலே ஒரு வாக்காளர் அட்டையில் நிழற்படம் ஒட்டித் தருகின்ற ஒரு புரப்போசல் நிச்சயமாக இருக்கிறது; வாக்கூடிய வாய்ப்புகள் உண்டு நாம் முந்திக்கொள்வோம்; நாம் முன்னால் செய்து காட்டுவோம் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். மீண்டும் அந்தக் கருத்தை வலியுறுத்தி, 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதற்குப் பின்னாலேதான் இந்த மாநகராட்சித் தேர்தல் நடைபெற வேண்டுமென்று என்னுடைய திருத்தத்தையும் வலியுறுத்தி நான் அமர்கிறேன், வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி சட்டத் திருத்தத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்

காக மகிழ்ச்சி அடைகிறேன். மாநகராட்சியின் வருவாயை எப்படிப் பெருக்குவது என்பதைச் சோதனை வைப்பதற்கு முன்பு அரசாங்கம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இங்கு நான் கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சியில் வரி விதிப்பதை எந்த முறையில் பின்பற்றுகிறார்கள் என்பதையும், வெளிப்படையாக நாட்டு மக்களுக்குத் தெரியக்கூடிய அளவிற்கு அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட வேண்டுமென்பதை ஒரு உதாரணத்தின் மூலம் நான் இங்கே சொல்கிறேன்.

சென்னை நகரம் என்றால், வீடுகளில் மலேரியா தெளிப்பு இந்த நாளில் தெளித்தார்கள் என்று வெளியே எழுதிப்போடுவது மாநகராட்சியாளர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. வீட்டுக்கு வெளியே காம்பவுண்ட் வாலில் எழுதியிருப்பார்கள். நான் இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம், ஒவ்வொரு வீட்டின் நுழைவாயிலிலும் வீட்டின் சொந்தக்காரர்களின் பெயர் எழுதப்பட வேண்டும். அந்த வீட்டுக்கு எவ்வளவு வரி விதித்திருக்கிறார்கள் என்பதையும் எழுத வேண்டும். அப்படி எழுதுவீர்களேயானால் ஒவ்வொருவரும் அதைப் பார்த்துக் கொள்வார்கள். இந்த வீட்டுக்கு இவ்வளவு வரி, பக்கத்திலுள்ள அதே அளவில் உள்ள வீட்டுக்கு வரி விதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள முடியும். ஆக, வெளிப்படையாக ஒவ்வொரு வீட்டின் வாயிலும் இதை எழுதுவீர்களேயானால், பினாமி சொத்தையும் கண்டுபிடித்து விடலாம். காரணம், வீட்டின் சொந்தக்காரர்களின் பெயர் அதில் இருக்கும். யாரும் இனிமேல் தவறு செய்வதற்கு வர மாட்டார்கள். அமெரிக்க நாடுகளில் 'Freedom of information Act' என்று ஒரு சட்டம் இருக்கிறது. யார் வேண்டுமானாலும் போய்க் கேட்டால், ஒருவரைப்பற்றி ஒரு செய்தி வேண்டுமென்று கேட்டால் கொடுப்பார்கள். ஆனால், நம்முடைய நாட்டில் அந்தப் பழக்கம் கிடையாது ; சட்டமும் கிடையாது. ஆகவே, நாட்டு மக்களுக்கு மாநகராட்சி நிர்வாகத்திலே என்ன நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதற்கு, தெரிந்து கொள்வதற்கு இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நீங்கள் பின்பற்றுவீர்களேயானால் மாநகராட்சியின் வருமானம் அதிகமாகும். மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு எதுவாக அமையும். இல்லாவிட்டால், மாநகராட்சியில் ஒரு மேயர், துணை மேயர், கவுன்சிலர்கள் மட்டும் இருந்து பணியாற்றக்கூடிய நிலை மட்டும்தான் இருக்குமே



யொழிய அதிகமாக நிதி வருவாயை உங்களால் பெற முடியாது. ஆகவே, இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. இதை அரசாங்கம் கருத்திற்கொண்டு ஒவ்வொரு வீட்டின் நுழைவாயிலிலும் வீட்டின் சொந்தக்காரர்களின் பெயர், வீட்டு வரி எவ்வளவு ரூபாய், என்றைக்குக் கட்டப்பட்டது என்பதை நீங்கள் எழுத வேண்டும், தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன், நன்றி.

**திரு. பி. என். வல்லரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10, 15 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே மக்கள் பிரதிநிதிகள் இதுவரையில் இல்லாமல் இருந்து, இன்றையதினம் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்த அரசு முயற்சி செய்து வருகின்றது. இந்த முயற்சியைப் பாராட்டாமல் தள்ளிப்போட்டுக்கொண்டே போகும் பழக்கப்பட்டவர்கள் எதையும் தள்ளிப் போட்டுக் கொண்டு போவதைப்போல இதையும் தள்ளிப்போட வேண்டுமென்பதற்காகச் சில காரணங்களைச் சொல்கிறார்கள்.

கோவை நகராட்சி 1981 ஆம் ஆண்டு கோவை மாநகராட்சியாக்கப்பட்டது. ஆனால் தேர்தல் நடத்தப்படவில்லை. 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அந்த கோவை மாநகராட்சி இன்று வரையில் முதல் தலைவரைக்கூட பார்க்க முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஆட்சி எடுக்கின்ற முயற்சியை, விரைவாகத் தேர்தலை நடத்துகின்ற முயற்சியை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். இந்த ஆட்சியில் இந்த நல்ல முயற்சியை, நல்ல எண்ணத்தை நான் வரவேற்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்திப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று மாநகராட்சிகளுக்கும் விரைந்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக வழிவகுக்கும் இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன் ; ஆதரிக்கிறேன்.

விரைந்து தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியம் சென்னை மாநகரத்திற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை சென்னை மாநகரத்தில் வாழக்கூடியவர்கள் மட்டுமல்ல ; சென்னை மாநகரத்திற்குத் தற்காலிகமாக வந்து செல்லக்கூடியவர்கள்கூட உணர்ந்திருக்கிறார்கள் என்பதை வலியுறுத்திச் சொல்லத் தேவையில்லை.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 18

நகரத்திலே வாழக் கூடிய மக்களுக்கு ஏற்படுகின்ற தேவை
களை முறையாக அளிக்காமல் அல்லது அளிக்க முடியாமல்
மக்கள் எவ்வளவு தூரம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்,
அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நகரத்
திலே வாழக்கூடியவர்கள் உணர்வார்கள். இந்த நகரம் கொசுக்
களுக்குப் புகலிடமாக இருக்கிறது; நோய்களுக்குப் புகலிடமாக
இருக்கிறது. குடிநீரும் சாக்கடை நீரும் இந்த நகரத்தில்தான்
ஒன்றோடு ஒன்று இணைந்துகொண்டு, சாதாரணமாக வெளிப்
படையாகத் தெரியாவிட்டாலும் பூமிக்கு அடியிலே ஒருவரோடு
ஒருவர் இணைந்து காதல் கொள்ளும் காட்சியைப் பார்க்கிறோம்.
சாக்கடை நீரும் குடிநீரும் ஒன்று சேருகின்ற தன்மை இந்த
நகரத்தில்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள்
சொல்லுகின்ற இந்தக் கருத்து முழு உண்மை அல்ல. குடிநீர்
கொஞ்சம் தரக் குறைவாக இருக்கிறது என்பது உண்மையே
தவிர சாக்கடை நீர் கலக்கக்கூடிய ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்
தாலும் உடனடியாகக் கவனிக்கப்பட்டு தடுக்கப்படுகிறது.
இருந்தாலும் நீர் நிறைந்த அளவிலே இல்லாத காரணத்தால்,
நீண்டகாலம் தண்ணீர் ஓடக்கூடிய குழாய்களில் நீர் தேங்கித்
தேங்கி வரக் கூடிய காரணத்தால், சில நேரங்களிலே நீர் தேங்கி
நின்று, பின்னாலே வருகின்ற காரணத்தால், இந்தக் குறைபாடு
ஏற்படுகிறதே தவிர நேரடியாகச் சாக்கடை நீரும் குடிநீரும்
கலக்கும் நிலை இல்லை. அப்படிக் கலக்கும் நிலைமை இருக்
கிறது என்று ஆதாரத்தோடு சொல்லக்கூடிய ஆதாரம் அரசாங்கம்
விசாரித்த அளவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். மேலும் இந்தக் குடிநீரைத்தான் நானும் பயன்படுத்து
கிறேன். ஆகவே இந்தக் குடிநீர்தான் எல்லா இடங்களிலும்
யாரும் குடிக்க முடியாமல் இருக்கிறது என்கின்ற ஒரு
எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டாம் என்று
அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு அவை முன்னவர்
அவர்கள் வாழ்கிற பகுதியில் அதிர்ஷ்ட வசமாக இந்த நிலைமை,
இந்த அனுபவம் ஏற்படவில்லை என்று கருதுகிறேன். குறிப்
பாக நான் வாழும் பெரியமேட்டு பகுதியில் தினந்தோறும் இந்த
அனுபவம் ஏற்படுகிறது. தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக்



1989 பிப்ரவரி 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

கூடாது என்பது நியாயத்தின்பாற் பட்டது. ஆனால் தவறு
கூடாது என்பது நியாயத்தின்பாற் பட்டது. ஆனால் தவறு
என்று சொல்லும்போது அது தொடர்ந்து நடைபெறக் கூடாது,
உண்மையை எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதுதான்
என்னுடைய நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகளை முறைப்படி தடுக்க
வேண்டும். முறையாக அவை இங்கே நடக்கின்றனவா என்று
பார்க்கக்கூடிய தலையாய கடப்பாடு இந்த மாநகராட்சி மன்றங்
களை நிர்வகிக்கக்கூடியவர்களுக்கு இருக்கிறது என்பதை
மறந்துவிடக் கூடாது. சென்னை மாநகரத்தில் மலைகள்
இல்லை. ஆனால் குப்பைகளின் மலைகள் இருப்பதை நாம்
ஆங்காங்கே பார்க்கிறோம். சென்னை மாநகரத்தில் ஆறுகள்
ஓடவில்லை. ஆனால் சாக்கடைகள் எல்லாம் தெரு வீதிகளில்
ஓடுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். ஆறுகள் இல்லாத குறை
களை சாக்கடைகள் இங்கே தீர்த்து வைக்கின்ற நிலைமைகளை
நாம் சென்னை மாநகரத்தில் பார்க்கிறோம். இதற்குக் காரணம்
கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் தொடர்ந்து சென்னை
மாநகரத்தை உதாசீனப்படுத்தியதுதான் என்ற குற்றச்சாட்டை
நான் சொல்கிறேன்.

(முற்பகல் 11-40)

சென்னை மாநகரத்தைப் பார்க்கின்ற நேரத்தில் மாண்புமிகு
அவை முன்னவர் அவர்களுடைய தொகுதியை உள்ளிட்டு நான்
சொல்கிறேன். சென்னை மாநகரத்திலே இருந்து வந்திருக்கிற
சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் இன்றைக்கு
சென்னை மாநகரத்தில் நடமாட முடியாத அளவுக்கு நிலைமை
கள் இருக்கின்றன. நாம் தொகுதிகளுக்குச் சென்றால் மக்கள்
கூறுவது குடிநீர் எங்கே, சாக்கடை நீர் அகற்றப்படுவது எங்கே,
துப்புரவு எங்கே, சுகாதாரம் எங்கே என்றுதான் எங்களைக்
கேட்கிறார்கள். எனவே இவைகளைப் போக்க வேண்டும். சட்ட
மன்றப் பேரவை உறுப்பினர்களுக்காக மட்டுமல்லாமல் நகரத்தில்
வாழ்கின்ற மக்களுக்கும் முறையாக ஒரு வாழ்வு அளிக்க
வேண்டும் என்பதற்காகத்தான், நேரடியாக மக்களோடும்
அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு காரியங்களை ஆற்றுகிற
வகையில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலை
உடனடியாக நடத்துவதை ஏற்க வேண்டும். அந்த எண்ணத்தில்
தான் இந்தச் சட்ட முன்வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு உடன
டியாகத் தேர்தலை நடத்தவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்
கிறோம். இங்கே பேசியவர்கள் கேட்டார்கள், ஏன் ஜூன் மாதத்

திலே நடத்தினால் என்ன, ஆகஸ்ட் மாதத்திலே அல்லது அக்டோபர் மாதத்திலே நடத்தினால் என்ன என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் அந்தப் பகுதிகளில், இங்கே நாங்கள் படுகிற அனுபவங்களைப் பெறவில்லை. எனவேதான் ஒத்திப்போடுங்கள் என்று சொல்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடைபெறவேண்டும் என்ற அந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இருக்கின்ற சூழ்நிலைகளை அனுசரித்து ஒரு குறிப்பிட்ட சாராரின் வசதிக்கேற்ப, அக்காரணத்தை முன்வைத்து ஒரு மாதத்திற்குத் தள்ளி வைத்திருக்கிறீர்களே தவிர உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையாகும். நாங்கள் அன்றையதினம் வற்புறுத்திச் சொன்னோம். மாநகராட்சி மன்றங்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சிக்குக் கடந்த 10 ஆண்டுகளாக முறைப்படுத்தி, திட்டமிட்டு, அதற்கு வேண்டிய முறையான சட்டப்படி கிடைக்க வேண்டிய மானியங்கள் வழங்கப்படவில்லை. எவ்வளவு மானியங்கள் வழங்கப்பட்டன என்பதை அரசு தெரிவிக்கவேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் முறைப்படி மத்திய அரசு அளிக்கக்கூடிய மானியம், மாநில அரசு வழங்கக்கூடிய மானியம் இவைகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக சென்னை மாநகராட்சிக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மானியமே சரியாக வழங்கப்படவில்லை. இன்றைக்கு மாநகராட்சிக்கு வரக்கூடிய வருமானம் அதனுடைய நிர்வாகத்திற்கே போதவில்லை என்ற சூழ்நிலை இருக்குமேயானால் இந்த மாநகராட்சி மன்றங்களின் நிதியாதாரங்கள் எந்த அளவுக்குப் பெருக வேண்டும் என்ற வகையில் அரசு ஒரு Perspective Assessment செய்யவேண்டும். மாநகராட்சி மன்றத்தினுடைய நிர்வாகத்திற்கு ஏற்படுகிற செலவை விட மாநகராட்சி மன்றத்தின் அன்றாடத் தேவைக்கான நிதியாதாரம் என்ன என்பதை அரசு கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1974-லே இந்த மன்றத்தில் மதிப்பீட்டுக்குழு ஏற்கெனவே ஓராண்டுக்காலம் ஆய்வு செய்து இந்த மாநிலத்தில் மட்டுமல்லாமல் மற்றைய மாநிலங்களிலேயும் சுற்றுப் பயணம் செய்து How to increase the financial resources of the local bodies— நகராட்சி மன்றம், மாநக



ராட்சி மன்றம் ஆகியவற்றினுடைய நிதியாதாரங்களை எப்படிப் பெருக்கவேண்டுமென்று ஆய்வு செய்து ஒரு பரிந்துரை வழங்கினோம். 1975-லே இறுதியிலே அந்தப் பரிந்துரை வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசு அந்தப் பரிந்துரைகளைக் கிடப்பிலே போட்டுவிட்டது. முறையான கவனம் நகராட்சி மன்றங்களினுடைய செம்மையான செயல்பாட்டுக்காகச் செலுத்தப்படவில்லை என்பதுதான் எங்களுடைய குறைபாடாகும். அதோடு மாநகராட்சி மன்றங்களின் நிதியாதாரத்தைப் பெருக்குவதைப் பொறுத்தவரையில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மாவட்டங்களிலே வளர்ச்சி மன்றம் என்று ஒன்று நடைபெறுகிறது. சட்டதிட்டங்களின்படி அது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சென்னை மாநகரத்தில் இருக்கும் உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. மேலவை, பேரவை உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனவே அந்த வளர்ச்சி மன்றங்களைப் போல் ஒரு அமைப்பு சென்னை மாநகரத்திற்கும் வேண்டும். என்ன நடக்கிறது என்று மாவட்ட அளவில் வளர்ச்சி மன்றங்களில் கூடிப் பேசக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் சென்னை மாநகரத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக நம்முடைய தேவையை—இங்கேயுள்ள தேவை என்ன? அணைக்கட்டுப் பிரச்சினை இல்லை, விவசாயப் பிரச்சினை இல்லை எங்களுக்கு. இருக்கிற பிரச்சினை எல்லாம் நகரியப் பிரச்சினைகள்தான் அதிகம். எனவே மாநகராட்சி மன்றத்தில், அதிகாரிகள் மட்டத்தில் ஒருங்கிணைந்த முறையில் செலவுகள் நடக்கின்றனவா என்பதைப் பொறுத்தவரையில் அதிகாரிகளோடு கலந்து பேசி சட்டமன்றப் பாராளுமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள் எல்லாரும் கலந்துகொண்டு விவாதம் நடத்தித் தீர்வுகள் காணக்கூடிய வகையில் ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லை என்றால், மாநகராட்சி மன்றத்திலேயே சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் அந்த மாநகராட்சி மன்றத்திலே உட்கார்ந்து அதிலே பங்கு கொண்டு கருத்துக்களைச் சொல்கின்ற அளவுக்கு— வோட்டு இல்லாவிட்டால் பரவாயில்லை, வோட்டு இல்லாத முறையிலே; விவாதங்களிலே கலந்துகொள்கிற வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஏதாவது சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

[1989 பிப்ரவரி 18

* மாண்புமிகு திரு. ஆர்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அவையின் முன்னால் இருப்பது சட்டமுன்வடிவுதான். ஏதோ இந்த இலாக்காவினுடைய மானியக் கோரிக்கை போல, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறார்கள். நான் திரு. லத்தீப் அவர்களைச் சொல்லவில்லை. ஏனென்றால் அவர் எதிலும் எவ்வளவு வேண்டு மானாலும் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள், ஆனால் இப்போது அவையினுடைய நேரம் மிக முக்கியமானது. இன்னும் பல அலுவல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் டிமாண்ட் மீது பேசுவதே நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, மாநகராட்சி மன்றத்தினுடைய தேர்தல் உடனடி யாக ஏன் நடத்தப்படவேண்டுமென்பதற்கான காரணங்களைத் தான் விளக்கிக்கொண்டிருக்கிறேன். இன்று அந்த பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கின்றது. ஏன் நடத்தவேண்டும்? கொஞ்ச நாள் தள்ளிப்போடக்கூடாதா? இதற்கு முன்னுரிமை ஏன் வழங்கப்பட்டு இருக்கிறது என்ற கேள்வி இங்கே எழுப்பப் பட்டிருக்கின்ற காரணத்தாலேதான் நான் இதை எல்லாம் சொல் கிறேன். எனக்கு இருக்கின்ற பிரச்சினை, எனக்கும், அவ ருக்கும் இருக்கக்கூடிய ஒரு முறையாக சட்டபூர்வமான தொடர்புகளுக்கு வாய்ப்பு இல்லை. சட்டப்பற்றற்ற முறையிலே தான் நாங்கள் அதிகாரிகளைச் சந்திக்கின்ற நிலையிலே இருக் கிறோம் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு துறைகள் இருக்கின்றன. மின்சாரத்துறை, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத் துறை. அடுத்து பொதுப் பணித் துறை, நகராட்சித் துறை. இவைகள் எல்லாம் எப்படி ஒருங்கிணைந்த முறையிலே ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும் என்பதை administrative cohesion வேண்டும், administrative co-ordination வேண்டும், administrative co-operation வேண்டும். ஒன்றையொன்று மற்ற திசைகளில் இழுக்கப்போகிற நிலைமைகளை மாற்றி யமைத்துச் செயல்படவேண்டும். நீங்கள் என்ன செயல்படுகிறீர் களோ தெரியாது. சாக்கடைகள் எல்லாம் தெரு வீதியிலே



1989 பிப்ரவரி 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

ஓடக்கூடாது. அது எங்கே ஓடவேண்டுமோ அங்கே தான் ஓட வேண்டும். சுத்திகரிப்பு நன்றாக நடைபெறவேண்டும். கொசுக்கள் கொல்லப்படவேண்டும். இப்போது பன்றிகள் மூளை சாத்திரக் காரணமாகக் கருதப்படுகின்றன. பன்றிகள் எல்லாம் சுதந்திரமாக இருக்கின்றன. நம்முடைய சென்னை மாநகரத்திலே சுதந்திரமாக அலைந்து கொண்டிருக்கின்றன. வேறு யாருக்குமே இல்லை. நேற்றுக்கூடப் பார்த்தேன். ஆகவே pig menace, mosquito menace அந்தப் பன்றிகளை என்றெல்லாம் சொல்கின்றார்களே, அவைகளை எல்லாம் நாம் கட்டுப்படுத்தவேண்டும். இன்றைக்கு நாங்கள் படுகின்ற அவதி யெல்லாம், ஒரு இடத்தில் விளக்கு எரியவில்லை என்றால், உடனடி யாக எங்களை 'என்னடா' என்று கேட்கிறார்கள். உடனடியாக மே மாதத்திலேயே தேர்தல் நடைபெறவேண்டும். உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கவேண்டும். சென்னை நகரத்தினுடைய பிரச்சினை கள் தீர்க்கப்படவேண்டும். முறையாக மானியங்கள் வழங்கப்பட வேண்டும். எவ்வளவு மானியங்கள் வழங்கப்பட்டன என்பதற்குக் கணக்குகள் கொடுக்கப்படவேண்டும். அதிலே நிர்வாகத்திற்கு எவ்வளவு செலவாயிற்று என்று தெரியவேண்டும். நிர்வாகத் திற்கு அப்பாற்பட்டு மேம்பாட்டுத் திட்டங்கள், சுகாதாரச் செயல்பாடுகள், சுத்திகரிப்பு செயல்பாடுகள், குடிநீர் வழங்குவது பற்றிப் பார்க்கவேண்டும். (மணி அடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மின்சாரம் வழங்குவது இதற் கெல்லாம் தனியான பட்ஜெட் போடவேண்டும். நான் இங்கே சொல்கிறேன். பட்ஜெட்டைப் பிரிக்கவேண்டும். Corporation மற்றும் Civic bodies-க்கெல்லாம் அட்மினிஸ்ட்ரேடிவ் பட்ஜெட்ஸ். இப்போது எல்லா முனிசிபா லிட்டிகளிலும் சொல்கின்றார்கள். ஐயா நிர்வாகத்திற்கே போத வில்லை. அப்புறம் உங்களுக்கு என்ன செய்வது? அப்படியென் றால் வரி வசூல் என் பண்ணுகிறார்கள்?

What for they are collecting money? We cannot allow such a tendency to continue and allow people to be taxed without there being any corresponding benefit to the people. It is something which is illegal, unconstitutional and unbearable. Therefore, we will not pay taxes. I am not saying—I am not propagating that idea. corresponding benfits இல்லையென்றால், எங்களுக்கு வசூல்பண்ண உங்களுக்கு என்ன அதிகாரம் இருக் கிறது?

[1989 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மசோதா தேர்தல்பற்றியது. மாநகராட்சி வருமானத்தை பற்றி திரு. அப்துல் லத்தீப் நீண்ட நேரம் பேசுகிறார். இது ஒரு நல்ல உதாரணம். என்ன வென்றால் புதிதாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள் ஓஹோ, ஓஹோ இதையும் பேசலாம் போல் இருக்கிறது என்று நினைப்பார்கள். மசோதாவில் தவறான வழியில் அவையை அழைத்துக்கொண்டு போகக்கூடாது. 'பில்' என்றால் 'பில்'லில்தான் பேசவேண்டும். அது உங்களுக்கும் தெரியும். நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று எங்களுக்கும் புரிகிறது. பில் பற்றிப் பேசலாம்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினருக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. விரைவில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, I am well within the purview of the Bill என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் நடை பெற்று தேர்தலும் உடனடியாக நடைபெற வேண்டும். அதைத் தான் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை, வேறு பிரச்சினைகளும் இல்லை. உடனடி யாகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்த வகையில் இப்போது எங்களுக்கு இருக்கிற சுமைகளை தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற வர்கள் பங்கேற்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிட்டவைகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். How to involve the Legislators in the activities of the civic bodies particularly, we the Members from the Madras region—not in the administration but in the affairs of the Corporation? It is for the Minister to think and give a satisfactory reply to the people who have been aggrieved so much. Thank you very much.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதிப்புமிக்க திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்த காலக் கட்டத்தில் சென்னை மாநகராட்சி மேம்பாட்டுக் குழு என்று



1989 பிப்ரவரி 18] [திரு. இளம்வழுதி]

ஒன்றை நியமித்தார். அது என்ன ஆனது? அந்தக் குழு தற்போது இருக்கிறதா? இருந்தால் அது எவ்வாறு செயல் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர் களின் பதிலுரையின்போது அதுபற்றிச் சொல்வார்கள்.

திரு. சா. கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, இம்மாமன்றத்திற்குச் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்குத் துணை புரிந்த தமிழ் இனத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய தியாகராயநகர் தொகுதியிலிருந்து என்னைத் தேர்ந்தெடுத்து, என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1919 ஆம் ஆண்டு சென்னை மாநக ராட்சி சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம், 1981 ஆம் ஆண்டு கோவை மாநகராட்சி சட்டம் ஆகிய சட்டங் களுக்கான திருத்தத்திற்குரிய முன்வடிவினை இங்கே கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்பதோடு பாராட்டுகின்றேன்.

அதற்கு முன்னதாக கடந்த காலத்திலே இந்த மாநகராட்சி களுக்கு எல்லாம் தேர்தல் நடத்தப்படாமல், இந்த மாநகரங்கள் எல்லாம் பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையில், சீர்கெட்டுக் கிடக் கின்ற நிலையில், புதிதாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற கழக அரசு உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு முன் வந்திருப்பதால் உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற் காக நான் என்னுடைய நன்றியை நகரமக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே ஒருசிலர் ஒரு குறைபாட்டைச் சொல்கிறார்கள். அதாவது 18 வயது ஆன வாக்காளர்கள் Municipal சட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றார் களே, அவர்களுக்கெல்லாம் வாய்ப்பளிக்காமல். உடனடியாக ஏன் தேர்தலை நடத்துகிறீர்கள் என்று இங்கே கேட்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்த மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப் படாமல் இருந்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் இதனை வரவேற்றிருக்க வேண்டுமே தவிர இளைஞர்களுக்கு வாய்ப் பளிக்கவில்லை என்று ஏன் சொல்கிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கடந்த காலத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த மதிப்பிற்குரிய திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கூட ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, நகராட்சித்

[திரு. சா. கணேசன்] [1989 பிப்ரவரி 18

தேர்தல்கள் நடைபெற்றபோது 18 வயதடைந்த இளைஞர்கள் எல்லாம் வாக்களித்தார்கள். அப்போது இளைஞர்களுக்கு வாக்களிக்க வாய்ப்பளித்தபோது, ஆளும் கட்சியாக இருந்த இவர்களுக்கு இந்த இளைஞர்கள் எல்லாம் வாக்களிப்பார்கள், எதிர்க் கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொன்ன கட்சியை மக்கள் ஒரத்தியடித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சகோதர கட்சிகளுக்கும் வாக்களித்து மகத்தான வெற்றி பெறச் செய்தார்கள் என்பதை இங்கே இச்சட்டத்தை எதிர்பவர் களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அவர்கள் சொல்வதெல்லாம் 18 வயதடைந்தவர்கள் அனைவருக்கும் வாக்களிப்பதற்கான வாய்ப்பளிக்க வேண்டும் என்பதைத்தான். இவர்களுடைய பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவேண்டுமென்று சொன்னால் இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதற்குக் காலம் அதிகமாகும், குறைந்தபட்சம் இன்னும் 6 மாதகால அவகாசம் தேவை. அதற்குப் பின்னால் தேர்தல் நடத்துவதென்றால் பாராளுமன்றத் தேர்தல் வந்துகொண்டிருக்கிறது. எனவே பொதுமக்களுக்கு எப்போது பார்த்தாலும் தேர்தலா, எப்போது பார்த்தாலும் தெருவிலே கூச்சலா, எப்போது பார்த்தாலும் தொல்லையா என்று நினைக்காத அளவிற்கு, அப்படிப்பட்ட நிலையை உருவாக்காமல் உடனடியாகத் தேர்தலை நடத்துவது தான் சாலச் சிறந்ததாகும். அந்த வகையில் தேர்தலை உடனடியாக இந்த அரசு நடத்த முன்வந்திருப்பதை நான் வர வேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இன்னொன்றையும் இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்களின் கால அளவு 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட் டிருப்பது பற்றிப் பலர் சொன்னார்கள். அதை நீட்டித்திருக்க வேண்டிய முறையில் சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி ஆகிய மாநகராட்சிகளுக்கு இருக்கின்ற கால அளவு 6 ஆண்டுகள் என்று இருப்பதை 5 ஆண்டு களாகக் குறைக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை நான் பாராட்டு கிறேன். கடந்த காலத்தில் இருந்தவர்கள் ஒன்றை நினைத்துக் கொண்டு செய்தார்கள். மேயர் பதவி ஓராண்டுக்காலம் இருந்தால் போதாது, இரண்டு ஆண்டுக்காலம் இருக்க வேண்டுமென்று



நினைத்து அப்படிச் செய்தார்கள். இரண்டு ஆண்டுக்காலம் மேயராக ஒருவர் இருப்பது என்றால், 5 ஆண்டுகளுக்கு 2½ மேயர் வர முடியாது என்பதால், பதவிக் காலத்தை 6 ஆண்டுக் காலமாக மாற்றினார்கள். அப்படி மாற்றியது சரியாக இருக்க லாம். மேயர் பதவி என்பது, ஒரு Ceremonial head தான், ஓராண்டு இருந்தால் போதும் என்பதால்தான் அடாடி கடந்த முனிசிபல் சட்டத்தில் இருக்கிறது. எனவே 2 ஆண்டுகள் என்று இருப்பதை, ஓராண்டாகக் குறைந்திருப்பதை வரவேற்கிறேன். 6 ஆண்டுகள் என்பதை மாற்றி 5 ஆண்டுகள் இருந்தால் போது மென்று சொல்லியுள்ளதையும் வரவேற்று, பாராட்டுகிறேன். இந்தியாவை ஆளுகின்ற சட்டத்தை வடிக்கின்ற நாடாளுமன்றத் தின் கால அளவு 5 ஆண்டுகளாக இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தை ஆளுகின்ற, சட்டத்தை வடிக்கின்ற சட்ட மன்றத்தின் கால அளவு 5 ஆண்டுகளாக இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய மன்றங்களுக்கே 5 ஆண்டுகளாக இருக்கும்போது சாதாரண மாநகராட்சிக்கு 6 ஆண்டுகள் இருக்க வேண்டாமென்று எடுத்துச் சொல்லி, 5 ஆண்டுகள் போதுமென்று கூறி, இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தின் முன்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ஏப்ரல் மாதத்தில் நடக்க இருக்கும் மாநகராட்சித் தேர்தல்களிலே 21 வயதை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த வேண்டுமென்றும், 6 ஆண்டுக்காலமாக இருக்கின்ற மாநகராட்சிகளின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக ஆக்க வேண்டுமென்றும், மேயர் பதவி 2 ஆண்டுகள் என்று இருப்பதை ஓராண்டாக ஆக்க வேண்டு மென்றும் ஒரு திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், விரைந்து செயல்படுகின்ற அரசாங்கம் விரைவிலே, வெகு சீக்கிரத்திலே, ஏப்ரல் மாதத்திலே 3 மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்த வேண்டுமென்று அவர் கள் கொண்டு வந்துள்ள சட்டமுன்வடிவை நான் பாராட்டு கிறேன். இவ்வளவு நாள் தள்ளி வைத்தீர்கள், இன்னும் சிறிது காலம் தள்ளி வைக்கக்கூடாதா என்று கேட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒருநாள்கூட தள்ளி வைக்கக்கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தக் குறுகிய காலத்தில் நம்முடைய தமிழ்நாட்டு நிதிநிலைமையெல்லாம் எவ்வாறு தவறான முறையில் கையாளப்பட்டு, அந்தப் பணம் எவ்வாறு போய்க்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, கோடிக்கணக்கான ரூபாயை மிகக் குறுகிய நாட்களில் கண்டுபிடித்து, நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு எடுத்துக்கொண்ட வழிவகைகளை எடுத்துச் சொன்னார்கள். அதைப் போன்றுதான் 3 மாநகராட்சிகளிலும் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். தமிழகத்தின் தலைநகரத்திலே உள்ளது சென்னை மாநகராட்சி. தொழில் நகரமாக விளங்குகின்ற மாநகராட்சி கோவை மாநகராட்சி. சுற்றுலா நகரமாக விளங்குகின்ற மாநகராட்சி மதுரை மாநகராட்சி. இந்த மூன்று மாநகராட்சிகளும் மிக முக்கியமானவையாக தமிழகத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்றன. எப்படி முதல்வரவர்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு எங்கெங்கே ஓட்டை, உடைசல்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, இன்றைக்கு நூற்றுக் கணக்கான கோடி ரூபாயைக் கண்டுபிடித்திருக்கிறார்களோ அதைப்போல மாநகராட்சிகளில் தேர்தல்களை நடத்தி, பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும்போது மாநகராட்சிகள் நல்ல விதமாக, நிதி ஆதாரங்களைப் பெருக்கி நல்லவிதமாக செயல்படுமென்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

21 வயதே போதுமா? 18 வயதாகக் குறைக்கப்பட வேண்டாமா என்றெல்லாம்கூட சொன்னார்கள். அரசாங்கத்தில் அதற்குக் கொடுத்த விளக்கம்—21 வயதிலிருந்து 18 வயதாகக் குறைத்து வாக்காளர்களின் கணக்கை எடுத்து, அதற்குப் பிறகு தேர்தலை நடத்துவதென்றால், மேலும் 9 மாதகாலம் ஆகலாம் என்று அவை முன்னவர் அவர்களாலே தெரிவிக்கப்பட்டது. அது மாத்திரமல்ல. வாக்காளர்களின் எண்ணிக்கை பெருகுகிறபோது, நகரத்தில் டிவிஷன்களையும் பெருக்க வேண்டி வரும். சென்னை நகரத்தில் ஏற்கெனவே 100 டிவிஷன்கள் என்றிருந்தது 120 ஆக ஆகி, இப்போது 150 ஆக ஆகியிருக்கிறது. எனவே வாக்காளர்களின் எண்ணிக்கை திரும்பவும் அதிகரிக்கப்பட்டால், 150 என்பது 180 ஆகவோ அல்லது 200 ஆகவோ ஆகக் கூடும். ஏனென்றால்,—சென்னை நகரம் பெருகிக் கொண்டேயிருக்கிறது. எங்கே பார்த்தாலும் சென்னையைச் சுற்றி தொடர்புள்ள நகரங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. எதுவரை சென்னை



மாநகரம் இருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு இன்றைக்கு வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால், தேர்தல் நடத்த காலம் கடந்துகொண்டே போகும் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஆகவே. விரைந்து செயல்படுகிற இந்த அரசாங்கம் விரைவில் இந்தத் தேர்தலை நடத்த முன்வந்திருப்பது பாராட்டத் தக்கது.

மேலும், தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கம், எந்தத் தேர்தலையும் தள்ளிப் போட்டுக் கொண்டே போகலாம். அதற்கு முன்னுதாரணம் இருக்கிறது. இதற்கு முன்னாலே ஆட்சியில் இருந்தவர்கள்—1984 ஆம் ஆண்டு தேர்தலிலே—ஏதோ, சாவுக்கு ஒரு ஓட்டு, நோய்க்கு ஒரு ஓட்டு—வாயில்லாத பிள்ளைக்கு ஒரு ஓட்டு, தாயில்லாத பிள்ளைக்கு ஒரு ஓட்டு—என்று அனுதாபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏராளமான உறுப்பினர்களோடு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருந்தபோது, அப்போதே தேர்தலை நடத்தி, அனுதாப வாக்கோடு மாநகராட்சிகளையும் பிடித்திருக்கலாம். . .

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும், காங்கிரஸ் கட்சியும் அப்போது வெற்றி பெற்றதை "சாவுக்கும், நோவுக்கும் கிடைத்த வாக்கு" என்று சொல்லி மக்கள் வாக்களித்ததையே "ஊறாகப்" பேசுகிறார்கள். அது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கோ. பூவராகன்: இதை நான் சொல்லவில்லை. எங்கே பார்த்தாலும், சுவரொட்டிகளாக ஒட்டினார்கள். தெருவெல்லாம் எழுதி வைத்தார்கள். மேடைகள்தோறும் முழங்கினார்கள். மக்கள் அனுதாபத்தோடு வாக்களித்தார்கள் என்று பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து. வெளியில், பத்திரிகைகளில், மேடைகளில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களை இந்த அவையில் கையாள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: வெளியே சொன்னதைமட்டும் [illegible]வில்லை. ஒரு நியாயமான கோரிக்கையைத்தான் நான் [illegible]கோளாக எடுத்து வைக்கிறேன். அதன் உள்ளே புக விரும்பவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் எந்தக் காரண[illegible]

[திரு. கோ. பூவராகன்] [1989 பிப்ரவரி 18

தையாவது சொல்லி, தேர்தலைத் தள்ளி வைக்க முயலலாம் என்ற நிலையைத்தான் எடுத்து வைக்கிறேன். அதற்கு, முன்னே இருந்த அரசாங்கம் தேர்தலை நடத்தியிருக்கலாம். செய்யாமல் தள்ளி வைத்துவிட்டார்கள் என்று குறிப்பிடுவதற்காகத்தான் சொன்னேனே தவிர, இங்கே யாரையும் குற்றம் சொல்லவோ, குறை சொல்லவோ, இதை எடுத்துக் கூறவில்லை. ஆனால், இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அரசாங்கம் விரைவில் இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கு இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரணங்களை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்தர்ப்பத்திலே அதையெல்லாம் குறிப்பிட்டேன் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த மூன்று மாநகராட்சிகளோடு நின்றுவிடாமல், சேலம் மற்றும் திருச்சி ஆகிய இரண்டையும் மாநகராட்சிகளாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. எனவே, அடுத்து வருகிற சட்டமன்றக் கூட்டத் தொடரில் அதற்கான அறிவிப்பு வருமென்று நான் எதிர்பார்க்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், சென்னை மாநகராட்சி, கோவை மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தேர்தல்களைத் தள்ளி வைக்கக்கூடாது. சென்னை மாநகரத்தின் தேவைகள் மிக மிக அதிகமாகப் பெருகிக் கொண்டே இருக்கிறது. அதைப் போலவே குறைகளும் ஏராளமாகக் குவிந்து கொண்டிருக்கின்றன என்பதை நாமெல்லோருமே அறிவோம். அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் எவ்வாறு முயற்சி எடுத்தாலும் இந்தக் குறைகளைப் போக்க முடியவில்லை என்பது நமக்கு எல்லோருக்கும் நன்கு தெரியும். கவர்னர் ஆட்சியிலே சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு, மத்தி என்று பல பகுதிகளாகப் பிரித்து, அதிகாரக் குவியலைப் பரவலாக்கி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று செய்தார்கள். ஆனாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி கையிலே பொறுப்பை ஒப்படைத்தால்தான் எப்படிச் செயல்பட வேண்டுமோ இப்போது இருப்பதைக் காட்டிலும் குறைகளைக் களைந்து சிறப்பான அளவுக்கு அது செயல்பட முடியும். (மணி அடிக்கப்பட்டது) நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள், எனக்கு 5 நிமிஷம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அருள்கூர்ந்து உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு மட்டுமல்ல, இன்னொரு சட்ட முன்வடிவும் இருக்கிறது. நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று நான் பொறுமையாகக் காத்திருப்பேன் என்றால் அது நெடுநேரமாக ஆகிவிடும். விடைகற்குள் முடித்துவிட்டால்கூட நன்றாக இருக்கும் என்று நான் சொல்ல வேண்டியிருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் 5 மணித் துளியிலிருந்து 7 மணித்துளிக்குள்ளாகச் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இவை மூன்றும் பெரிய நகராட்சி மன்றங்கள். சாதாரண மன்றங்கள் அல்ல. மாநகராட்சி மன்றங்கள். எனவே, அடுத்து நிதிநிலை அறிக்கை வருகிறபோது கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்த மாநகராட்சிகளில் இப்போது விரைவாகத் தேர்தல் நடைபெற வேண்டுமென்பதற்குக் காரணம் இவற்றின் வருவாய் எங்கேயெல்லாமோ போய்க் கொண்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எப்படி உரியகாலத்தில் தமிழக நிதி வருவாயைப் பெருக்குவதற்கு எங்கேயெல்லாம் ஓட்டை உடைசல்கள் இருக்கிறதோ, அவற்றையெல்லாம் கண்டுபிடித்து முயற்சி எடுக்கிறார்களோ, அதைப்போல இந்த மாநகராட்சிகளின் தேர்தல் நடத்தால் அவற்றின் வருவாய் எங்கேயெல்லாம் போய்க் கொண்டிருக்கிறதோ அந்த வருவாயெல்லாம் வளம் பெருக்குவதற்கு மாநகராட்சிகளின் வளர்ச்சிக்கு அவை வருமென்பதற்கு ஒரு ஆதாரம் இருக்கிறது என்பதை எடுத்துவைக்கிறேன். விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் வயது வரம்பைக் குறைக்க வேண்டும் அல்லது ஆறிலிருந்து ஐந்திற்கு வருவது, அல்லது இரண்டிலிருந்து ஓராண்டிற்கு வருவது என்பதைக் காரணம் காட்டி தள்ளிவைக்கக் கூடாது. ஆறிலிருந்து ஐந்திற்கு வருவது ஒன்றும் சங்கடமில்லை. ஏற்கெனவே இருந்த முறையைத்தான் கொண்டு வருகிறோம். ஆறிலிருந்து ஐந்திற்கு வருவது என்பது எல்லோருடைய பதவிக்காலமும் ஒரே அளவாக இருக்கவேண்டும் என்பதற்காக கொண்டு வருகிறார்கள். அடுத்து மேயர் பதவியில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை என்பதற்கு மாற்றமாக வருகிறது. அது ஓராண்டிற்கு ஒரு முறை என்று வந்திருக்கிறது.

[திரு. கோ. பூவராகன்] [1989 பிப்ரவரி 18

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார் இதில் சுழற்சி முறை ஒழிக்கப்படுமா என்று கேட்டார். சுற்று வருகிற போது ஒவ்வொரு ஆண்டில் ஒரு வகுப்பாருக்கு அந்த மேயர் பதவி வருகிறது. இப்போது இருக்கிற முறை அப்படியே இருக்க லாம் என்று நான் என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன். ஜாதி அடிப்படை என்பது [illegible] இருந்திருக்கிறது. ஏதோ ஓராண்டு ஒருவர் வருகிறார் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருகிறபோது ஓராண்டுக்கு ஒருமுறை பொறுப்பிலேயிருந்து நல்ல நிலையில் இந்த அமைப்புகளை சீராக நடத்துவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற சட்டத் திருத்தங்களின்மீது பேசுகின்றபோது ஒரு விதியைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். 'When an amendment Bill is discussed, the debate should be within the scope of the amendment. Practical difficulties, if any, should be referred to only during the discussion on Voting on Demands for Grants.' என்பதை அருள்கூர்ந்து நினைவில் கொள்ள வேண்டு கிறேன்.

திரு. எஸ். பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாநகராட்சிகளின் தேர்தலை நடத்த உரிய அதிகாரங் களை வழங்கிட வகைசெய்யும் இந்த மசோதாவின் மீது பேசுகிற வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பாட் டாளித் தலைவர், ஜனநாயகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னை இப்பேரவைக்கு தேர்ந்தெடுத்த மதுரை மத்திய தொகுதி வாக்காளப் பெருமக் களுக்கும் நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவங் குகிறேன். இன்றைய என்னுடைய கன்னிப் பேச்சில் மாநக ராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான மசோதாவில் பேச வருகின்ற வாய்ப்பினை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கு சீரான சென்னையில், பாட்டாளி மக்கள் இருக்கிற கோவையில், மதுரையில் மாநகராட்சிகளுக்கு தேர்தலை நடத்தி, அங்கேயுள்ள மக்களின் [illegible] மன்ற உறுப்பினர்கள் போட்டியிட வேண்டுமென்பது இன்றைக்கு நாட்டினுடைய காலத் தின் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இதனை ஏன் சொல் கிறேன் என்றால், நடந்து முடிந்த தேர்தலில் நான் வாக்குகளைப் பெறச் சென்றபோது மக்கள், நீங்கள் வெற்றி பெற்றுச்சென்ற வுடன் மதுரை பக்கத்தில் இருக்கிற பசுமலை மகாலட்சுமி ஆலை



1989 பிப்ரவரி 18] [திரு. எஸ். பால்ராஜ்]

யைப் பற்றியும், அதைப்போல மூடிய மற்ற தொழிற்சாலை களைப் பற்றியும் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்ல வேண்டு மென்று கேட்டார்கள். அப்போது வாக்குகளை சேகரிக்க வருபவர்கள் எல்லோரிடமும் சொன்னீர்களா என்று நான் கேட்டேன். இந்த இரண்டு ஆலைகளில் இந்த ஆலைமூடல் காரணமாக 23 பேர்கள் மாண்டுவிட்டார்கள். இவற்றையெல்லாம் எடுத்துப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் அவைகளையெல்லாம் எழுதிக்கொண்டுதான் இங்கே வந்தேன். தற்போதும் அந்த மக்களைச் சந்திக்கும் போது, அவர்கள் என்னிடத்தில் சொன்ன குறைகளைப் பற்றி கேட்டு, மகாலட்சுமி ஆலையை திறக்கவேண்டுமென்று கேட்பார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர் அருள்கூர்ந்து சட்டத் திருத்தத்தின் மீது பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. எஸ். பால்ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டத் திருத்தத்தின் மீது தான் பேசுகிறேன். காரணம் மக்களுடைய உணர்வுகளை இணைத்துப் பேசவேண்டிய கட்டாய நிலை இருக் கிறது. அப்படி அவர்களைக் கேட்கிறபோது, அவர்கள் எங்க ளிடம் எடுத்துச் சொல்லுகின்ற குறைகள் எல்லாம், இதைவிட தலையாய பிரச்சனையாக மதுரையிலே இருக்கிற தண்ணீர்ப் பிரச்சனை, மின்சாரப் பிரச்சினை இவைகளைப் பற்றி பேசுங்கள் என்று கேட்டார்கள். ஏன் இவைகளை எல்லாம் சொல்லுகிறேன் என்றால், மக்கள் மத்தியிலே இன்றைக்கு இருக்கிற பிரச்சினை அடிப்படை வசதிகளைக் கொடுப்பதைப் பற்றித்தான். சட்டமன்ற உறுப்பினர்களிடம் அவர்கள் சொல் வது, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆலைகள், உற்பத்தி இன்னும் இதுபோன்ற மற்ற பிரச்சனைகளைப் பற்றிப் பேசுவதைவிட, இன்றைக்கு மக்களிடம் தலையாய பிரச்சினையாக உள்ள மின்சாரப் பிரச்சினை, சாக்கடைப் பிரச்சினை, கொசுப் பிரச் சினை போன்றவைகளைப்பற்றி பேசுங்கள் என்பதுதான். எங்கள் பகுதியில் உள்ள மேடு பள்ளங்களை எல்லாம் வந்து பாருங்கள் என்று எங்களை அழைத்துச் செல்லுகிறார்கள். நாங்கள் அவர்களிடம் சொன்னது, மாநகராட்சிக்குத் தேர்தல் வந்தவுடன் அவர்கள் செய்வார்கள் என்று சொன்னோம். அப்படி சொன்னதன் காரணமாக உடனடியாகத் தேர்தலை

நடத்துவதை இதயபூர்வமாக நான் வரவேற்கிறேன். நான் இந்த மசோதாவை மீறிச் செல்லவில்லை. ஆனால் இந்த மசோதாவோடு இணைக்கப்பட்ட அந்தக் காரணத்தை நான் சொல்லித்தான் ஆகவேண்டிய நிலையில் இருக்கிறேன்.

இன்றைக்கு இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் 18 வயது வைத்துத்தான் தேர்தலை நடத்தவேண்டும் என்று சொன்னார்கள். 18 வயதைக் கொண்ட அந்த இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பது பற்றி யாருமே அஞ்சமாட்டார்கள். ஆனால் அதற்கு என்று காலத்தை தள்ளிப் போடுவதன் காரணமாக என்ன என்ன பிரச்சினைகள் வரும் என்பதை இதே சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையிலே இருந்தால், கோவையிலே இருந்தால், மதுரையிலே இருந்தால் தெரிந்து கொள்ளலாம். அந்த மக்களுடைய துயரை எப்படித் துடைப்பது என்பதை எண்ணிப்பார்க்காமல் காலத்தைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், மக்கள் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கவேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் நான் இதைப் பேசுகிறேனே ஒழிய மற்றல்ல.

அதைப்போல இன்றைக்கு மதுரையைப் பொறுத்தவரையில் தலைவிரித்தாடுகிற பிரச்சினை தண்ணீர்ப் பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளை நேரில் கண்டறிய ஸ்பெசல் ஆபீசர் மற்றும் கமிஷனரை நாங்கள் அழைத்துச் செல்லுகின்றபோது, அங்கேயிருக்கின்ற பாமர மக்கள் வாழுகின்ற அல்லது முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழுகின்ற அந்த சந்து பொந்துகளில் கூட கார்கள் செல்ல முடியவில்லை. காரணம் ரோடு வசதிகள் சரியானபடி இல்லை. தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க லாரிகளில் ஏற்றி அங்கே கொடுக்கலாம் என்றால், லாரிகள் கூட உள்ளே செல்ல முடியவில்லை. அப்படி என்றால் எப்படித்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது? மாநகராட்சிகளுக்கு தேர்தல் வந்தால், உறுப்பினர்கள் வெற்றி பெற்று சென்றால், அங்கேயிருக்கிற பிரச்சினைகளை அவர்கள் நேரிடையாக கவனித்து அவைகளைத் தீர்ப்பார்கள். இவைகளை எல்லாம் நினைத்து வைகின்ற நோக்கத்தான், டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரைக்கு உடனடியாக 50 லட்சத்திற்கு அள்ளிக் கொடுத்ததன் காரணமாக ஓரளவிற்கு, இவைகளை நாங்கள் செய்திருக்கிறோம். மதுரையில் இருந்து வெற்றி பெற்று இன்றைக்கு அமைச்சராக





இருக்கிற தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், நாங்களும் சென்று பல்வேறு இடங்களைப் பார்த்தோம். கமிஷனர் கூட எங்களோடு வந்து பார்த்தார்கள். அப்படி கமிஷனர் அவர்கள் எங்களோடு வந்தபோது கூட மக்கள் எங்களிடம் சொன்னார்கள்: கடந்த 10 ஆண்டுக்காலமாக இப்படிப்பட்ட வசதிகள் செய்யப் படவில்லை, 5 ஆண்டுக்காலமாக தேர்தல் நடத்தப்படவில்லை, இப்போது நீங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்து விட்டீர்களே, ஏன் இந்தத் தேர்தல் நடத்துவதற்கான ஒரு மசோதாவைக் கொண்டுவந்து விரைவிலே தேர்தலை நடத்தக்கூடாது என்று கேட்டார்கள். எனவே அப்படி மக்கள் கேட்டதன் இதயக் குமுறல்தான் இன்றைக்கு சட்டவடிவமாக்கப்பட்டு, அந்த மக்களுக்கு நல்ல தீர்ப்பை வழங்குகின்ற ஒரு மசோதாவை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தை நாங்கள் இதயபூர்வமாக வரவேற்கிறோம். 18 வயது என்று சொல்லி காலத்தை தள்ளிப்போடுவதை விட, உடனடியாகத் தேர்தலை நடத்தி, மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளாக இருக்கிற குடிநீர்ப் பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை, சாக்கடைப் பிரச்சினை இவைகளைத்தான் உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் வேறு ஒன்றும் கேட்கவில்லை. நான் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று சென்றவுடன், வேலைவாய்ப்பு பற்றிக் கேட்பார்கள், மூடிய ஆலைகளைத் திறவுங்கள் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன், ஆனால் அவர்கள் கேட்பது இந்தப் பிரச்சினையைத்தான். ரேசன் பற்றிக் கூட இங்கே சொன்னார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குப் போகவிரும்பவில்லை. எனவே, இந்தச் சட்டத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி கூறி, உடனடியாக 18 வயதை வைத்து, இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை. . . . (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் slip of the tongue.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அருமையான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நீங்கள் தயவுசெய்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னிப் பேச்சின் தவறு.

[1989 பிப்ரவரி 18

திரு. எஸ். பாலராஜ்: இது கன்னிப் பேச்சின் தவறு. ஆகவே 21 வயது வைத்து உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

*திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் இருத்த) சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு ஜனதா கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

தலைவர் அவர்களே, ஆளுகின்ற பொறுப்பில் வந்தவுடனேயே தேர்தலை நடத்தி விடவேண்டுமென்று எண்ணுகின்ற எண்ணம் பாராட்டப் புரிகிறது என்று சொன்னாலும்கூட, ஏற்கனவே மே மாதத்தில் இந்தத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். மே மாதத்தில் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது என்று சொல்கின்றபோது—21 ஆம் தேதி என்று எண்ணுகின்றேன்—மே 21 ஆம் தேதி வாக்கில் இந்தத் தேர்தல் நடைபெறும் என்கின்ற அளவிற்கு பேசப்படுகிறது. ஒரு தினங்களுக்குள்ளாகவே 18 வயது நிரம்பியவர்களுடைய வாக்காளர் பட்டியல் தயாராகிவிடும் என்கின்ற கருத்தும் சொல்லப்படுகிறது. ஒரு வேளை ஒரு மாதம் அல்லது 2 மாதங்கள் தள்ளிப் போனாலும் கூட, அது ஒரு மிகுந்த பெரிய காலதாமதம் என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்குள்ளாக 'Heavens will not fall' இங்கே மிகப் பெரிய பிரச்சினைகள் ஒன்றும் தீர்ந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. நாம் இப்போது 16 வயது நிரம்பியவர்களின் வாக்கு உரிமையை மறுத்தோமேயானால், 5 ஆண்டுக் காலத்திற்கு அவர்கள் மீண்டும் காத்திருக்க வேண்டும் என்பது பட்டிருக்கும். ஆகவே நாம் வழங்கி வந்த ஒரு உரிமையைத் தான் இந்த மாநகராட்சித் தேர்தலின்போது நாம் பறிக்கிறோம் என்ற அளவில் நிலைமைகள் அமைந்துவிடும். எனவே அந்த உரிமைகளைப் பறிப்பதை தயவுசெய்து இந்த அரசாங்கம் செய்யக்கூடாது. பல ஆண்டுகளாகக் காத்திருந்த மாநகராட்சிகள் ஒரு மாதங்களுக்குக் காத்திருப்பதிலே தவறு ஏற்பட்டு விட முடியாது என்பதை இந்த மாமன்றத்திலே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒரு



மாதங்களுக்குள்ளாக இந்த மாநகராட்சிகளிலே இருக்கக்கூடிய கொசுத் தொல்லைகள் முடிந்துபோய் விடும் என்று நம்புகிறீர்களா? இந்த மாநகராட்சியிலே இருக்கக்கூடிய முறையற்ற வளர்ச்சி. Indisciplined growth கட்டுப்படுத்தப்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இந்த இரண்டு மாதத்திற்குள்ளாக இந்த மாநகராட்சிக்கு இருக்கக் கூடிய per capita availability of water குடிதண்ணீர் அதிகப்படுத்திக் கொடுக்க முடியும் என்று நாம் நம்பமுடியுமா?

இன்னும் சொல்லப்போனால், பம்பாய் மாநகராட்சியிலே நடைபெறக் கூடிய அளவிற்கு ஒரு மிகப் பெரிய வருமானத்தையும் பெற்று. இங்கே இருக்கக் கூடிய எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று நம்மால் நம்பமுடியுமா? இங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட 'Discretiorary powers' என்றுசொல்கிறார்களே, அவ்வாறில்லாமல், வீடுகளுக்கு வரி விதிக்கப்படுகின்றபோது அதற்கு ஒரு 'Uniform taxation pattern' என்பதை அதற்குள்ளாகக் கொண்டு வந்து இப்போது மாநகராட்சியினுடைய நிதிநிலைமைகளையெல்லாம் பெருக்கி விட முடியும் என்றோ, 'Uniformity' அந்த மாநகராட்சிக்கு வந்துவிடும் என்றோ, அந்த இரண்டு மாதங்களுக்குள் வந்துவிடும் என்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது உறுதி சொல்ல முடியுமா என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த இரண்டு மாதங்களுக்குள் மிகப் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி விட முடியும், அல்லது நிகழ்த்திக் காட்டக் கூடிய சக்தி, மந்திர சக்தி உடனடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு வரக் கூடிய மாநகராட்சி மன்றத்திற்கு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை, ஆகவே இரண்டு மாதங்கள் பொறுத்து இருந்து, எல்லோருக்கும் வாய்ப்பு வழங்கி, இப்படிப்பட்ட ஒரு தவறு இந்த அரசாங்கத்தினுடைய காலத்தில் நடைபெறவில்லை என்ற நிலை ஏற்படவேண்டும். நாம் செய்தாலும் இந்த மாமன்றத்திற்கு வெளியே இருக்கக் கூடிய இளைஞர் சமுதாயம் வராமல் இருக்கக் கூடிய ஒரு காரியத்தை பிடிவாதமாக நாம் சொல்லி விட்டோமே, நாம் கூறிவிட்டோமே என்கின்ற அடிப்படையில், அதை நடத்தித்தான் தீரவேண்டும் என்கின்ற கட்டாயம் இல்லாமல் தயவு செய்து புதியதாக ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்றிருக்கக் கூடிய இந்த அரசாங்கம் ஒரு பிடிவாத குணம் இல்லாமல் இந்தச் சட்டத்திருத்தத்தை வாபஸ் பெற்று 18 வயதினரும் பேற

பட்டவர்கள் வாக்களிக்கும் உரிமையை வழங்கிவிட்டு, தேர்தலை நடத்தினால், அதை நாங்கள் பாராட்டுவோம், வரவேற்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில், பிடிவாத குணம் காட்டக் கூடிய அரசு அல்ல. அதுவும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அப்படிப்பட்டவர் அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஏப்ரல் மாதம் தேர்தல் நடத்தலாம் என்று அரசு கருதியது. இடையில் ரம்ஜான் பண்டிகை வருகின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டதால், அதை மே மாதத்தில் நடத்தலாம் என்று உடனடியாக பெருந்தன்மையாக ஏற்றுக்கொண்ட அரசு தான் இது. பிடிவாத குணம் காட்டக்கூடிய அரசு அல்ல இது.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியல் திருத்துகின்ற பணியும் ஒரு சில நாட்களுக்காக முடிவடைந்துவிடும். ஆகவே, அப்படி சிறுபான்மையினர் சமுதாயக் கோரிக்கையை ஏற்று கொஞ்சம் தள்ளிவைத்த அரசு, பெருந்தன்மையோடு இன்னும் கொஞ்சம் தள்ளி இந்த 18 வயது நிரம்பியவர்களையும் இந்த வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொண்டு இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் எடுத்துச் சொல்கிற அதே கருத்து முன்னாலே இந்த அவையிலே வலியுறுத்தப்பட்டது. அப்போதே நான் அந்த விளக்கத்தைச் சொன்னேன். இந்த அரசு 18 வயது உள்ளவர்களை விலக்கித் தேர்தல் நடத்த வேண்டும் என்ற நோக்கம் உடைய அரசு அல்ல. 18 வயது உள்ளவர்களைச் சேர்க்கின்ற இந்தப் பணி பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி தான் அரசு அலுவலர்களால் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த பத்தாம் தேதி தொடங்கப்பட்ட பணி எல்லோரையும் வாக்காளர்களாக சேர்க்கிற பொதுப் பட்டியல் என்ற முறையில் தொடங்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பட்டியலின் முதல் கட்டப் பணி, மே மாதம் முடிவதே தவிர, அதை அச்சிடுவதற்கு ஏறத்தாழ 2 மாத காலம் ஆகும். முழுப் பட்டியல் அச்சிட வேண்டும். முழுப் பட்டியல்



அச்சிடுவது என்பது பத்து நாள், இருபது நாளில் முடியாது. ஆகவே அவர்கள் தெரிவித்தபடி, இதுவரை உள்ள நடைமுறைப் படி 2 மாதம் ஆகும். அதை மறுபடியும் திருத்துவதற்கு ஒரு முறை வெளியிட வேண்டும். வெளியிட்டுத் திருத்தம் கொடுப் பதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். அந்தத் திருத்தங்களை ஏற்று அவற்றையும் சேர்த்து வெளியிடு வதற்கு மேலும் 1½ மாதம் ஆகும். ஆக அவர்கள் தெரிவிப்பது, இப்போது எடுக்கப்படுகிற பொதுவான பட்டியல், 18 வயது உள்ளவர்களை எல்லாம் சேர்க்கின்ற பட்டியல், பாராளுமன்றத் தேர்தல் அடிப்படையிலேயும் சட்டமன்றத் தேர்தல் அடிப்படை யிலேயும் சேர்க்கப்படுகிற அந்தப் பட்டியல், முதல் பட்டியல் தயாராக செப்டம்பர், அக்டோபர் திங்களாகும். இது அலுவ லர்கள், பொறுப்பிலே உள்ளவர்கள் தெரிவிக்கிற பதில். எனவேதான் ஏற்கெனவே உள்ள பட்டியலை வைத்துக் கொண்டு உடனடியாக அதிலே திருத்தம் செய்ய வேண்டும். ஏனென்றால் இது புது ஆண்டு. இந்தத் திருத்தத்தை மட்டும் அந்தப் பட்டி யலிலே சேர்ப்பதாக இருந்தால் 2 மாதத்திலே தயாரிக்க ஒப்புக் கொண்டார்கள். ஆக தேர்தல் பட்டியல் தயாரிப்பதிலே ஏற்படு கிற இடர்பாடு தான் 18 வயது நிரம்பியவர்களைக் கொண்டதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க முடியவில்லை.

(பிற்பகல் 12-20)

இன்னொரு காரணம், செப்டம்பர், அக்டோபர் வருகிறபோது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படக் கூடிய நிலைமை இருக் கிறது. இது அனைவருக்கும் தெரியும். ஆளுங்கட்சியைச் சேர்ந்த பலருக்குத் தெரியும். பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படக்கூடும் என்ற நிலை இருக்கிறது. பாராளுமன்றத் தேர்தல் வர நேரிட்டு விட்டால் இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை மேலும் 5 திங்கள் கடந்துதான் நடத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனாலும் கூட, இப்போது நிர்வாகத்தில் இருக்கக் கூடிய அதிகாரிகள், அமைப்பில் இருக்கக் கூடிய அதிகாரிகளை வைத்துக் கொண்டு பார்க்கிற போது, அதிகாரிகள் அதிகாரிகளை வைத்துக் கொண்டு நடந்து வருகிறபோது, இவ்வளவு காலம் தாமதம் ஒட்டுமொத்தமாக நடந்து வருகிறபோது, இவ்வளவு காலம் தாமதம் ஏற்படுமானால், அதிகப்படியான அலுவலர் களையெல்லாம் சேர்த்து மிக வேகமாக அதைச் செய்வதற்கான

முயற்சியை எடுத்துக் கொள்ளலாமே என்கிற யோசனையை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் காரியங்களைச் செய்கிற போது பல நேரங்களிலே விரைந்து செய்வது உண்டு. அந்த விரைவு என்கிற அடிப்படையிலே இதையும் விரைந்து செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதாக எனக்குத் தெரிகிறது. ஆகவே அப்படி விரைந்து செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செய்யலாமே என்கிற யோசனையைத்தான் நாங்கள் சொல்கிறோம். அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அரசினுடைய பொறுப்பு. ஆகவே அதை ஏற்றுக் கொள்வதற்கான முறைகளை சிந்திக்க வேண்டும், செயல்படுத்த வேண்டும். இவ்வளவு காலம் காத்திருந்த சென்னை மாநகராட்சி மக்கள், மதுரை மாநகராட்சி மக்கள், கோவை மாநகராட்சி மக்கள், ஓரிரு மாதம் கூட காத்து இருப்பதாலே தவறு எதுவும் ஏற்பட்டு விடாது. அதற்குள்ளாக ஒரு பிரசென்ட் என்று சொல்லாமலே அப்படி ஒரு மிகப் பெரிய மாற்றத்தை மாநகராட்சிக்குள்ளே உருவாக்கிட முடியும் என்ற நம்பிக்கை இல்லை என்று . . .

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் அதைத்தான் குறிப்பிட்டார்கள். ஆனால் அதையே மறுபடியும் நீங்களும் நினைவு படுத்துகிறீர்கள். ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உங்களைப் பொறுத்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஒரேயடியாக எதிர்க்கட்சியிலிருந்து வருகிற கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற பிடிவாதமான எண்ணம் ஆளுங்கட்சிக்கு நிச்சயமாக இல்லை. நடைமுறை சாத்தியத்தைத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல 4, 5 மாதங்கள் இதற்காக தயக்கம் ஏற்பட்டு, 18 வயது வாக்காளர்களைச் சேர்ப்பது என்ற முயற்சியிலே, எவ்வளவு வேகமாக விரைந்து செயல்பட்டாலும் கூட, 4, 5 மாதகாலம் நிச்சயமாக ஆகும். இதை அதிகாரிகளோடு நாங்கள் தீர்க்கமாகக் கலந்து பேசிய பிறகு தான், மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு தான் இந்த அவையின் முன் இந்தக் கருத்தை வைக்கிறோம். அந்த நேரத்திலே பாராளுமன்றத் தேர்தல் வந்து விடுமானால், பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகுதான் மாநகராட்சிக்குரிய தேர்தல் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் அப்போதும் இதே வாதத்தை வைக்க



முடியாது. இவ்வளவு காலம் பொறுத்திருந்த மாநகராட்சி மக்கள் மேலும் பொறுத்திருக்கக் கூடாதா என்ற வாதத்தை வைக்க முடியாது. அந்த நெருக்கடியின் காரணமாகத்தான் உடனடியாக மாநகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தி விட வேண்டும் என்ற கருத்தை இந்த அரசு முன் வைக்கிறது.

**திரு. பொன். விஜயராகவன்**: தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தேர்தலைப் பொறுத்த வரையில் இதை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்கின்ற கருத்தில் எங்களுக்கும் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனாலும் கூட இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய 18 வயது (மணியடிக்கப்பெற்றது) 5 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது என்ற எங்களுடைய கருத்தை வலியுறுத்தி எனக்கு அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. என். கணபதி**: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எனக்கு இந்தச் சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் இங்கே ஒழுங்குப் பிரச்சினையிலே பேசுகிறீர்களா அல்லது பேசுவதற்கான வாய்ப்பைப் பற்றிப் பேசுகிறீர்களா? நீங்கள் ஒழுங்குப் பிரச்சினையில் பேசுவதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன்.

* **திரு. எஸ். திருநாவுக்கரசு**: பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் கருதி சுருக்கமாக சட்டமுன்வடிவு ஆய்வுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தங்களின் மேல் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன்.

முதலில், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றினுடைய காலத்தை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டாக கால நீட்டிப்புத் தரப்படுகிற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அடுத்த சட்டமே அதற்கு மாறாக 6 ஆண்டிலிருந்து 5 ஆண்டாகக் குறைக்கப்படுகின்ற சட்டம் நிறைவேற்றப்பட கொண்டுவரப்படுகிறது.

[1989 பிப்ரவரி 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதற்கு மாறாக அல்ல. அதற்குச் சமமாக.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதும் சரிதான். நான் சொல்வதும் சரிதான். அவர்கள் சொன்னபடி சமமாக என்பது சரி. நான் சொன்னது அந்தக் கொள்கையிலே முரண்பாடு, அதனால் அதற்கு மாறாக என்று சொன்னேன். எப்படி யென்றால் 3 ஆண்டை 5 ஆண்டாக ஆக்குகிறீர்கள், நீட்டிக்கிறீர்கள். அடுத்த சட்டமுன்வடிவிலே ஆறு ஆண்டை 5 ஆண்டாகக் குறைக்கிறீர்கள். அதைத்தான் மாறுபாடு என்று நான் சொன்னேன். ஆண்டுகள் 5 ஆக்கப்பட்டன. அது சமமாக இருக்கிறது. இரண்டையும் 6 ஆண்டுகளாக ஆக்கியிருக்கிறீர்கள். ஆனால் முதல் சட்டமுன்வடிவிலே 3 ஆக இருந்ததை 5 ஆக நீட்டிப்புத் தருகிறீர்கள். அடுத்த சட்ட முன்வடிவை நிறைவேற்றுகின்ற போது ஏற்கனவே 6 ஆண்டாக அனுமதிக்கப்பட்டிருந்ததை 5 ஆண்டாகக் குறைக்கிறீர்கள். அந்த வித்தியாசத்தை நான் சுட்டிக்காட்டுகிறேன். இதிலே முதலில் மேயர்களுக்கு ஓராண்டு என்று அனுமதிக்கப்படுவது அவர்களுடைய பணியைச் சிறப்பாகச் செய்ய உதவாது என்பது என்னுடைய அபிப்ராயம். அதற்காகத்தான் 5 ஆண்டுகளாக ஆக்குகிறீர்களோ • என்னவோ. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைப் போல இரு ஆண்டுகளுக்கு ஒருவர் என்றால் 5 ஆண்டுகளிலே 2½ மேயர்கள் இருக்கின்ற சூழ்நிலை வரும். எனவே, 6 ஆண்டாகவே வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு மேயர் என்ற விதத்திலே இருப்பார்களானால் அவர்கள் வந்து காரியங்களைக் கற்றுக்கொண்டு, திட்டங்களை அதிகாரிகளோடு கலந்து பேசி நிறைவேற்றுகின்ற அந்த வாய்ப்பு இரண்டு ஆண்டுகளிலே முழுவதுமாகக் கிடைக்கும். ஏனென்றால், வந்தவுடனேயே ஓராண்டிற்குள்ளேயே அனைத்தையும் தெரிந்துகொண்டு நிர்வாக அதிகாரிகளோடு கலந்து பேசி அவர்களிடத்திலே ஏதாவது திட்டங்கள் இருந்தால் கூட அதை ஓராண்டிலேயே செய்ய முடியாது. எனவே, மேயர்களுக்கான, துணை மேயர்களுக்கான ஆண்டை இரண்டாண்டாக நீட்டிக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு ஆலோசனைக் கருத்தாக எதிர்க் கட்சித் துணைத் தலைவர் தெரிவித்த காரணத்தால் ஒரு உண்மையைத் தெரிவிக்கக்



1989 பிப்ரவரி 18] [பேராசிரியர் க. அன்பழகன்]

கடமைப்பட்டிருக்கிறேன். ஓராண்டுக் காலத்தில் திறமையாகச் செயல்பட்டு மாநகராட்சி மக்களுடைய பாராட்டைப் பெற்ற மேயர்களும் இருக்கிறார்கள். இரண்டாண்டுக்காலம் இருந்து செயல்பட முடியாத மேயர்களாக இருந்தவர்களும் இருக்கிறார்கள். இது அவரவர் திறமையைப் பொறுத்தது. அனுபவமும், தகுதியும் உள்ளவர் தான் பெரும்பாலும் மாநகராட்சியில் ஆளும் கட்சியாக வரக்கூடிய கட்சியிலிருந்து மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற காரணத்தால், 150 உறுப்பினர்கள் இருக்கக்கூடிய சென்னை மாநகராட்சியில் ஓராண்டுக்கு ஒரு மேயர் என்று வருகின்றபோதுதான் பலர் அதிலே தங்களுடையத் திறமையைக் காட்டவும் ஊக்கத்தோடு செயல்படவும் துணையாக இருக்கும் என்ற அடிப்படையிலும் பெருமைக்குரியது மேயர் பதவி என்ற காரணத்தாலும் இந்த முறை ஏற்கெனவே இருந்த முறை என்ற அடிப்படையிலும் ஏற்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து விவாதம் செய்வதாக நினைக்க வேண்டியதில்லை. எனவே, நேரம் கருதி நானும் சுருக்கமாக முடிக்க விரும்புகிறேன். எல்லோரும், மேயராக வருகிற அத்தனை பேரும் அனுபவசாலிகளாக, அறிவாற்றல் மிக்கவர்களாக, திறமையுள்ளவர்களாக வந்து விடுவதில்லை. இங்கே நண்பர்கள் எல்லாம், மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல, 'கம்யூனல் ரொட்டேஷன்' என்றெல்லாம் வருகிறபோது, வந்திருப்பவர்களுக்குள்ளே தகுதியான ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்கமுடியும். அதற்காக ஸ்பெஷலிஸ்டாகப் பார்த்து நிறுத்த முடியாது. ஆகவே, வந்திருக்கிற உறுப்பினர்களிலே ஒருவரை நீங்கள், 'கம்யூனல் ரொட்டேஷனிலே' வருகிறபோது . . .

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'கம்யூனல் ரொட்டேஷனைக்' குறிப்பிட்ட காரணத்தால் இப்போது விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. இப்போது சென்னையைப் பொறுத்தவரையில், மாநகராட்சியில் 'கம்யூனல் ரொட்டேஷன்' பிராமணர், பிராமணர் அல்லாதார், இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர், கிறிஸ்தவ சமுதாயத்தைச் சார்ந்தவர், ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர் என

[மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 18

ரொட்டேஷனிலே வந்திருக்கிறது. ஆறு ஆண்டு என்று வைத்து
விட்டால் இரண்டாண்டிற்கு ஒரு பேர் என்றால், மூன்று பேர்
தான் இடம் பெறமுடியும். ஐந்தாண்டு என்று வைத்துவிட்டால்,
பிராமணர், பிராமணர் அல்லாதார், இஸ்லாமியர், கிறிஸ்துவர், ஆதி
திராவிடர் என்கின்ற அந்த ஐந்து பேரும் ரொட்டேஷனில் இடம்
பெறமுடியும். அதற்காகத்தான் இந்த ஐந்தாண்டு (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஐந்தாண்டுகளிலே ஐந்து பிரிவினர் வரமுடியும்
என்பதற்காக இந்த வாய்ப்பு என்று மாண்புமிகு முதல்வர்
அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆக, எது எப்படியிருந்
தாலும் சரி. ஐந்தாண்டுகளிலே ஐந்து வகுப்பினர் வரமுடியும்
என்பதற்காக இதைச் செய்திருக்கிறோம் என்ற வகையிலே—
பேராசிரியர் சொன்ன வகையிலே இல்லாமல், நீங்கள் சொன்ன
வகையிலே—ஏற்றுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், இரண்டிற்குமே
வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, அந்த வாய்ப்பு எல்லாப்
பிரிவினருக்கும், ஐந்து பிரிவினருக்கும் தரலாமே என்ற அடிப்
படையிலே கொண்டு வந்திருப்பீர்களேயானால், அதுபற்றி
எனக்கு அபிப்பிராயபேதம் இல்லை. ஆக, இந்த ஆண்டுகள் ஒரு
பக்கம் இருந்தாலும் வாக்களிக்கிற வாக்காளர்களுடைய வயதைப்
பொறுத்தவரை, அதிலே மற்ற எதிர்வரிசையிலே இருக்கிற எல்லா
எதிர்க்கட்சிகளின் சார்பிலேயும், 21 வயதோடு தேர்தலை நடத்
தாமல், 18 வயதானவர்களுக்கு வாய்ப்பளித்து தேர்தலை நடத்த
வேண்டும் என்கிற எண்ணத்தை, எந்த வித்தியாசமும் இல்லாமல்
அனைத்துத் தரப்பினரும் எதிர் வரிசையிலிருந்து தந்திருக்
கிறோம்.

ஆளும்கட்சி வரிசையிலேயும்கூட, ஒரு சட்டமன்ற உறுப்பினர்
கன்னிப் பேச்சிலே கடுமாறிச் சொன்னாரா அல்லது உள்ள
உணர்வைச் சொன்னரோ? சென்னையிலே இருக்கிற காரணத்
தாலே பல இளைஞர்கள் அவரை வற்புறுத்தி இருக்கலாம். 18
வயது என்று கேளுங்கள் என்று கேட்டிருக்கலாம். எந்த அடிப்
படையிலே சொன்னார் என்று தெரியவில்லை. ஆகவே எல்லோ
ருடைய கருத்தும், 18-வயதாக இருக்கவேண்டும் என்றிருக்கிறது.

மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல,
இந்தத் தடவை, 18 வயது மட்டுமல்ல, 20, 21 வயதுக்குட்பட்டவர்
கள் இப்போது வாக்களிக்கவில்லை என்றால் இன்னும்
ஐந்தாண்டுகள் கழித்துத்தான் அந்தச் சந்தர்ப்பம் வரும், மாறக



1989 பிப்ரவரி 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

யார் தங்களை ஆட்சி செய்யவேண்டும் என முடி
வெடுக்கிற உரிமையை அவர்கள் பெறுவதற்கு. எனவே, அந்த
வாய்ப்பை அவர்களுக்குத் தருகிற விதத்திலே திருத்தலாம்
என்றால் அரசின் சார்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும்,
மாண்புமிகு முன்னவர் அவர்களும், எங்களுக்கு 18 வயதுள்ளவர்
களுக்கு வாக்களிக்கிற உரிமை தருவதிலே ஆட்சேபனை இல்லை
என்கிற கருத்தை இங்கே அடிக்கடி வற்புறுத்தினார்கள். மற்ற
உறுப்பினர்களும் ஆளும்கட்சியின் சார்பிலே சொன்னார்கள்.

உண்மையிலே அது உண்மையாக இருக்குமானால். அந்த
அடிப்படையிலே பார்த்தால் இந்த அரசின் ஒரு சுற்றறிக்கை
226/89 நாள் 4—2—1989 மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்
திலிருந்து எல்லாப் பணியாளர்களுக்கும் அனுப்பப்
பட்டிருக்கிறது. இதிலே மாண்புமிகு அவை முன்னவர்
பேராசிரியர் அவர்கள் சொன்னது சரிதான். வீடு, வீடாக
வாக்காளர் கணக்கெடுக்கிற பணி 10—2—1989 வெள்ளி முதல்
துவங்குகிறது. அப்படித் துவங்க மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலகத்திலிருந்து, மாவட்ட ஆட்சியாளர் கையெழுத்துப்
போட்டு அனுப்பியிருக்கிறார்—அதற்காகப் போடப்பட்டது—
அதிலே முதல் வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிப்புக்கு
10 ஆம் தேதி முதல் ஒரு மாதம் தருகிறார்கள். 11—3—1989
வரை தருகிறார்கள். அதற்குப் பின்னாலே பட்டியல் தயாரிக்
கப்பட்டு, 13—4—1989-லே முதல் பட்டியல் வெளி வருகிறது.

பிறகு அதிலே விடுபட்ட பெயர்களைச் சேர்க்கவும், மனுச்
செய்யவும் அதற்கான கால அவகாசம் தரப்படுகிறது. அப்படித்
தரப்பட்ட அந்தத் திருத்தங்களோடு மனுக்களை ஏற்றுக்கொண்ட
தற்குப் பின்னாலே வெளியிடப்படுகிற இறுதிப் பட்டியல்
23—5—1989 செவ்வாய் அன்று வெளியிடப்படும் என்று அறிவிக்
கப்பட்டிருக்கிறது. ஆக முதல் பட்டியல் திருத்தங்களோடு
வருகிற பட்டியல். ஆக மொத்தம் பிரிண்டாக அடித்ததற்குப்
பின்னால் இறுதியாக வெளியிடுகிற பட்டியல் 23—5—1989-ல்
வெளி வரும் என்பது அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிற சுற்றறிக்கையி
லிருந்து தெரியவருகிறது.

இப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத்
திருத்தத்தில் ஏப்ரல் என்று இருந்ததை ஏப்ரல்—மே என்று மே

[திரு எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 18

மாதத்தைச் சேர்த்திருக்கிறார்கள். ஒரு சின்னத் திருத்தம்
அவ்வளவு தான். ஏப்ரலில் வைத்ததை மே-யில் தான் வைக்க
முடியும் என்பது. இல்லாமிய சகோதரர்களின் வேண்டுகோளை
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று அந்தக் காலத்தை 15
நாள் தள்ளி வைக்கிறார்கள். ஆக மே மாதத்தில் தான் தேர்தல்
வரவிருக்கிறது. மே மாதத்தில் வரும். மே மாதத்தில் என்கின்ற
போது, இறுதிப் பட்டியல் 23—5—1989-ல் வந்து விடுகிறது.
3-வது வாரத்தில் வந்து விடுகிறது. நீங்கள் 21 ஆம் தேதி
தேர்தலை வைத்தாலும் சரி, அல்லது மே மாதத்தில் தேர்தலை
வைத்தாலும் சரி, கால அவகாசத்தைப் பார்த்தால் 10 நாள் கூட
வித்தியாசம் இல்லை. இன்னும் சொல்லப்போனால் 21 ஆம் தேதி
என்று வைத்தால் இறுதிப் பட்டியல் 23 ஆம் தேதி வந்து
விடுகிறது. 2-நாள் தான் வித்தியாசம். அதனால் பல லட்சம்
இளைஞர்கள் வாக்கு அளிக்கிற உரிமையை இழந்து போகி
றார்கள், அந்த வாய்ப்பு இல்லாமல் போகிறார்கள். அந்த 18
வயதிலிருந்து 21 வயதுக்குள் இருப்பவர்கள் எல்லாம் ஆளும்
கட்சிக்கு எதிராக வாக்கு அளிப்பார்கள் என்று நான் சொல்ல
மாட்டேன். ஏன் அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தரக்கூடாது?
அதிலே யோசிக்க வேண்டியதில்லை. என்று தான் இந்த
நோக்கில் இங்கே நான் ஆலோசனையாக அரசுக்குச் சொல்லி
அந்தத் திருத்தத்தோடு தேர்தலை இன்னும் 10 நாளோ, ஒரு
வாரமோ தள்ளி வைக்க முடியுமானால் அந்த அளவுக்குத் தள்ளி
வைத்து அந்த 18 வயது உள்ளவர்களுக்கும் அந்த வாய்ப்பைத்
தரவேண்டும் என்று கேட்டு இந்த அளவிலே என்னுடைய
உரையை நிறைவு செய்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 18 வயது உள்ளவர்கள் வாக்கு அளிக்க
வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான மாறுபட்ட
கருத்தும் பிரச்சனைக்கு இடமில்லை. 18 வயது என்கின்ற சட்டம்
கொண்டுவரப்பட்ட போது எதிர்க்கட்சியாக இருந்த அதுவும்
கட்சி தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, பாராளு
மன்றத்திற்கு ஆனாலும், சட்டமன்றத்திற்கு ஆனாலும்,
உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆனாலும் மாநகராட்சி மன்றங்
களுக்கு ஆனாலும், 18 வயது உள்ளவர்கள் வாக்கு அளிக்க
வேண்டும் என்பதை ஆளும் கட்சி வரவேற்கிறது. அதிலுள்ள
சிக்கல்கள் தான் இங்கே எடுத்துப் பேசப்பட்டதே அல்லாமல்



1989 பிப்ரவரி 18] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

வேறு அல்ல. இந்த 18 வயது என்பது 1980 ஆம் ஆண்டிலேயே
முடிவு எடுக்கப்பட்டு, முந்தைய ஆட்சியிலே முடிவு எடுக்கப்பட்டு.
1984 ஆம் ஆண்டு சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்
சிகளில் 1—1—1984 அன்று 18 வயது அடைந்தோர் பெயர்களைக்
கொண்ட வாக்காளர் பட்டியல்களை வீட்டுக்கு வீடு சென்று
கணக்கு எடுத்து தயார் செய்து வெளியிட அரசாணை எண்.
542-ன் படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைச்
4—4—1984-ல் ஆணைகளை வெளியிட்டது. இந்த ஆணைகளின்
படி 16—4—1948-லிருந்து—இந்தக் கணக்கெடுப்பு—18 வயது வாக்
காளர்களுடைய கணக்கெடுப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டது. அது
நடந்து கொண்டிருக்கும் போது திடீரென்று அரசு இன்னொரு
உத்தரவு போட்டு வாக்காளர்களுக்கு புகைப் படத்தோடு கூடிய
அடையாள அட்டைகள் வழங்கலாமா என்று யோசிக்கப்படுகிறது
என்று சொல்லி இந்த மாநகராட்சி மன்றங்களிலே இந்த 18
வயது வாக்காளர்களுடைய வாக்கெடுப்பை, அவர்களுடைய
எண்ணிக்கை எடுப்பை, திடீரென்று நிறுத்தி விட்டார்கள்.
அதனால் அது அப்படியே நின்று விட்டது.

இப்போது கூட எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும்,
18 வயதை வலியுறுத்துகின்றவர்களும் திருப்தி அடையலாம்.
1984-லே 18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை அப்போதே
அளிக்கப்பட்டு விட்ட காரணத்தால் அது சேர்க்கப்படாவிட்
டாலும் கூட அளிக்கப்பட்டு விட்ட காரணத்தால் இப்போது
அந்த 18 வயது அவர்களுக்கெல்லாம் 23 வயதாகிறது.
இளைஞர்கள் எல்லாம் இப்போது நிச்சயமாக வாக்கு அளிப்
பார்கள் என்ற திருப்தியையாவது அடையலாம். ஆனால்
முந்தைய அரசினுடைய குற்றம் இடையில் சேர்க்காமல் விட்டது
மாக ஆகிவிட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இப்போதும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும்,
நம்முடைய திரு. விஜயராகவன் அவர்களும் மற்றும் கம்யூனிஸ்டு
கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் இங்கே எடுத்துக் காட்டியதைப்
போல இல்லாமல் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு,
மாநகராட்சி மன்றங்களுக்கு 18 வயதிலிருந்து 21 வயது என்பதை
அப்போது நான் தேர்தல் நடத்த முடியும் என்பதற்காக
ஏற்றுக் கொண்டு அவர்கள் கூறுவது போல விரைவிலேயே இந்த
18 வயது என்பது சேர்த்து முடிக்கப்பட்டு விடுமானால்

தேர்தலுக்கு முன்பே கூட நாம் மீண்டும் 18 வயது என்று திருத்தத்தைக் கொண்டு வந்து தேர்தலை நடத்தலாம். அதிலே இந்த அரசுக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. எனவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வது, தேர்தலை நடத்துவதற்கு, விரைவாக நடத்துவதற்கு ஏதுவாக இருக்குமென்பதால், இதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு அதைப் போல ஒரு எண்ணம் பரிசீலனையிலே இருக்குமானால், இந்தச் சட்டமுன்வடிவை இந்த ஆய்வு நிலையிலேயே நிறுத்தி விடுவது நல்லது. ஏனென்றால், தேர்தல் எப்படிப் பார்த்தாலும், ஏப்ரல், மே-யிலேதான் வரப்போகிறது. எனவே அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடர் நடக்கிறபோது இந்த ஆய்வைத் தொடர்ந்து, அப்பொழுது உங்களால் முடியவில்லையென்று நீங்கள் சொல்வீர்களேயானால் அப்பொழுது சட்டத்தை நிறைவேற்றலாம். இல்லை, 18 வயது நிரம்பிய வாக்காளர்கள் பட்டியல் தயாரிக்கப் பட்டு விட்டது என்று சொன்னால் அதையும் சேர்த்து சட்டத்தை நிறைவேற்றலாம். இரண்டு தடவை ஒரே காரியத்திற்காக சட்டத்தை நிறைவேற்ற வேண்டியதில்லை. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18 வயது நிரம்பியவர்களுக்குச் சந்தர்ப்பம் தரலாம் என்கிற காரணத்தாலே, அவர்கள் சொன்ன காரணத்தாலே இதை இந்த அளவிலே நிறுத்திவிட்டு, அடுத்த சட்டமுன்வடிவை எடுத்து ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலை மே மாதம் முதல் வாரத்தில் நடத்துவது என்கிற குறிக்கோளோடு இன்றைக்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வோம். அதற்கிடையிலே இந்த 18 வயது வாக்காளர்களுடைய அந்த நிலை நிறைவடைந்து விடுமேயானால், அப்பொழுது யோசித்து வேறு முடிவைச் செய்து கொள்ளலாம்.

* **மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சித் தேர்தல் நடத்துவது சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லக் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதே நோக்கில் முக்கியமாக 18 வயது உள்ளவர்களுக்கும் ஓட்டுரிமை அளித்து இந்தத்



தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று எடுத்துச்சொன்ன அந்தக் கருத்துக்களுக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவையின் முன்னவர் அவர்களும் இங்கு தந்த விளக்கம் போதுமானதென்று நான் கருதுகிறேன். இங்கு பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு அப்துல் லத்திப் அவர்கள் சாக்கடையும் குடிநீரும் காதல் செய்கிறது என்று சொன்னார்கள். (சிரிப்பு) அது கடந்த 10 ஆண்டுக்காலமாக ஏற்பட்ட கோளாறு அதுவும் சாக்கடையும் குடிநீரும் காதல் செய்வது எங்களுக்கு தெரியாது. அவர் எப்படியோ அதைப் பார்த்திருக்கிறார். இருப் பினும் இப்படிப்பட்ட குறைபாடுகள் எங்களுடைய கவனத்திற்கு இந்த அரசுக்கு வருகிறபொழுது உடனடியாக அந்த இடத்திற்கு உரிய அமைச்சராகிய நானும் அலுவலர்களும் சென்று நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் போக்குகின்ற பணி அரசின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சி. உள் அதே நோக்கில் ஒன்றைக் கேட்டார்கள். ளாட்சித் துறையின் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்லுகிற வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல, மாநகராட்சியிலே எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லையென்றும், எங்களுக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிரச்சினை, இந்த அவையிலே இருக்கின்ற ஆய்வுக்குள்ள 3 மாநகரங்களுக்கும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய அதே உடனடியாகத் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக, நோக்கில் 6 ஆண்டுக்காலம் என்று இருப்பதை ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியக் குழு அதைப்போல மற்ற நகராட்சிகளுக்கு இருப்பதைப் போல 5 ஆண்டுகாலம் என்று மாநகராட்சியி னுடைய தலைவர் மற்றும் அந்த மாநகராட்சியினுடைய பதவிக் காலம் இருக்கவேண்டுமென்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 பிப்ரவரி 18

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் 1968 ஆம் ஆண்டு நடைபெற்றது. உறுப்பினர்களும், மேயரும் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை பதவியிலே இருந்தனர். அந்தத் தேதி முதல் மாநகராட்சிக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவரின் பதவிக்காலம் அவ்வப் பொழுது நீடிக்கப்பட்டு வந்தது. தனி அதிகாரியின் தற்போதைய பதவிக்காலம் இவ்வாண்டு—1989 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் தேதியுடன் முடிவடைய இருக்கிறது.

மதுரை மாநகராட்சியின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் 1978 ஆம் ஆண்டு நடைபெற்றது. உறுப்பினர்கள் மற்றும் மேயரின் பதவிக்காலம் 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதியோடு முடிவடைந்தது. அந்தத் தேதி முதல் மதுரை மாநகராட்சிக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தனி அதிகாரியின் பதவிக் காலம் அவ்வப்பொழுது நீடிக்கப்பட்டு வந்தது. தனி அதிகாரியின் தற்போதைய பதவிக்காலம் இவ்வாண்டு 1989 ஜூலை 29 ஆம் தேதியோடு முடிவடைய இருக்கிறது.

கோயம்புத்தூர் நகராட்சி 1981 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதி முதல் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. மாநகராட்சியின் மன்றத்திற்கான உறுப்பினர்கள் தேர்தல் இதுவரை நடத்தப்படவில்லை. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இம் மாநகராட்சியின் தனி அதிகாரியாகச் செயல்பட்டு வருகிறார். தனி அதிகாரியின் பதவிக்காலம் அவ்வப்பொழுது நீடிக்கப்பட்டு வந்து, அதுவும் இவ்வாண்டு 1989 ஜூன் மாதம் 11 ஆம் தேதியுடன் முடிவடைய இருக்கிறது.

1980 ஆம் ஆண்டு இம்மாநிலத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களின் வாக்களிப்பு வயதை 21-லிருந்து 18 ஆகக் குறைத்து சட்டங்கள் திருத்தப்பட்டன. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழினத் தலைவர் முதலமைச்சரவர்களும் அவையின் முன்னவரும் சுட்டிக்காட்டினார்கள்.

இந்தச் சட்டம் வந்தபொழுதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதை நாங்கள் வரவேற்றவர்கள். இன்னும் சொல்லப்போனால், நாடாளுமன்றத்தில் இந்த இப்பொழுது தேர்தல் நடத்துவதற்கு முன்பு அவசரம் அவசரமாக 18 வயது உடையவர்களுக்கு நாடாளுமன்றம், மக்கள் சட்டமன்றத்தில்



1989 பிப்ரவரி 18] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

வாக்குரிமை அளிக்கப்படும் என்று நாடாளுமன்றத்திலே சட்டம் கொண்டுவந்த பொழுதேகூட, நம்முடைய முதலமைச்சரவர்கள் அதை வரவேற்று, அதேநேரத்தில் அதைக் காரணம் காட்டி இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்கக் கூடாது—சட்டம் வருவதை வரவேற்கிறோம்—அதைக் காரணம் காட்டி ஒத்தி வைக்காமல் தமிழகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று இங்கு வலியுறுத்திச் சொன்னார்கள். இதை நாம் கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையிலேதான் இப்பொழுதும் இந்த ஆட்சி 18 வயது உரியவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறது. அதற்காக மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் மாநகராட்சி செயல்படுமேயானால் அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலைமைகளை அதிகாரிகளே கவனத்திலே எடுத்துக்கொண்டு நகர மக்களுக்கு நன்மை செய்ய இயலாது என்பதைக் கவனத்திலே கொண்டுதான் இந்தத் தேர்தலை நடத்த அரசு முன் வந்திருக்கிறது.

அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையை, தேர்தல் நேரத்தில் தேர்தல் அறிக்கையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்கள் தலைவர் தமிழக முதல்வர் வைத்தார். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்குமேயானால் உடனடியாக சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெறும், மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்பார்கள் என்று அறிவித்ததைத் தான் இன்றைக்கு நாங்கள் செயல்படுத்த முன் வந்திருக்கிறோம். தேர்தலிலே சொல்வதைச் செய்வோம் என்ற கொள்கைக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இதை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

இங்கே மாநகராட்சிகளுக்கு நீண்ட காலமாகத் தேர்தல்கள் நடத்தப்படவில்லையாதலால், தேர்தல்கள் உடனடியாக இவ்வாண்டில் ஏப்ரல் மாதம் நடத்த வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல, நானும் இங்கே தெரிவித்ததைப் போல ரம்சான் பண்டிகை வருவதைச் சுட்டிக்காட்டிய காரணத்தாலே அவைகளைப் பெருந்தன்மையுடன் ஏற்று, இந்த அரசு ஏப்ரல், மே

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 பிப்ரவரி 18

மாதத்தில் தேர்தலை நடத்தலாம் என்று சொன்னதனால் இப்போது சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளின் மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகவும், மேயர் மற்றும் துணைமேயரின் பதவிக் காலம் ஓராண்டாகவும் இருந்தது. 1978 ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகளாகவும், மேயர், துணை மேயரின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டில் அரசால் கொண்டுவரப்பட்ட சட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் என்றும், மேயர் மற்றும் துணைமேயர் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என்றும் உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் உட்பட எல்லா மன்றங்களுக்கும் பதவிக் காலத்தை ஒரே சீராக அமைத்து, ஐந்தாண்டுகளாக இருக்க வேண்டுமென்று தற்போது அரசு முடிவு எடுத்துள்ளது. இதற்காக நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாகக் குறைக்கவும் மேயர் மற்றும் துணை மேயரின் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த 1989ல் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்டமுன்வடிவில் நடைபெறவிருக்கும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு சட்டமன்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில், மாநகராட்சி வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க தனிவகை முறைகள் ஏற்படுத்தவும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலத்தை ஐந்தாண்டுகளாகவும் மேயர், மற்றும் துணை மேயர் பதவிக் காலத்தை ஓராண்டாகக் குறைக்கவும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சட்டங்களைத் திருத்தவும் கொண்டுவரப்படுகிறது. மே மாதம் நடைபெறவிருக்கும் மாநகராட்சித் தேர்தலில் மட்டும்தான் சட்ட மன்ற வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பட்டியலைப் பயன்படுத்த இச்சட்ட முன்வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது. பின்னர் நடைபெறும் மாநகராட்சித் தேர்தல்களுக்கு 18 வயது அடைந்தோர் வாக்குரிமை அளிக்கும் வயது உள்ளவர்களாவார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



1989 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. என். பாலசுப்ரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (தனி வகை முறைகள் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் தேர்தலில் 18 வயதடைந்துள்ள இளைஞர்களுடைய உரிமை [illegible] விதத்தில் இருக்கப்பட்டு அல்லது [illegible] ஏற்கெனவே உள்ள விதத்தில் கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவும், இளைஞர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் .... நீங்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் சொன்னீர்கள்—வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் பேசுகின்ற போது பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் முடிவடைகிறபோது அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டதாக இங்கே ஒரு சொற்றொடரைச் சொன்னார்கள். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்று சொல்லுகிற கோரிக்கை அனைத்துத்

காப்பாலுமே ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றுதான். 18 வயதை அடைந்து விட்டால். அவர் 'மேஜர்' என்று சொல்லி அவர் தானே தன்னுடைய சொத்துக்களை நிர்வகிக்கும் தகுதியை அடைந்து விட்டார் என்று சொல்லி, 18 வயது வந்தவர்களுக்கு உரிமையைக் கொடுத்து விடுகிறோம். பெற்றோருடைய பொறுப்பிலும் பாது காப்பிலும் இருந்து கொண்டிருக்கிற ஒரு கன்னிப் பெண், தன் காதலன் ஒருவனைத் தேடி கைப்பிடித்து வாழ்க்கையினைத் தொடங்குவதற்குரிய தகுதியை 18 வயதிலேயே பெற்று விடுவ தாகச் சட்டபூர்வமாக நாம் தெரிந்து கொள்கிறோம். அப்படி இருக்கிற பொழுது, ஓட்டுரிமை, அதாவது மாநகராட்சியிலே தம்மை ஆள்வது யார் என்று முடிவெடுக்கிற அந்த ஓட்டுரிமை அவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது என்று நாம் கருதுகின்றோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்ற பொழுது இதனை நீங்கள் நிறைவேற்றித் தாருங்கள்; முடிந்தால் அதனையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார் எனவே, அவர்களுடைய உள்ளத்திலே அந்த எண்ணம் கொஞ்சம் எட்டிப் பார்க்கின்ற காரணத்தினால், இப்பொழுது அனுமதி கொடுக்கா மல் நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், அதுவே ஒரு தூண்டுகோலாக இருந்து, 18 வயது அடைந்த இளைய சமுதாயத் திற்கு வாக்குரிமை அளிக்கின்ற உரிமையினைப் பெற்றுத் தந்து விடுவோம் என்ற காரணத்திற்காக, இதனை நாங்கள் எதிர்த்து வாக்கெடுக்க வேண்டுமென்று கேட்கின்றோம்.

**திரு. பொன் விஜயராகவன்:** தலைவர் அவர்களே, பொது வாக இப்பொழுது வாக்காளர்களைச் சேர்க்கின்ற பணிக்கு, சென்னை மாநகரம், கோவை மாநகரம், மதுரை மாநகரம் இந்த 3 மாநகரங்களுக்கு அதிகப்படியான ஆட்களை நியமித்து, குறிப் பிட்ட காலத்தில், குறைவான காலத்தில் செய்ய முடியும் என் கின்ற ஒரு எண்ணம் ஏற்படுகின்ற காரணத்தால்—எல்லாவற்றை யும் சேர்த்துச் செய்வதற்குக் காலதாமதமாகலாம்—இந்த மூன்று மாநகராட்சிகளுக்கு மட்டும் அதிகப்படியான ஆட்களை வைத்து, விரைவாக, 18 வயதடைந்தவர்களைக் கணக்கெடுத்து, தேர்தல் நடத்துவதற்கு முன்வரவில்லையென்பதைக் குறையாகக் கண்டு, இதை வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்று கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, உங்களுடைய கருத்தை நான் கவனத்தில் கொள் கிறேன் என்றாலும், மீண்டும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது.

**

(குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உரையாற்றும்போது சொல்வதே வேறு. தலைவர், எதிர்ப்போரே அதிகம் என்று சொன்ன பொழுது, நீங்கள், இல்லை, நாங்கள்தான் அதிகம் என்று சொல்லி யிருந்தால்தான் டிவிஷனுக்கு விடுவது வழக்கம்

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் முதலிலேயே ஒரு குரல் வாக்கெடுப்பிற்கு விட்டீர்கள். அப்பொழுது நான் பேசுகிறபொழுதே சொன்னேன். டிவிஷன் விட வேண்டுமென்று கேட்டோம். இரண்டாவது தடவை குரல் ஓட்டுக்கு விடுகிறபொழுது சொல்கிறோம். நீங்கள் ஆம் என்பவர் அதிகம் என்று சொல்லும்போது, அப் போதும் நாங்கள் அப்ஜக்ட் பண்ணி, டிவிஷன் கேட்கிறோம். எனவே, அந்த நேரத்திலே, நீங்கள் டிவிஷன் விடுவதிலே ஒன்றும் தயக்கம் காட்ட வேண்டியதில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே துணைச் சபாநாயகராக வும் பணியாற்றியிருக்கிறார். எனவே, அவர்கள் அந்த அனுபவங் களை மறந்திருக்க மாட்டார் என்று கருதுகிறேன். ஆதரிப்போரே அதிகம் என்று இறுதியாகத் தலைவர் சொன்ன பிறகு இல்லை யென்று கை தூக்கி, மறுப்போர்தான் அதிகம் என்று சொன்னால் தான் டிவிஷன் விடுவது வாடிக்கை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** முதல் தடவை சொல்கின்ற பொழுது டிவிஷன் விடவேண்டுமென்று கேட்டோம். அடுத்த தடவையும் நீங்கள் குரல் ஓட்டுக்கு விடும்போது, நாங்கள் இல்லை யென்று சொன்னோம். இரண்டாவது தடவை உறுதிப்படுத்து வதற்காக நீங்கள் கேட்கிறீர்கள். திரும்பி நீங்கள் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால், டிவிஷன் கேட்கிறோம். அதனை அந்த நேரத்தில் நாங்கள் கேட்கும்போது அதை ஏற்றுக்கொண்டு டிவிஷனுக்கு விடுவதுதான் முறையாக இருக்கும்.

[1989 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பை நான் கொடுத்திருக்கிறேன்.

இப்பொழுது பிரிவு 2-க்குப் போகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் திரு. பாலசுப்பிரமணியம் அதை வலியுறுத்தவில்லையென்று சொல்லி விட்டார்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கொறடா திரு. பாலசுப்பிரமணியம் கொடுத்திருந்த ஒரு திருத்தம் என்னவென்றால், மக்கள் கருத்தறிய அதை அனுப்ப வேண்டுமென்பதாகும். அந்தத் திருத்தத்தை அவர் வலியுறுத்தவில்லை. ஆனால், இதை ஆதரிக்கிறார், வலியுறுத்துகிறார்; ஆகவே, வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

**திரு. குமரி அனந்தன்:** சபாநாயகர் அவர்களே, அந்த 18 வயதை வலியுறுத்தி, அதை ஆதரிப்பவர்கள் என்று சொல்கின்றவர்களுடைய அமைப்பின் தலைவர்கள் எல்லாம், தலைமைப் பொறுப்பிலே இங்கே அமர்த்தப்பட்டிருப்பவர்கள், அவர்கள் சார்பாக இருந்து பேசுகிறவர்கள் எல்லாம், நாங்கள் வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கேட்டு விட்டோம். நான் கேட்டேன்; மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்; மதிப்பிற்குரிய மாண்புமிகு விஜயராகவன் கேட்டார். ஆகையால் நீங்கள் வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். அதை எதிர்த்து அவர்கள் வாக்கெடுப்புக்கு விட வேண்டுமென்று கேட்டால் நாங்கள் அதை மதிக்கிறோம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1989 பிப்ரவரி 18]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது தெளிவாகக் கேட்டேன். தேர்தல் விரைவிலே நடைபெற வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. தேர்தல் விரைவிலே நடைபெற வேண்டும் என்பதை வரவேற்கிறோம். ஆனால் இரண்டு நாள் கிடைக்கிறது—நான் சொன்னதைப்போல 21-ந் தேதி நீங்கள் சொல்கிறீர்கள், 23-ந் தேதி அந்த இறுதிப் பட்டியல் வெளி வருகிறது. ஆக இரண்டு நாளில் அந்த வாய்ப்பை இளைஞர்களுக்கு இல்லாமல் ஆக்குகிறீர்கள். 5 நாள், 10 நாள் தள்ளி வைப்பதால் . . . . .

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எட்டு வருஷம் இவர்களால் 18 வயது ஆனவர்களுடைய பட்டியலைத் தயாரிக்க முடியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). 8 வருஷம்—ஒரு வருஷம் இரண்டு வருஷம் அல்ல; 1980-வது வருஷத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை 8 வருஷம் ஆன பிறகும் 18 வயது வாக்காளர்களைச் சேர்க்க இவர்களால் இயலவில்லை. இவர்கள் எங்களைப் பார்த்து இரண்டு நாளில் நீங்கள் முடிக்க முடியாதா என்று கேட்கிறார்கள். மூன்று மாநகராட்சி மன்றங்களின் தேர்தல்கள், மதுரையில், சென்னையில், கோவையில் அந்த மக்கள் விரும்புகின்ற வகையில் விரைவிலே நடைபெற்றாக வேண்டுமென்பது தான் இந்த அரசின் நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி இப்போது உரிய நேரத்தைக் கடந்துவிட்டது. எனவே, அவையின் அனுமதியோடு நேரம் நீட்டிக்கப்படுகிறது. இன்னும் ஒரு சட்ட முன்வடிவு இருக்கிறது என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இதை வாக்கெடுப்புக்கு விட வேண்டும். நான் சொல்வது—இரண்டு நாளில் நீங்கள் எல்லாவற்றையும் முடிக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து நான் சொல்வதைக் கேட்க வேண்டும். 18 வயது உள்ளவர்களைச் சேர்த்து வாக்கெடுக்கிற பணி இந்த மாதம் 10-ந் தேதி தொடங்கிவிட்டது. அந்தப் பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. அதையே நீங்கள் வைத்துக் கொள்ளலாம். அந்த இறுதிப் பட்டியல்தான் 23-ந் தேதி வெளிவருகிறது. அதை வைத்துக்கொண்டு, தேர்தலை நடத்தலாம். 8 ஆண்டு என்பதிலே . . . .

[திரு எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டெடுப்பு கேட்பது அவர்கள் கொடுத்த திருத்தத்திலேதான் கேட்க வேண்டும். அவர்கள் திருத்தம் கொடுக்கவில்லை. மாண்புமிகு காங்கிரஸ் கட்சி கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த திருத்தத்தை அவர்கள் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். இப்போது எந்த விதியின்படி அவர்கள் ஓட்டெடுப்புக் கேட்கிறார்கள்?

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள். திருத்தம் வருகிறபோது, திருத்தம் கொடுத்திருந்தால் திருத்தத்திலேயே பேசலாம். டிவிஷன் கேட்கலாம். திருத்தம் இல்லை. ஒட்டு மொத்தமாக 18 வயது என்று இருக்கிற பிரிவில் கேட்கலாம். மொத்தத்தில், 18 வயதாக்காமல் 21 வயதை வைத்து தேர்தல் நடத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம். ஆகவே நாங்கள் டிவிஷனை கேட்கலாம்; அதிலே தவறு இல்லை.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 18 வயது இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்துடைய வயது அல்ல. எனவே, 18 வயது என்ற அந்த வாக்காளர் பட்டியலை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நாட்டுக்கு உணர்த்த வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று அவர்கள் விரும்புவார்களேயானால் அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. எங்களுடைய நோக்கமே 18 வயதா, 21 வயதா என்பதல்ல; சீர்குலைந்து கிடக்கின்ற மாநகராட்சி மன்றங்களுக்கு விரைவிலே தேர்தல் நடைபெற்று, அங்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் அமர வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். அதனால்தான் சொன்னேன். 21 வயது என்பதை இப்போது ஏற்றுக்கொண்டு தேர்தலுக்கு நாம் முனைப்பாக நடை போடுவோம். அதற்கு இடையிலே இந்த 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் பூர்த்தியடைந்து விடுமோயானால், திருத்தம் கொண்டுவந்து மீண்டும் அவை கூடும்போது, வரவு-செலவுத் திட்டத்திற்காக கூடும்போது, திருத்தம் கொண்டு வந்து 18 வயது உடையவர்களைக் கொண்டு தேர்தலை நடத்துவோம். அதுவரை இப்போதுள்ள 21 வயது இருக்கட்டும் என்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய நோக்கமே தவிர வேறல்ல.



1989 பிப்ரவரி 18]

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நீங்கள் முடிவை அறிவிக்கலாம். மீண்டும் மீண்டும் விவாதம் அவசியமில்லை. அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்வார்கள்; எங்களுடைய கருத்தை நாங்கள் சொல்வோம். ஆகவே நீங்கள் டிவிஷனுக்கு விடலாம். நாங்கள் சொல்வது, It is a matter of time தான். ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்ளே நீங்கள் நினைத்தால் 18 வயது உள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் தர முடியும். ஆகவே, ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தள்ளி வைத்தால் என்ன அந்த அடிப்படையில்தான் இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எட்டு வருஷத்தில் முடியாத காரியத்தை 8 நாளில் முடிக்க முடியாது என்பதுதான் எங்களுடைய கருத்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் செய்யாத காரியங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். பல காரியங்களைச் செய்வதற்காகத்தான் இன்றைக்கு நீங்கள் ஆளும் கட்சியாக வந்திருக்கிறீர்கள். நாங்கள் செய்யத் தவறியதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் செய்யத் தவறியதுதான் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சி மன்றத் தேர்தல். அதைத்தான் இப்போது நடத்தப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 18 வயது வாக்காளர்களைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 18 வயது உள்ளவர்களையும் சேர்த்துத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லுகிறோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, ஓட்டெடுப்பு வேண்டுமென்று கேட்பது முறையாகக் கேட்பது அவர்களுடைய * * எனவே உரிமை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 பிப்ரவரி 18

இதிலே ஒரு சட்டப் பிரச்சினை உருவாகி இருக்கிறது. ஆனால் அவர்கள் இந்த வாக்கெடுப்பு நடத்தக்கூடாது என்று சொல்வது பேரவைத் தலைவருடைய . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினைகள் மிக முக்கியமானவைதான். இருந்தாலும் * * அறிவித்து விட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள், டிவிஷன் கேட்டிருக்கிறார்கள். எனவே ஒரு அரசியல் மாண்பையும் நாகரீகத்தையும் நிலை நிறுத்துகிற கட்சியாக ஆளும் கட்சி இருக்கிறது என்பதற்கு அடையாளமாக நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்—அது தங்களுடைய உரிமை. இருந்தாலும் என்னுடைய கடமையை நான் நினைவூட்டுகிறேன் * * அந்த சொற்றொடரை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட்டு டிவிஷனுக்குத் தாங்கள் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்ற சொற்றொடர் நீக்கப்பட்டு 'டிவிஷன்' வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

'டிவிஷன்' கோரப்பெற்றதால் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு மணி இரண்டு நிமிடம் அடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நுழைவாயில்களின் கதவுகளை மூடவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

(நுழைவாயில்களின் கதவுகள் அனைத்தும் மூடப்பெற்றன.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் மீண்டும் வாக்கெடுப்புக்கு விடப் பெறுகிறது.

தீர்மானம் மீண்டும் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

'டிவிஷன்' கோரப் பெற்றதற்கு இணங்க எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1989 பிப்ரவரி 18]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப் பெற்றன:

ஆதரித்தோர்.

1. திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்.
2. திரு. பெ. துரைசாமி.
3. திரு. மு. இராமநாதன்.
4. திரு. என். கணபதி.
5. திரு. அன்பில் பொய்யாமொழி.
6. திரு. இளம்வழுதி.
7. திரு. மு. க. ஸ்டாலின்.
8. திரு. கே. அண்ணாதுரை.
9. டாக்டர் கே. அண்ணாதுரை.
10. திரு. ஆ. அதியமான்.
11. திரு. வ. அன்பழகன்.
12. திரு. பெ. ஆசையன்.
13. திரு. டி. இராதாகிருஷ்ணன்.
14. திரு. நா. இராமகிருஷ்ணன்.
15. திரு. ஏ. எம். இராமசாமி.
16. திரு. எம். இராமச்சந்திரன்.
17. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.
18 மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்.
19. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.
20. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.
21. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்.
22. மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி.
23. மாண்புமிகு திரு. கோ. சி. மணி.
24. திரு. எல். கணேசன்.
25. மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்.

26. மாண்புமிகு திரு. ச. தங்கவேலு.
27. திரு. த. ஆறுமுகம்.
28. திரு. ஆ. நடராசன்.
29. திரு. அ. மலர்மன்னன்.
30. திரு. ரா. சின்னசாமி.
31. திரு. வி. கே. இராசு.
32. திரு. செ. இராமலிங்கம்.
33. திரு. அ. இராசேந்திரன்.
34. திரு. தா. உதயசூரியன்.
35. திரு. ஆர். எட்டியப்பன்.
36. திரு. சா. கணேசன்.
37. திரு. ஏ. கணேசமூர்த்தி.
38. திரு. எஸ். பி. கண்ணன்.
39. திரு. டி. ஆர். கஜபதி.
40. திரு. பி. காளியப்பன்.
41. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி.
42. திரு. எஸ். குணசேகரன்.
43. திரு. சு. குருநாதன்.
44. திரு. ஏ. கோதண்டம்.
45. திரு. வெ. கோவிந்தன்.
46. திரு. வி. சி. கோவிந்தசாமி.
47. திரு. சி. சண்முகம்.
48. திரு. ஏ. ஜி. சம்பத்.
49. திரு. ஆர். சாமிநாதன்.
50. திரு. சா. சிவசுப்பிரமணியம்.
51. திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.
52. திரு. க. சுந்தரம்.
53. திரு. எஸ். சிவலோகம்.
54. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி.
55. மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்.



56. மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்
57. மாண்புமிகு திரு. துரைமுருகன்.
58. மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்.
59. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்ற தெய்வசிகாமணி.
60. மாண்புமிகு திரு. கே. என். நேரு.
61. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்.
62. திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி.
63. டாக்டர் க. காஞ்சனா.
64. திருமதி எஸ். பி. சற்குணம்.
65. டாக்டர் த. சாந்தகுமாரி.
66. திருமதி யசோதா செல்லப்பா.
67. திரு. ப. சுந்தரம்.
68. திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
69. திரு. பெ. சு. திருவேங்கடம்.
70. திரு. கே. சுந்தர்.
71. திரு. ஏ. சுப்பு.
72. திரு. து. க. சுப்பிரமணியம்.
73. திரு. ஏ. செங்குட்டுவன்.
74. திரு. செங்கை சிவம்.
75. திரு. ந. சௌந்திரபாண்டியன்.
76. திரு. அ. தங்கம்.
77. திரு. என். தங்கவேல்.
78. திரு. வீ. தமிழ்மணி.
79. திரு. ஏ. சி. தயாளன்.
80. திரு. கே. ஆர். ஜி. தனபாலன்.
81. திரு. வி. தனராஜ்.
82. டாக்டர் து. திருமூர்த்தி.
83. திரு. துரை சந்திரசேகரன்.
84. டாக்டர் கோ. நந்தகோபாலகிருஷ்ணன்.
85. திரு. பொ. நடராசன்.
86. திரு. ஆர். பஞ்சாட்சரம்.

87. திரு. மா. பன்னீர்செல்வம்.
88. திரு. ராம. நாராயணன்.
89. திரு. எஸ். பால்ராஜ்.
90. திரு. கே. பிச்சாண்டி.
91. திரு. என். பெரியசாமி.
92. திரு. ஐ. பெரியசாமி.
93. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்.
94. திரு. எம். அப்துல் லத்தீப்.
95. திரு. பி. என். வல்லரசு.
96 திரு. டி. சி. விஜயேந்திரையா.
97. திரு. பா. அப்துல் சமத்.
98. திரு. அ. பெரியண்ணன்.
99. திரு. டி. பொன்முடி.
100. திரு. ஜி. பொன்னுபிள்ளை.
101. திரு. எம். சேட்டு.
102. திரு. ஆர். மகேந்திரன்.
103. திரு. ஆச்சியூர் எம். மணி.
104. திரு. இரா. மதிவாணன்.
105. திரு. பா. மனோகரன்.
106. திரு. கோ. பூவராகன்.
107. திரு. அ. மு. ஹமீது இப்ராஹிம்.
108. டாக்டர் சி. ரா. மாசிலாமணி.
109. திரு. அ. மாரிமுத்து.
110. திரு. ப. முத்துசாமி.
111. திரு. எம். முத்தையன்.
112. திரு. பொ. முருகேசன்.
113. திரு. வ. முல்லைவேந்தன்.
114. திரு. எஸ். ஆர். முனிரத்தினம்.
115. திரு. எல். மூக்கையா.
116. திரு. இரா. மோகன்.
117. திரு. சி. ராமச்சந்திரன்.



118. திரு. எம். எல். கே. ராஜேந்திரன்.
119. திரு. ஆர். வரதராசன்.
120. திரு. பெ. வெங்கடாசலம்.
121. திரு. இ. வேணு.
122. திரு. மீ. அ. வைத்தியலிங்கம்.
123. திரு. ஏ. தங்கராஜு.
124. திரு. ஜெ. அசேன்.
125. திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.

எதிர்த்தோர்.

1. திரு. பொன். விஜயராகவன்.
2. திரு. ஜி. பழனிச்சாமி.
3. திரு. ஜி. ஜி. குருமூர்த்தி.
4. திரு. எஸ். திருநாவுக்கரசு.
5. திரு. குமரி அனந்தன்.
6. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.
7. திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
8. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
9. திரு. எஸ். டேனியல் ராஜ்.
10. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
11. திருமதி ரமணி நல்லதம்பி.
12. திரு. எ. ஏகாம்பர ரெட்டி.
13. திரு. கே. ஆர். இராமசாமி.
14. திரு. பி. வி. இராஜேந்திரன்.
15. திரு. எம். கே. கரீம்.
16. திரு. ஆர். சிங்காரம்.
17. திரு. ஆர். நடேசன்.
18. திரு. எச். எம். ராஜு.
19. திருமதி பி. லட்சுமி.

[1989 பிப்ரவரி 18

20. திரு. வி. கே. சின்னசாமி.
21. திரு. எஸ். டி. உகம்சந்த்.
22. திரு. வெ. இராசு.
23. திரு. கே. சின்னசாமி.
24. டாக்டர் எஸ். சுந்தரராஜ்.
25. திரு. வே. நா. சுப்பிரமணியன்.
26. திரு. எம். தங்கவேல்.
27. திரு. செ. பெருமாள்.
28. திரு. கொ. மாதப்பன்.
29. திரு. பி. மாரப்பன்.
30. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

நடுநிலை வகித்தோர்.

1. திரு. கே. ரமணி.
2. திரு. கோ. வீரையன்.
3. திரு. சி. கோவிந்தசாமி.
4. திரு. எம். அண்ணாமலை.
5. திரு. சி. கோவிந்தராஜன்.
6. திரு. கே. ஆர். சுந்தரம்.
7. திரு. என். பழனிவேல்.
8. திரு. வி. இராமசாமி.
9. திருமதி பாப்பா உமாநாத்.
10. திரு. எஸ். ஏ. தங்கராஜன்.
11. திரு. வி. தம்புசாமி.
12. திரு. எம். சீரங்கன்.
13. திரு. உ. ரா. வரதராசன்.
14. திரு. யூ. கே. வெள்ளிங்கிரி.



1989 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

| | |
|---|---|
| தீர்மானத்தை ஆதரித்தோர் | 125 |
| தீர்மானத்தை எதிர்த்தோர் | 30 |
| நடுநிலை வகித்தோர் | 14 |

ஆதரித்தோரே அதிகம். எனவே, தீர்மானம் நிறைவேறியது.

இப்போது சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In Clause 2, in sub-clause (1), *for* the expression 'in the month of April 1989', *substitute* the expression 'during April-May 1989".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 16 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In the Preamble, in the first paragraph, *for* the expression 'In April 1989' *substitute* the expression 'during April-May 1989'.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (தனி வகை முறைகள் மற்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1989) திருத்தப்பெற்ற படி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

## 4. அமைச்சரின் அறிக்கை.

பிள்ளைப்பேறு மருத்துவத்தில் பயன்படும் ஒரு மருந்தில் 'எயிட்ஸ்' வியாதிக்கான அறிகுறிகள் இருப்பதால் அம் மருந்து தடை செய்யப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அகில இந்திய சுகாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1989 ஆம் ஆண்டு



[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதியன்று டில்லி சென்றிருந்தபொழுது அன்றைய செய்தித்தாள் ஒன்றில் ஒரு செய்தியைப் படித்தேன். அதில் "சில பிள்ளைப்பேறு மருத்துவத்தில் தாய்மார்களுக்கு (R.H. Negative) ஆர். எச். நெகடிவ் இரத்தம் இருக்கு மானால் ஆண்டி (ரோ) இன்முவகுளோபுலின் பி.பி. ( (Anti D RHO) Inmuvaglobulin B.P. Injection என்ற ஊசி மருந்து போடப்படும். இது இரத்தத்திலிருந்து தயாரிக்கப்படும் மருந் தாகும். இம்மருந்தில் எயிட்ஸ் (AIDS) வியாதிக்கான அறி குறிகள் இருப்பது டில்லியில் கண்டுபிடிக்கப்பட்டு மக்களிடையே பெரும் பீதியை கிளப்பியுள்ளது. இச்சந்தேகம் சென்னைவாசி களிடமும் வந்துள்ளது. அமைச்சரும், இயக்குநரும் டில்லியில் இருப்பதால் அவர்கள் திரும்பி வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப் படலாம் என்று செய்தி வெளியாகியிருந்தது. இச்செய்தியைப் படித்தவுடன் டில்லியிலேயே அங்கிருந்து இயக்குநர்களைக் கலந்து ஒரு முடிவெடுத்து சென்னையில் இம்மருந்துகள் கொடுப்பதைத் தடுத்து நிறுத்துமாறு உத்திரவிடப்பட்டது. திரும்பியவுடன் இம் மருந்துகளின் மாதிரிகள் சென்னை பொது மருத்துவமனையில் இருக்கும் எயிட்ஸ் சர்வெயிலன்ஸ் சென்டருக்கு (Aids Surveillance Centre) அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. இதில் 'எயிட்ஸ்' வியாதிக்கான அறிகுறிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதை அதன் முடிவை உறுதி செய்து கொள்வதற்காக மேலும் வேலூர் மருத்துவ மனையில் உள்ள 'வெஸ்டேர்ன் பிளாட்' (Western Plot) பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. அங்கும் இவ்வுண்மை உறுதி செய்யப்பட்டது.

(பிற்பகல் 1-30)

இன்று, 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி இச் செய்தி டில்லியில் உள்ள இந்திய மருத்துவ கவுன்சிலுக்கும் (Indian Council of Medical Research) மத்திய அரசின் சுகாதாரத் துறையின் டைரக்டர் ஜெனரலுக்கும் (Director Gencial of Health Services) இந்திய அரசின் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி (Drug Controller of India) -க்கும் அனுப்பப்பட்டது.

இச்செய்தி தமிழகத்தில் உள்ள தனியார் மருத்துவ மனை களுக்கும் அனுப்பப்பட்டு இம்மருந்துகள் தடை செய்யப்பட் டுள்ளன. இதுவரை இம்மருந்து கொடுக்கப்பட்ட சுமார் 100 பேர்

[1989 பிப்ரவரி 26

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

களையும் பரிசோதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மக்களின் உயிரோடு விளையாடும் இக்கம்பெனிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்த சட்டமுன்வடிவு திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (26—2—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

7. ஆயத்தீர்வை செலுத்துதல் குறித்து உள் மற்றும் மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாளிட்ட 207-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகளின் அடிப்படை விலையினை நிர்ணயிக்கும் அதிகாரத்தினை மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் ஆணையருக்கு வழங்குவது குறித்து உள் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் நாளிட்ட 217-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1989 பிப்ரவரி 18]

9. திருநெல்வேலி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நான்கு சிறு பயணிகள் பேருந்துகளுக்கு விதிக்கக்கூடிய வரி மற்றும் மேல் வரியினைக் கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாளிட்ட 1341-ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. உள் துறையினால் வெளியிடப்பட்ட 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாளிட்ட II (2)/40/6063/76, மற்றும் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் நாளிட்ட II (2)/HO/3909/77 எண் அறிவிக்கைகளை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளிட்ட 2644-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

11. பொதுப் பணித் துறையின் சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் சில வாகனங்களுக்கு 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 31 ஆம் நாள் முடியவுள்ள காலவரைக்காக விதிக்கக்கூடிய வரி மற்றும் தண்டத் தீர்வையினைக் கைவிடுதல் குறித்து உள் (போ. 1) துறையின் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளிட்ட 3066-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு சட்டம் 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்—ஏதுமில்லை.

D
V211,31'N89
N19.3.2
144354

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & *Company*, Vellore (*North Arcot*) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. *Swaminathan* and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham *Stores, Booksellers, 9/31, Cross Cut* Road, *Coimbatore*-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.